# தமிழரசு


1-12-1982 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — கார்த்திகை 15

புரி மாவட்டச் சிறப்பி




நிலக்கொடை இயக்கத் தந்தை
வினோபா பாவே
தோற்றம் : 11-9-1895 மறைவு : 15-11-1982

தமிழரசு

# இரும்பு இதயத்தை இளகச் செய்த இனியர்



**வி**னோபா மகரிஷி அல்ல; முனி புங்கவர் அல்ல! எனவேதான், காட்டிலே சென்று ஊசிமுனை மீது நின்று தவம் கொண்டில்லை.

கால் கடுக்கக் கடுக்கக் காடு, மலை, வனம், வனாந்திரங்களைக் கடந்து 'ஏழைக்கு இதம் தேடுவேன்-இயலாதோருக்கு உதவி பெறுவேன்-இரும்பு இதயத்தையும் இளகச் செய்வேன்' என்று கூறிக்கொண்டு தொண்டாற்றுகிறார்.

ஏழையின் கண்ணீரைக் காண்கிறார்; பதறிப்போய் அந்தக் கூடாரத்தில் தங்காமல், கோல் கொண்டோர் செய்திட மறந்த காரியத்தைக் குணத்தால் சாதிக்க முயல்கிறார்.

**—பேரறிஞர் அண்ணா**

# நாட்டை மேம்படுத்திய நல்லார்



நமது நாட்டை மேம்படுத்துகிற முயற்சியில் வினோபா பாவே அவர்களின் வாழ்க்கையும் அவர் ஆற்றிய அருந்தொண்டுகளும் முதன்மை பெற வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுப் போராடிய இந்தத் தலைவர், பொருளாதார விடுதலைக்காகவும் பாடுபட்டார். இந்தியா எந்தக் கொள்கைகளை உயிருக்குயிராக நேசிக்கிறதோ அந்தக் கொள்கைகளுக்காக அவர் வாழ்ந்தார்.

மேதகு ஆளுநர்

**எஸ். எல். குரானா**

# இணையற்ற சமுதாயச் சிற்பி



''வினோபாவின் மறைவு, நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். வன்முறையற்ற_சமத்துவ சமுதாயத்தை, அன்பு, அறவழிகளில் உருவாக்க வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட தூயவர் வினோபாபாவே அவர்கள். அவரது மறைவு, காந்தியுக மாமேதையின் மறைவு ஆகும்.

''சுற்றுச் சூழலில் வன்முறையும், வெறியும் கோர நர்த்தனம் புரிவதைக் கண்டு, வினோபா பதறினார். அன்பு வழியில் மக்களை மாற்ற முடியும், எவரும் கெட்டவர் அல்ல, என்ற நம்பிக்கையோடு அவர் செயலில் இறங்கினார்.

''கால்கடுக்க நடந்து நாட்டை வலம் வந்து ஏழைகளின் நிலப்பசியைப்போக்க, இருப்பவர்களிடம் இருந்து பூமிதானம் பெற்றார். இந்த அமைதிப் புரட்சிக்கு ஈடான ஒன்று உலக வரலாற்றில் இருந்தது இல்லை.

''வினோபாவைச் சந்தித்து உரையாடிய, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, ''சர்க்காரின் துணை இன்றி சாந்தம், சீலம் எனும் அருங்குணத்தின் துணை கொண்டு மட்டுமே ஏழைகளுக்காக நிலம் பெற்ற வினோபா இந்த நூற்றாண்டின் இணையற்ற சமுதாயச் சிற்பி.''

**—மாண்புமிகு முதல்வர்**

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2013

மலர்: 13 இதழ்: 11 துந்துபி — கார்த்திகை 15

1-12-1982

# இதயத்தின் குரல்

## மாண்புமிகு முதல்வர்

## திரு எம்.ஜி.ஆர்

அஸ்திவாரம் உறுதியாக இருந்தால்தான் அதன்மீது கட்டப்படும் கட்டடம் உறுதியாக இருக்கும். அப்படித்தான் வங்கம்-தமிழகம் இரண்டும் காலங்காலமாக அன்பாலும், பாசத்தாலும் பிணைந்திருக்கின்றன. இந்த இணைப்பு - இதயங்களின் கலப்பு தொடர்ந்திருக்க வேண்டும். இந்த இணைப்பு மேம்போக்காக இல்லாமல் இதயத்தின் ஆழத்திலிருந்து எழுவதாக அமைதல் வேண்டும்.

இதயத்திலிருந்து எழுகிற எண்ணங்கள்தான் எப்பொழுதும் நிலைக்கும். பாரதியாரின் கவிதைகளும் நிலைப்பதற்கு அவைகள் இதயத்தின் குரலாக இருந்ததுதான் காரணம். ஆகவேதான் பாரதி, உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறான்.

மேற்குவங்க அரசின் பலமான அஸ்திவாரமும் அதன்மீது எழுப்பப்பட்டிருக்கிற தமிழக அரசின் அன்பளிப்பான பாரதி சிலையும் இரு மாநிலங்களின் இணைப்புகளாக இதய ஒற்றுமையைக் காட்டுகின்றன.

பாரதியார் தமது கருத்துக்களை ஒரு மதத்திற்காகச் சொல்லவில்லை; ஒரு மாநிலத்திற்காகச் சொல்லவில்லை; உலகத்திற்காகச் சொன்னார். உலகம் முழுவதற்குமாகச் சொன்னதால்தான் மகாகவி பாரதியாராக இங்கே வாழ்ந்தார். அவரது வாழ்க்கையில் அவர் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லியிருக்கிறார். குறிப்பாக அவர் சொன்னதை நான் இங்கே எடுத்துக் காட்ட வேண்டியது எனது பெரும் கடமை என எண்ணுகின்றேன். மனிதர்களுக்குள்ளேதான் ஜாதியைப் பற்றிச் சொல்லுகின்றார்கள். ஆனால் மிருகங்களைக்கூட ஜாதி வாரியாக நாம் பிரித்து விட்டோம் என்று அவர் குறிப்பிடுகின்றார். பார்ப்பனப் பாம்பு, பறப்பாம்பு என்று பாம்புகளில்கூட பிரிவினையை ஜாதியை ஏற்படுத்தி விட்டோம் என்று அவர் குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார் என்பதை எண்ணும்போதுதான் அந்தக் காலத்தில் இருந்த மக்கள் எவ்வளவு நம்பிக்கையோடு இருந்தார்கள்-அவர்கள் மத்தியில் சொல்லும் பொறுப்பினை அன்று பாரதியார் ஒருவரால் தான் பெற முடிந்தது என்பதை எண்ணும்போது அதுதான் மகாகவி பாரதியார் என நம்மால் பாராட்டப்பட வேண்டிய தகுதி உடையவராகிறார்.

மாதச் சம்பளம் பெற முடியாத, நடந்து போகக்கூடச் சக்தியற்ற, தையல் போடாத சட்டையைப் போட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருந்த ஒருவர் பணத்தைச் சம்பாதிக்கச் செல்லாமல், 'ஏதோ பாட்டை எழுதினோம். அதனால் புகழ் அடைந்தோம்' என்று அதைப்பற்றி மட்டும் கவலைப்படாமல், நாட்டைப் பற்றி, சமுதாயத்தைப்பற்றி அவர் அக்கறை காட்டினார், அதற்காக எழுதினார் என்றால் நாம் நினைத்து நினைத்து பாராட்டி அஞ்சலி செலுத்த வேண்டிய ஒருவராக பாரதியார் நம் முன் நின்று கொண்டிருக்கின்றார். எல்லா மதத்தினரும் அவரைக் கோபித்துக்கொண்டார்கள். எங்கும் அவருக்கு வேலை கிடையாது. கொடுக்கப்




பட்ட இடத்திலும் அதற்கு எச்சரிக்கையும் சம்பளக் குறைவும்தான் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டிஷ் ஆதிக்கம் அவரைத் துரத்திப் பாண்டிச்சேரிக்கு அனுப்பி வைத்தது. இவ்வளவுக்கும் இடையில்தான் புரட்சிகரமான கருத்துக்களை நாட்டில் பரப்பினார் என்பது, இரவீந்தர நாத தாகுர் அவர்கள் கவிதை எழுதும்போது பாராட்டினார்என்பதையும், 'வந்தே மாதரம்' கீதத்தை உருவாக்கியபோது அவர்தான் முதலில் அதை எழுதி மக்கள் மத்தியிலே தமிழகத்தில் பரப்பினார் என்பதையும் நான் எடுத்துச் சொன்னால் அதைக் கேட்கின்றவர்கள் அதிசயிக்க மாட்டார்கள். என்றாலும் தங்கள் உள்ளத்திலே கேட்காமல் இருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இன்றைய தினம் நாம் சொல்லுகிறோம் விதவையைத் திருமணம் செய்யலாம் என்று. அன்று பேசவே முடியாது. ஆனால் அன்றைய தினம் அவர் அதற்காகப் போராடினார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்று வாதாடினார். பெண்களை யாருக்கும் அடிமையாக்கக் கூடாது என்று அவர் சொன்னார். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் பட்டினி கிடந்தால்கூட இந்த உலகத்தையே அழிக்க வேண்டும் என்று சொன்ன ஒரே ஒருவர் பாரதியார் மட்டும்தான். அந்த குறிப்பிடத்தக்க ஒருவர், இந்தியா முழுமைக்கும் என்றும் சொந்தம் என்று சொன்னால், உலகத்திலே இருக்கின்றவர்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும் தெரிந்து கொள்ளட்டும். ஆனால் வங்காளத்திலே, வங்காளத் தலைநகரத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படும் என்று இன்று அறியும் போது, இந்தியா எந்த அளவிற்கு மாநிலத்திற்கு மாநிலம் தொடர்பு வைத்திருக்கிறது என்பதையும், அண்ணன், தம்பியாக இருக்கிறோம் என்பதையும் இங்கே மற்றவர்கள் சொன்னதை நான் அடையாள பூர்வமாக ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, தலைவணங்குகிறேன் என்று கூற விரும்புகின்றேன்.

சில ஆஸ்தீக நம்பிக்கையுள்ளவர்களுக்கு மழை வருவது ஒரு நல்ல அடையாளம் என்று சொல்வார்கள். அதிலும் வறட்சிப் பாகத்திலிருந்து வந்திருக்கின்ற நான் இங்கே மழை பொழிவதைப் பார்க்கும்போது பெருமகிழ்ச்சி அடையத் தவறமாட்டேன். இந்தப் பெயரை வைக்கும் போதே மழைத் தூற்றல் போடுகிறது என்றால் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் நாம் எவ்வளவு வளமாக வாழ முடியும் என்பதற்கு இதை அடையாளமாகக் கொள்ள முடியும் என்று கருதுகின்றேன்.

அவருடைய கொள்கையை நான்மீண்டும் வற்புறுத்துகிறேன். அந்தக் கொள்கையைப் பின்பற்றினால் அன்றி, இந்தியாவிற்கு விமோசனமில்லை என்பதைச் சொல்லி, இத்தகைய வாய்ப்பைத் தந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், குழுவினருக்கும் என் நன்றியைக் கூறி, 'வாழ்க பாரதி நாமம், அண்ணா நாமம்' என்று சொல்லி விடை பெறுகிறேன்.

**(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15-10-'82 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**



## ஒகேனக்கல் அருவியும் அதன் மின் உற்பத்தித் திறனும்

ஒகேனக்கல் அருவி 22 அடி உயரமுள்ளது. அதன் அதிகப்படியான உயரமே மின் உற்பத்தித் திறனுக்கு ஏற்றதாக இருக்கிறது. எனவே திட்டமிடும் பொறியாளர்களும் வல்லுநர்களும் மின் உற்பத்தி குறித்து எண்ணும்போது ஒகேனக்கல் அருவி, அவர்களின் கவனத்தை அதிகமாக ஈர்க்கிறது.

காவேரி, மற்றும் அதன் கிளை நதிகளின் மின் உற்பத்தித் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. மேகதாது (Goat's Leap) என்ற இடத்துக்கு அருகில் தமிழகத்திற்குள் காவேரி அடியெடுத்து வைக்கிறது. ஒகேனக்கல் அருவியின் அருகில் மேட்டூர் நீர்த்தேக்கம் வரை கருநாடகம்-தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களின் எல்லைக் கோடுகளை உருவாக்கியவாறு காவேரி பாய்கிறது. சிவசமுத்திரம் அதற்குக் கீழே உள்ள சிம்ஸ்புரம் ஆகிய இடங்களிலுள்ள அருவிகளும் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கிழக்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து வேகமாகச் சமவெளியில் இறங்குகிறபோது வழி நெடுக நீர் மின் உற்பத்திக்கு அதிக வாய்ப்புகளைக் காவேரி உருவாக்கித் தந்துள்ளது. மாநிலங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்துழைத்தால் மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ள வசதிகள் நிறைய இருக்கின்றன. தமிழகம், கருநாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களும் இணைந்து செயலாற்றினால் பாசனத்தைப் பாதிக்காமலே மின் உற்பத்தியை இரு மாநிலங்களும் ஏராளமாகப் பெருக்கிக் கொள்ள முடியும். கிடைக்கும் நீரைப் பயன்படுத்தி 450 மெ.வா. மின் திறனை உற்பத்தி செய்து அதன் மூலம் ஆண்டுக்கு 4,000 மில்லியன் யூனிட் மின் சக்தியைப் பெறமுடியும்.

முன்பக்க அட்டையில்:
**ஒகேனக்கல் அருவி**
பின்பக்க அட்டையில்:
முசுக்கொட்டைச் செடி
பட்டுப் புழு
ஒசூர் கால்நடைப் பண்ணையின் சிந்தி இனக் காளைகள்
ஒகேனக்கல் முதலைப் பண்ணை
வண்ணப் படங்கள்
எஸ். டி சத்யராஜ்



# நாளைய தலைமுறை நலம் பெற....

நவம்பர் 14

இந்தியப் பிரதமர் - மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள்! அவரது பிறந்த நாள், பல்லாண்டுகளாகக் குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு- குழந்தையர் வாழ்வில் ஒரு புதுமையைச் சேர்க்கும் நாளாக - அது உருவாக்கப்பட்டுள்ளது. ஆம். இந்நாள், கிராமக் குழந்தைகளுக்கு 'இலவசப் பற்பொடி' வழங்கப்பட்ட திருநாள் ஆகும்.

மாநில அளவில் இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத் துவக்க விழா, செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வேம்பாக்கம் அரசு கலைக் கல்லூரியில் 14—11—'82 அன்று நடைபெற்றது.

விழாவிற்குப் பொன்னேரி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். சக்கரபாணி அவர்கள் தலைமை தாங்கினார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. இராமச்சந்திரன், இ. ஆ. ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத்துறை நடத்தும் இத்திட்டத்தின் அறிக்கையை, பல் மருத்துவக் கல்லூரி முதல்வரும், இத்திட்டத்தின் பொறுப்பு அலுவலருமான டாக்டர் பி. பி. ராஜன் அவர்கள் படித்தார்.

இத்திட்டத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதாவது :

''இன்றைய தினம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியைத் துவக்கி வைப்பதில் பெருமை அடைகின்றேன். திருச்சி மாவட்ட ஆமூரில் நடைபெற்ற பல் சிகிச்சை முகாமில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய ஆலோசனையின் பேரில், இந்த இலவசப் பற்பொடி கிராமக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது.

''இந்த இலவசப் பற்பொடி 62 இலட்சத்து 10 ஆயிரத்து 409 குழந்தைகளுக்கு, 55,982 சத்துணவுத் திட்ட மையங்கள் மூலம் கொடுக்கப்படுகின்றது. பற்பொடி பொட்டலங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளில் வைக்கப்படும்; தரமான பற்பொடி விநியோகிக்கப் படுகின்றதா என்பதை சென்னைப் பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஆய்வு செய்யும். இந்தத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2 கோடியே 42 இலட்சம் செலவிடப்படும். இந்த ஆண்டு ரூ. 1 கோடியே 20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

''ஒவ்வொரு மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் இத்திட்டத்தைப் பல் மருத்துவர்கள் கண்காணிப்பார்கள். சென்னைப் பல் மருத்துவக் கல்லூரியில் காலையில் மட்டும் பல் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இனிமேல் 24 மணிநேரம்(அவசரச் சிகிச்சை) பல் சிகிச்சை செய்யப்படும். இன்றைய தினம் இங்கு நடைபெற்ற கண்காட்சி முகாமில் ஏறத்தாழ 5,000 பேருக்குப் பரிசோதனை செய்யப்பட்டது.''

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் கூறியதாவது:

''இரண்டு வயது முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகள் புதிய,சீரிய பழக்கத்தைக் கடைப்பிடிக்க இன்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக தமிழ் மாநிலத்தில், தமிழக முதல்வர் அவர்கள் முயற்சியினால் இத்திட்டம் துவக்கி வைக்கப்படுகின்றது. இந்த விழா விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் விழாவாகும். சலுகைகளைப் பெற வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட திட்டமல்ல இது. அடுத்த தலைமுறையைப் பற்றிய திட்டமாகும். உடல்நலமாக இருந்தால்தான் குழந்தைகள் நலமுடன் வாழ முடியும்.''



விழா இறுதியில், கவிஞர்சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு. கே. லட்சுமிகாந்தன் பாரதி இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
—மருது



# இலவச பற்பொடி வழங்கும் திட்டம்



சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும் என்பது தமிழ்ப் பழமொழியாகும். உடல் நலமாக இருந்தால்தான், உலகில் பல்வேறு சாதனைகளை, மனிதன் சாதிக்க முடியும். உடலிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் நோய்க்குப் பலியாவதைப்போல், வாயும் பற்களும் பல்வேறு நோய்களினால் தாக்கப்படுகின்றன. இந்நோய்கள் பல தொல்லைகளைக் கொடுப்பதோடு உடலின் பல்வேறு பாகங்களுக்கும் பரவி, உடல் உறுப்புக்களையும் பாதித்து உடல் நலனைக் கெடுக்கின்றன. எனவே, நலமான பற்கள் நல்லதோர் உடல் நலத்திற்கு முக்கியம் என்பது முற்றிலும் உண்மை. இதை நம் நாட்டு மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

## பற்களைத் துலக்கா விட்டால்...

1. உணவுப் பொருட்கள் பற்களின் இடுக்குகளில் தங்கி, கிருமிகளால் தாக்கப்பட்டு அமிலம் உண்டாகி பற்களில் சொத்தை உண்டாக ஏதுவாகிறது.

2. பொருட்களின் மேல் தூசி படிவது போல் பற்களின் மேல் உணவுப் பொருட்கள் படர்ந்து, ஒரு ''பற்படலம்'' ஏற்பட்டு வாயில் ஒரு வழவழப்புத் தன்மையைக் கொடுக்கிறது.

3. பற்படலத்தின் மேல் உமிழ்நீரில் உள்ள சுண்ணாம்புச் சத்துக்கள் படிந்து மஞ்சள், பச்சை வண்ணங்களில் பற்காறை தோன்றும். இப்பற்காறை வாயில் ஒரு சொரசொரப்புத் தன்மையைக் கொடுக்கிறது.

4. பற்காறை ஈறுகளைத் தாக்கும்போது, ஈறுகள் தடித்து இதமாகி இரத்தக் கசிவு வரும். எலும்பு அரித்துப் பற்கள் உறுதியிழந்து அசைந்து ஒவ்வொன்றாக விழத் தொடங்குகிறது.

4. தடித்த ஈறுகளில் கிருமிகள் தாக்கும் போது சீழ்பிடிக்கும். இது வாயில் ஒரு துர்நாற்றத்தை வரவழைப்பதோடு உண்ணும் உணவின் சுவையையும் கெடுக்கிறது. மேலும் இந்தச் சீழ் இரத்தத்துடன் கலந்து உடலின் பல பாகங்களுக்கும் சென்று இதயநோய், குடல்நோய், சிறுநீரகநோய், மூட்டுநோய் சரும நோய், கண்நோய் ஆகிய பல நோய்களை உண்டாக்குகிறது.

## பல் துலக்குதல்

பற்கள் நலமுடனும், பொலிவுடனும் விளங்க நாள்தோறும் பல் தேய்க்க வேண்டும். பற்களைத் துலக்க வழக்கமாகப் பல் துலக்கியோடு பற்பசையோ, பற்பொடியோ உபயோகிப்பது வழக்கம். அறிவியல் முறைப்படி தயாரிக்கப்பட்ட பற்பொடியை, விரல்களைப் பயன்படுத்தித் துலக்குவது பல் மருத்துவத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளில் ஒன்று. ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி'' என்ற பழமொழிக்கிணங்க, ஆலம் விழுதுகளையும், வேலம் குச்சிகளையும் முறைப்படுத்தித் தூய்மை செய்தும் பற்களைத் துலக்க உபயோகிக்கலாம்

## இராம மக்களின் பல் நலன்

பல குழந்தைகளுக்குப் பற்களைத் துலக்க வேண்டும் என்ற பழக்கமே தெரியவில்லை. இந்தக் குழந்தைகள் பலர் பல்வியாதிகளில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மாங்குச்சியையும், சவுக்குக் குச்சியையும் உபயோகித்துப் பல் துலக்குவதால் வாய் எரிச்சலோடு ரணங்களாலும் அவதிப்படுகிறார்கள்.

## சாம்பல் சீரழிக்கும்

இது எரிந்துபோன பொருள். எடுத்து எறிய வேண்டிய பொருள். ஆனால் இதைப் பல்துலக்க உபயோகப்படுத்தும் குழந்தைகள் ஏராளம். சாம்பலை வைத்துப் பல் துலக்குபவர்களுக்கு ஈறுகளில் அழற்சி ஏற்பட்டு இரத்தக் கசிவு தென்படும்.

அடுப்புக் கரியை அரைத்துப் பல்துலக்குகிறார்கள். அவர்களின் பற்களில் கரைபடிவதுடன் ஈறுகளும் பாதிக்கப்படுகின்றன. ஆற்று மணலை அள்ளித் துலக்குகிறார்கள்.செங்கல்லை உரசிப் பொடியாக்கிப் பல்துலக்குகிறார்கள். மண்ணையும் எடுத்துப் பல் துலக்குகிறார்கள். மூக்குப் பொடியும், காப்பிப்பொடியும் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

இவர்களுடைய பற்களின் இயற்கைப் பளபளப்பு மாறி, பற்கள் தேய்ந்து, கூராகி, சதையைக் குத்திப் புண்ணாக்கும். ஆறாமல் இருக்கும். இந்தப் புண் சில சமயங்களில் தீராத புற்று நோயைக் கூட உண்டாக்கும். மேலும் தேய்ந்த பற்களில் நரம்புகள் பாதிக்கப்பட்டு வலியைக் கொடுக்கும்.

கிராமங்களில் குறுகிய காலத்தில் பற்களை இழந்து உண்ணும் உணவை அரைக்க முடியாமல், சுவைகுறைந்து சொல்வளம் குறைந்து வாடுவோர்களின் எண்ணிக்கை ஏராளம்! வாயும் பற்களும் பாழ்பட்டு வாய்நோய்களில் வாடுகின்ற எண்ணற்ற கிராமத்துக் குழந்தைகளுக்கு, அவர்தம் வாய்நலம் காக்க ஒரு வாய்ப்பினைக் கொடுக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டதே இந்த இலவசப் பற்பொடி வழங்கும் திட்டம்.

## திட்டத்தின் பயன்கள்

அறியாமையின் காரணமாக பற்களைத் துலக்க உபயோகிக்கும் சாம்பல், செங்கற்பொடி, மணல் போன்ற பலவேறு பொருட்களுக்குப் பதிலாக அறிவியல் முறைப்படி தயாரித்த பற்பொடியால் பற்களைத் துலக்குவதன் மூலம் பற்களைப் பாதுகாத்துப் பல்வேறு நோய்கள் வராமல் செய்ய இத்திட்டம் வழி வகுக்கும்.


பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், உடல்நலம் பேணுவதற்கும் மீண்டும் பல் நோய்கள் வராமல் தடுக்கவும் இத்திட்டம் பெரிதும் பயன்படும்.

## இலவசப் பற்பொடி

தமிழக அரசு கிராமங்களில் வழங்கும் பற்பொடி மருத்துவ வல்லுநர்கள் ஆய்ந்து அறிவியல் முறைப்படி தயாரிக்கப்பட்டது. ஒரு பற்பொடி எத்தகைய குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென்று ''மருந்தியலில்'' வரையறுக்கப்பட்டுள்ளதோ, அந்தக் குணநலங்கள் அத்துணையும் பெற்ற பற்பொடியே இன்று இலவசமாக வழங்கப்படும் பற்பொடி. இந்தப்பற்பொடி, பற்களை மினுமினுப்பாக வைக்கும் அழகு சாதனப்பொருள் என நினைக்கக்கூடாது. பற்களிலும், ஈறுகளிலும் உள்ள நோய்களைப் போக்கவும் நோய்கள் வராமல் தடுக்கவும் கிருமிகளைத் தாக்கவும் வாய் நலம் பாதுகாக்கவும் உபயோகிக்கப்படும் ஒரு மருந்து போன்றதுதான் இந்த இலவசப் பற்பொடி. இந்தப் பற்பொடியை உருவாக்கத்தேர்ந்தெடுத்துள்ள மருந்துகள், பற்பசைகளைச் சுத்தம் செய்து, வெண்மைநிறம் கொடுக்கும். பற்களின் மேல் படியும் பற்படலம், உணவுப் பொருட்கள், காறைகள் இவைகளைக் கரைத்து, அகற்றி விடும். ஈறுகளிலும் பற்களிலும் பெருகி வளரும் கிருமிகளை அழித்து நோய்களைத் தடுக்கும். இதை உபயோகித்தால் வாயில் இரணம் இராது. எரிச்சல் ஏற்படாது. பற்கள் தேயாது.

## பற்பொடியை உபயோகிக்கும் முறை

பற்களைத் துலக்குவதும், வாய்நலம் காப்பதும், உடல் நலம் பேணுவதற்குச் சிறந்த முறை என்ற சீரிய கருத்தைக் கிராம மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இதன் முதல் கட்டமாக, ''முதலமைச்சரின் சத்துணவுத்திட்டத்தில்'' பங்குபெறும் சுமார் 50 லட்சம் குழந்தைகளுக்கு இலவசப்பற்பொடி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் 30 கிராம் பற்பொடி மாதம் ஒருமுறை கொடுக்கப்படுகிறது. வீட்டுக்குக் கொண்டுவரும் இப்பற்பொடியை குழந்தைகளின் பெற்றோர்கள் பத்திரப்படுத்தி, நாள்தோறும் காலையில் குறிப்பிட்ட அளவு எடுத்துக் கொடுத்து, விரல்களைப் பயன்படுத்தச் சொல்லி பற்களை வெளிப்புறமும் உட்புறமும் மெதுவாகத் துலக்கச் செய்ய வேண்டும். பற்களை துலக்கிய பின்பு ஈறுகளையும் இதமாக அழுத்தி விடச் சொல்ல வேண்டும். சுத்தமான நீரில் கொப்பளிக்கச் சொல்ல வேண்டும். பற்பொடியை அளவுக்கு மீறிக் கொடுக்கக் கூடாது. பற்பொடி சற்று இனிப்புடன் இருப்பதால் குழந்தைகள் தவறுதலாகச் சிறிது சாப்பிட்டுவிட்டாலும் பாதகமில்லை.





# ஈடற்ற பெருஞானி

— சௌந்தரா கைலாசம்

கருணையெனும் தெய்வதமே அவத ரித்துக்
காசினியில் வந்ததெனக் கருதும் வண்ணம்
ஒருமனிதர், உயர்மனிதர், உலக மக்கள்
உள்ளமெலாம் நிறைவாகி நல்வி ளக்கம்
தருமனிதர், தவமுனிவர் எனத்தி கழ்ந்த
தலைவரவர் வினோபா பாவே வாழ்ந்த
அருமையினைப் பெருமையினை எண்ணி யெண்ணி
அகங்குழைய விழிபெருக வணங்கு வோமே!

இரும்புமனம் கொண்டுலகில் கொடுமை செய்தே
எப்போதும் வாழ்ந்திருந்த கொள்ளைக் காரர்,
கரும்பனைய இவர்மொழியைக் கேட்ட தாலே
கல்லுருகும் தன்மையிலே உருகி, உள்ளம்
விரும்பியொரு நல்வழியைத் தேடிக் கொண்டார்
வேல்வாளை எறிந்துவிட்டுச் சரண டைந்தார்
அரும்பியது புதுமகிழ்ச்சி அவர்கள் வாழ்வில்
அண்ணலிவர் அருட்பார்வை பட்ட தாலே!

புண்மீது வேல்பாய்ந்து மேலும் மேலும்
புரையோடிப் போனஒரு வாழ்வை ஏற்று
மண்மீது மிகநொந்த மாந்தர் ஓங்க
மாளாத நற்பணிகள் செய்த பின்னர்
விண்மீது காந்தியுடன் தொண்டு செய்ய
விழைந்திட்ட வினோபா காட்டிச் சென்ற
உண்மைவழித் தடத்தினிலே நடந்து செல்வோம்!
உள்ளத்தில் பேரமைதி என்றும் கொள்வோம்!

# நிலக்கொடை இயக்கத் தந்தை!

உலக நாடுகளின் கவனத்தை ஒருசேரக் கவர்ந்த 'நிலக்கொடை இயக்கத்தின் தந்தை' ஆச்சார்யா வினோபா பாவே, இன்றைய மராத்திய மாநிலத்தின் ஒரு பகுதியாக விளங்கும் கொலாபா மாவட்டம் ககோடா கிராமத்தில் 1895-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் பிறந்தார்.

அண்ணல் காந்தியடிகளின் அன்பிற்கு உரியவரானார். சமூக சீர்திருத்த இயக்கத்தை மிகச் சிறந்த முறையில் நடத்தக் கூடிய தகுதி படைத்த தளபதியாக காந்தியடிகள் இவரைக் கருதினார்.

நாகபுரி கொடி சத்தியாக்கிரகம், ஜால்கான் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியது, தனி நபர் சத்தியாக்கிரகம், 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' ஆகியவற்றில் ஈடுபட்டு பல முறை கைது செய்யப்பட்டுப் பல ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார்.

இந்தியா விடுதலை பெற்ற பின், கிராமப் பொருளாதார மேம்பாட்டுப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். இந்தியா முழுவதிலும் சுமார் 40 ஆயிரம் மைல்கள் நடந்து 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பெருநிலக்கிழார்களிடமிருந்து தானமாகப் பெற்றார். பல்வேறு பூசல்கள் எழுந்ததால் இவ்வியக்கம் நிறுத்தப்பட்டது.


மத்தியப் பிரதேசத்தில் சம்பல் பள்ளத்தாக்கில் கொலைக் கருவிகளை ஏந்திக் கொள்ளையடித்த கொள்ளைக்காரர்களில் பலர், வினோபாவின் அருளுரை கேட்டு அவரிடம் தாமாகவே சரணடைந்த நிகழ்ச்சி உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

வினோபா தொடங்கிய மற்றொரு இயக்கம், பசுவதைத் தடுப்பு. இதற்காக அவர் உண்ணாவிரதம் இருந்தார். பசுவதையைத் தடை செய்யத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு ஆலோசனை கூறுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

மராத்திய மாநிலத்திலுள்ள பவுனார் ஆச்சிரமத்தில் 5-11-82-ல் வினோபாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மருந்தும் உணவும் சாப்பிட மறுத்தார். தண்ணீரும் அருந்தவில்லை.

'என் உடல் ஆத்மாவுடன் ஒத்துழைக்க மறுக்கிறது; அதனால் எனது உடலிலிருந்து உயிர் பிரிவதையே நான் விரும்புகிறேன்' என்று தனது சீடர்களிடம் கூறினார். கொஞ்சம் கொஞ்சமாக நினைவிழந்து, 15-11-1982 - இல் அமைதியாக இவ்வுலக வாழ்வைத் துறந்தார் அந்த உத்தமத் துறவி. சத்தியம், கொல்லாமை, அமைதி ஆகியவற்றின் மொத்த உருவமான வினோபாவின் மறைவு, ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

—'சாமி பழ'




தமிழ்நாட்டில். இது 7வது பெரிய மாவட்டமாகும்.

பரப்பளவு : 9643 சதுர கிலோ மீட்டர்.
காடுகள் : 3 லட்சத்து 17 ஆயிரம் எக்டேர். அதாவது 33 சதவிகிதம்.
சாகுபடி நிலங்கள் : 4 லட்சத்து 70 ஆயிரம் எக்டேர் அதாவது 43 சதவிகிதம்.
ஏனைய நிலங்கள் : 24 சதவிகிதம் எதற்கும் தகுதியற்ற குன்றுகள், ஓடைகள், புதர்கள்.
மக்கள் தொகை : 19.93 லட்சம்.
ஆடவர் :10.17 லட்சம்
பெண்டிர் : 9.76 இலட்சம்
சராசரி மழை அளவு : 850 மி. மீட்டர்.
மழை நாட்கள் : 23லிருந்து 75.

மாவட்டம் உருவானது : 2— 10— 1965.
மாவட்டத்தில் உள்ள
கோட்டங்கள் : 2. (தருமபுரி, ஓசூர்)
வட்டங்கள்: 8 (தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், அரூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை, பாலக்கோடு, பெண்ணாகரம்
நகராட்சிகள் : 2 (தருமபுரி, கிருஷ்ணகிரி)
ஊராட்சி ஒன்றியங்கள் : 16
ஊராட்சிகள் : 598
வருவாய் கிராமங்கள் : 553
குக்கிராமங்கள் : 1164.



# ஓசூர் தொழிற்பேட்டை

தருமபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் பெறும் மாவட்டமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு ராணிப்பேட்டையில் தொழில் பேட்டையை உருவாக்கிய பின்னர், தனது கவனத்தைத் தருமபுரி மாவட்டத்தின் பக்கம் செலுத்தியதால், இம் மாவட்டம் தொழில் வளத்தில் சிறப்புப் பெற்று வருகிறது. ஓசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இடங்களில் தொழிற் பேட்டைகளை அரசு உருவாக்கியுள்ளது. மாவட்டத்தில் நிறைந்து கிடக்கும் கச்சாப் பொருள்களும் மறைந்து கிடக்கும் கனிவளமும், பொதுவான இயற்கை வசதியும், அரசு வழங்கும் பண உதவிகள் போன்ற பலவகை ஊக்க முயற்சிகளும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.


## ஓசூர் தொழிற்பேட்டை

ஓசூரில் தொழிற்பேட்டை அமைக்கப் பெற்றதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பதட்ப நிலை இங்கு உண்டு.

ஏறக்குறைய 1153 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டையைத் தமிழக அரசின் சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளது. 55-க்கும் மேற்பட்ட பெரு ரகத் தொழில்களுக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது. 50.75 ஏக்கர் பரப்பில் 30 தொழிற்கூடங்களும் 41 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும் தவணை முறையில் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. மின்னியல் தொழில், மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்காக 12.34 ஏக்கரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப் பெற்றுள்ளது. இதில் 12 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பெற்றுத் தொழில்முனைவோருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர அபிவிருத்தி செய்யப்பட்ட 22 நிலங்கள், மின்னியல் சாதன உற்பத்திக்காக சிறு தொழில் முனைவோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழில் மையம் முழுதும் வளர்ச்சி பெற்றுவிட்டது. 95 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இடங்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. 50-க்கு மேற்பட்ட அலகுகள் உருவாக்கம் பெற்று வருகின்றன. ஏனையவை பல்வேறு கட்ட வளர்ச்சியை எய்தி இருக்கின்றன.

சாலை வசதிகள், தெரு விளக்குகள், பாதாளச் சாக்கடைகள், குடிநீர் விநியோகம், உபகரணக் கட்டடங்கள் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்காக ஏறக்குறைய ரூ.108 இலட்சம் ஆகிறது.



தொழில் மைய வளாகத்திற்குள் மட்டுமின்றி, வெளியிலும் தொழிற் கூடங்கள் உருவாகி வருகின்றன. அவையும் தொழில் வளர்ச்சியில் ஓசூரை ஓங்கச் செய்கின்றன.

## பெர்ரோ மேக்னட் நிறுவனம்

பெர்ரோ மேக்னட்ஸ் அண்டு அல்லய்டு தயாரிப்பு லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்கூடத்திற்குச் சென்றோம். மின் காந்தம் தயாரிக்கப்படும் அற்புதம் அங்கே நடைபெறுகிறது. ரூ. 108 லட்சம் மூலதனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது இந்த நிறுவனம்.

பெர்ரிக் ஆசிட் உடன் பேரியம் கார்பொரேட் மூலப்பொருள்கள் கலக்கப்பட்டு உருண்டைகள் ஆக்கப்படுகின்றன. அவை சுழல் உலையின் மூலமாக வறுக்கப்படுகின்றன. பின்னர் தண்ணீர் ஊற்றப்பட்டு 36 மணி நேரத்திற்கு நன்கு அரைக்கப்படுகின்றன. பின்னர் கட்டி ஆக்கப்பட்டு, தேவையான அச்சு வடிவம் மூலம் உருவாக்கப்பட்டு ஆல்பா பிரஸ் என்னும் 14 லட்ச ரூபாய் கொண்ட இயந்திரத்தின் மூலம் காந்தத் தன்மை ஏற்றப்படுகின்றன.

''இந்த மேக்னட் எங்கெங்கு பயன்படுத்தப் பெறுகிறது?'' என்ற கேள்வியை எழுப்பிய போது, அந்த நிறுவனத்தின் தொழில் நுணுக்க அலுவலர், ''எங்கெங்கு ஒலிபெருக்கிக் கருவிகள் உள்ளனவோ அங்கெல்லாம் நாங்கள் இருக்கிறோம்'' என்று குறிப்பிட்டார். அவர் கூறியதிலிருந்து ஒலி பெருக்கிக் கருவிகளில் பெர்ரிக் மேக்னட் பயன்படுத்தப் பெறுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

தொலைபேசிக் கருவியில் ஒலி கேட்பதற்கு இந்த மேக்னட்

**தமிழ்ப்பித்தன்**

தான் பயன்படுகிறது. ஸ்கூட்டரை இயக்குவதற்கும் இது தேவைப்படுகிறது. தொலைக்காட்சிப் பெட்டியிலும் இது பயன்படுத்தப் பெறுகிறது. கார்களின் முன்னே மழைக்காலத்தில் பயன்படுத்தப்படும் வைப்பரிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில்தான் இந்நிறுவனம் தயாரிப்பைத் தொடங்கியுள்ளது. இன்னும் முழு அளவில் உற்பத்தியை ஆரம்பிக்கவில்லை. என்றாலும் அதற்குள் இந்தத் தயாரிப்புக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. 45 மில்லி மீட்டர், 53 மில்லி மீட்டர், 90 மில்லி மீட்டர் விட்ட அளவுகளில் இது உருவாக்கப்படுகிறது.

பிலிப்ஸ், மர்பி, நெல்கோ, புஷ் ஆகிய வானொலிப் பெட்டி தயாரிப்பு நிறுவனங்கள் எல்லாம் தங்களுக்குத் தேவைப்படும் காந்தங்களுக்கு இந்த நிறுவனத்திடம் ஆர்டர் தந்திருக்கின்றன. இந்திய டெலிபோன் நிறுவனமும் தனது தேவைக்கு இந்த நிறுவனத்தை நாடியுள்ளது. விரைவில் அவற்றிற்கெல்லாம் விநியோகம் செய்ய இருக்கிறது இந்நிறுவனம். இதன் தயாரிப்புகளுக்கு உள் நாட்டில் நல்ல சந்தை கிடைத்துள்ளது.

கோவையில் உள்ள பிரிமியர் நிறுவனம் தனது தேவைக்காக இந்த நிறுவனத்தை நாடியுள்ளதுடன், தனக்குத் தேவைப்படும் காந்தத்தின் வடிவமைப்புக்குரிய வரைப்டத்தை வரைந்து அனுப்பியுள்ளது. அதன்படி - மூல அச்சு உருவாக்கப்பட்டு, காந்த இரும்புகள் இந்நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய மாதிரிகளை உருவாக்குவதில் ஒரு சிரமம் இருக்கிற்து. ஒரே ஒரு நிறுவனத்திற்காக ஒரு மாதிரியை உருவாக்குவதில் சிரமமும் செலவும் அதிகமாகலாம். அதனால், மற்றொரு, நிறுவனத்தை இந்த நிறுவனத்தின் மேலாளர் திரு துரைராஜ் தொடர்பு கொண்டு அதற்கும் இதே மாதிரியை ஏற்றுக்கொள்ளும்படி கருத்துத் தெரிவித்து அந்நிறுவனத்தின் தேவையையும் அறிந்து, இரண்டு நிறுவனங்களுக்கும் உதவும் வகையில் மேக்னட்டைத் தயாரித்து விநியோகம் செய்கின்றார்.



தொழிலாளர்கள், ஊழியர்கள் என்ற வகையில் 30 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்த பெர்ரிக் மேக்னட் நிறுவனம், தென்னகத்திலேயே மிகப் பெரிய நிறுவனம் என்பதுடன், எதிர்காலத்தில் மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முனைந்து நிற்கும் நிறுவனமாகவும் திகழ்கிறது.

## நிட்வெல் ஊசிகள் தயாரிப்பு நிறுவனம்

'ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்'

என்று பாரதியார் பாடிக் களித்திருக்கிறார். அவரது எண்ணத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறது 'நிட்வெல் ஊசி தயாரிப்பு நிறுவனம்'

'மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது' என்று சொல்லப்படுவதைப் போல, உற்பத்தி செய்யப்படுவது ஊசிதான் என்றாலும் அதன் புகழ் இமயம் வரை எட்டும் எனச் சொல்லலாம்.

பனியன்கள் தயாரிப்பதற்கு உதவும் பல்வேறு வகை ஊசிகளை இந்த நிறுவனம் தயாரிக்கிறது. தென்னிந்தியாவிலேயே இந்த வகைத் தொழிற்கூடம் இது ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 29 மில்லி மீட்டர் நீளத்திலிருந்து 120 மி. மீட்டர் நீளம் வரை இந்த ஊசிகள் தயாரிக்கப்படுகின்றன.

ஒசூரில் உள்ள இந்தத்தொழிற்கூடத்தில் உள்ள இயந்திரங்கள் அனைத்தும் ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை ஆகும். ஊசிகளைச் செய்வதற்குரிய மூலப் பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டவைதாம். இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எல். கே. எம். ஆதி பி.இ. ஜப்பான் நாட்டிற்குச் சென்று பயிற்சி பெற்று இந்தத் தொழிலின் நுட்பத்தைத் தெரிந்து வந்து, இதனை நடத்தி வருகிறார். ஜப்பானிலிருந்து தொழில் நுணுக்க விற்பன்னர்கள் இங்கு வந்து, பலருக்கும் பயிற்சி அளித்துள்ளனர்.

பல்வேறு வகையிலும், பல்வேறு அளவுகளிலும் ஊசிகள்



செய்யப்படுகின்றன. ஊசி என்று நாம் எளிதாக எண்ணிவிடுகிறோம் அது உருவாகி வெளி வருவதற்குள் 30 நிலைகள் ( Stages ) உள்ளன. அனைத்து நிலைகளிலும் இயந்திரங்கள்தான் பயன்படுத்தப் பெறுகின்றன. இரண்டொரு நிலைகளில் ஆட்களின் நேரடிப்பணி பயன்படுத்தப் பெறுகிறது.

இந்திய நாட்டில் பனியன் தொழில் வளர்ச்சி அடைந்து வருகிறது. இன்டர்லாக், ரிப், சாதா என்னும் பலவகைப் பனியன்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. அவற்றை உருவாக்குவதற்குப் பலவகை வடிவங்கள் உள்ள ஊசிகள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. சண்டிகாரில் உள்ள ஊசித் தயாரிப்பு நிறுவனம் ஒன்று, ஊசிகளைத் தயாரித்து விநியோகம் செய்து வருகிறது. நாட்டின் தேவை இந்த விஷயத்தில் சரிவரப்பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளது. தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி காணப்படுகிறது.

அதன் காரணமாக இந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள் ஒசூரில் உள்ள சிப்காட் தொழில் மையத்தை அணுகி, இந்தத் தொழிலுக்கு முறைப்படி விண்ணப்பித்தனர்.

இந்திய நாட்டுக்கு ஏற்ற வகையில், தற்போது 20 வகை ஊசிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டு ஒன்றிற்கு 10 புதிய வகையை அறிமுகம்செய்வதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம் மாதம் ஒன்றிற்கு, ரூபாய் 1.6 லட்சம் பெறுமானமுள்ள 2 லட்சம் ஊசிகளை உள்நாட்டு உபயோகத்திற்காக விநியோகித்து வருகிறது. அக்டோபர் (1982) திங்களில் ஆய்வு முறையாக ஸ்ரீலங்காவிற்குத் தனது சரக்குகளை ஏற்றுமதி செய்திருக்கிறது.

மாதம் ஒன்றிற்கு 8 இலட்சம் ஊசிகளைத் தயாரிப்பதற்கு உரிமம் பெற்றுள்ள இந்த நிறுவனம், தற்போது 25 சதவிகிதம் அளவுக்குத்தான் தயாரித்து வருகிறது.

5.7 ஏக்கர் பரப்பளவும், ரூ. 4.5 லட்ச முதலீடும் கொண்ட இந்தத் தொழிற்கூடத்தில் தொழிலாளர்கள், ஊழியர்கள் என 75 பேர் பணி புரிகின்றனர். முழு சிப்ட் என்றும், பகுதிநேர சிப்ட் என்றும் இங்கு வேலை நேரம் அமைந்துள்ளது.

இந்தத் தொழிற்கூடத்தில் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும் என்பது போல, சரியான உபகரணங்கள் இருந்தால்தான் உருவாக்கப்படும் பொருள்கள் சிறப்பாக அமையும் என்று கூறலாம். ஊசிகளைத் தயாரிப்பதற்குரிய அச்சு வடிவங்கள் இங்குள்ள தரமான இயந்திரம் ஒன்றின் மூலமாக உருவாக்கப்படுகின்றன. இங்கிருந்து தொடங்கப்படும் பணி - எல்லா நிலைகளிலும் மிகவும் கவனத்துடன் செய்யப்பட்டு, ஊசிகளின் தரத்திலும் அவற்றின் கூர்மையிலும் அக்கறை காட்டப்பெற்று ஆய்வு செய்யப் பெற்று - விநியோகத்திற்கு அனுப்பப்படுவதற்குரியனவற்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், பூர்த்தியாகிறது.

## பிரிமியர் மில்ஸ் லிமிடெட்

உடுமலைப் பேட்டை, கோவை ஆகிய இடங்களில் ஆலைகள் கொண்ட பிரிமியர் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் ஒசூரிலும் தனது ஆலை ஒன்றைத் துவக்கியுள்ளது. 31-1-1982ல் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்களால் இது திறந்து வைக்கப் பெற்றது. அன்றே தனது உற்பத்தியைத் தொடங்கி விட்டது.

இங்கு பருத்தி நூல், செயற்கை நூல் ஆகியவை நூற்கப்பட்டு, இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. தென்னிந்தியாவின் பல மாநிலங்களிலும் பம்பாயிலும் பிரிமியர் ஆலையின் நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது.

துணியில் அச்சிடுதல், சாயமிடல், முதலிய பல்வேறு செய்முறைகளும் இங்கே நடைபெறுகின்றன. இந்த ஆலையில் 100 சதவிகித பாலியஸ்டர் துணிகள், பாலியஸ்டர் விஸ்கோஸ் துணிகள், பாலியஸ்டர் பருத்தித் துணிகள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றிற்கு இந்திய அளவில் எல்லா மாநிலங்களிலும் வரவேற்பு உள்ளது. ஹங்கேரி போன்ற வெளிநாடுகளுக்கும் இந்த ஆலையின் துணி ஏற்றுமதி செய்யப் பெறுகிறது.

முதல் ஆண்டான 1981-82ல் ரூ. 35 கோடி மதிப்புள்ள துணிகளையும் ரூ. 20 கோடி மதிப்புள்ள நூல்களையும் இந்த ஆலை தயாரித்துள்ளது. தற்போது உற்பத்தி இன்னும் அதிகரித்து வருகிறது.

## நெக்டர் பழப்பொருள் தயாரிப்பு நிறுவனம்

ஒசூரில் பாகலூர்ப் பகுதியில் ஏறக்குறைய 8 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நெக்டர் பழப்பொருள் தயாரிப்பு நிறுவனம் - பழரசம், சாஸ் போன்ற இனிப்புப் பொருள்களைத் தயாரித்து வருகிறது. பெங்களூரைச் சேர்ந்த யுனைடட் பிவரீஸ் லிமிடெட் நிறுவனத்தைச்சேர்ந்த இது, பம்பாயில் உள்ள டிப்பி, மற்றும் கிசான் நிறுவனங்களின் தேவைகளை - அவர்களது தொழில் நுணுக்க உத்திப்படி தயாரித்தனுப்புகின்றது.

இனிப்புச் சோளக் கூழ், மாம்பழச்சாறு, தக்காளி சாஸ் ஆகியவை இங்கே தயாரிக்கப்படுகின்றன. இவை ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் இயங்கி வரும் இந்த நிறுவனத்தின் இனிப்புச் சோளக் கூழ் ஒரு சிறந்த தயாரிப்பாகும். இனிப்பும், சிறிது உப்பும் கலக்கப்பட்டு, டின்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் இது, எதிர்பாராமல் திடீரென்று வீட்டுக்கு வருகை புரியும் விருந்தினர்களுக்கு, சிறந்த சிற்றுண்டியாகப் பரிமாறுவதற்கு உகந்தது. இதிலே குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், இந்தச் சோள வகை மிகுந்த பால்பிடிப்புச் சத்துக் கொண்டது. இந்த நிறுவனத்திற்கென்றே தனியாக விளைச்சல் செய்யப்படுவது; வெள்ளை வெளேர் என்று காட்சி தரும் இந்தச் சோளத்தின் முத்துகள் தாறுமாறாக இல்லாமல், ஒரே சீராக, நேர் வரிசையினின்றும் பிசகாதபடி உள்ளன.

பழப்பொருள்களைத் தயாரிப்பது என்பது குறிப்பிட்ட பருவகாலப் பணியாகும். பழவிளைச்சல் உள்ள காலங்களில்தான் அவற்றைப் பதனிட முடியும். விளைச்சல் இல்லாத காலங்களில் அவற்றைச் சிப்பங்களாகக் கட்டுதல், விநியோகத்திற்கு அனுப்புதல் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன.



டின்களிலும், பாட்டில்களிலும் இவை அடைக்கப்படுகின்றன. பெரும்பாலும் பாட்டில்கள் பயன்படுத்தப்படுவதில்லை. அவை போக்குவரத்தில் உடைவதற்கு வாய்ப்பு இருப்பதால், பாட்டில்களும் உடைந்து உள்ளே இருக்கும் சரக்குகளும் வீணாகி விடுகின்றன. அதனால் டின்களே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த டின்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றில் பூசப்பட்டுள்ள ஒருவகைப் பூச்சு உள்ளிடு பொருள்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்கின்றது. ஆனால் சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்பது போல, 5 அல்லது ஆறு ரூபாய் பெறுமானமுள்ள ஒரு டின் உள்பொருளில், டின்னின் விலையே 3 ரூபாய் ஆகிவிடுகிறது.

நாள் ஒன்றிற்கு 15 ஆயிரம் பாட்டில் பொருள்களும் 5 ஆயிரம் டின் பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் சிறந்ததாகவே திகழ்கின்றன. 1982 ஜூன் திங்கள், 12, 13 ஆகிய நாட்களில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடத்திய மாம்பழக் கண்காட்சியின்போது, சிறந்த ஸ்குவாஸ் தயாரிப்புக்காக இந்த நிறுவனம் 2வது பரிசைப் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

''அமெரிக்க நாட்டில் பழப்பொருள் தொழில், தொழில் துறையில், 2வது பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறது; நமது நாட்டில் இதன் முக்கியத்துவம் மிகப் பலருக்குத் தெரிவதில்லை. மக்கள் எல்லாரும் இதன் அருமையையும் அவசியத்தையும் உணர்ந்தால் இந்தத் தொழில் சிறப்படையும். இன்னும் பலர் இந்தத் தொழிலில் முனைப்புடன் ஈடுபடுவார்கள்'' என்று கூறும் தயாரிப்பு மேலாளர் திரு ஆர். கிருஷ்ணன் அவர்களின் பேச்சும் சோளக் கூழ்போல, தக்காளி சாஸ் போல - மாம்பழ ஸ்குவாஷ் போல இனிப்பாக இருந்தது.




# தகடூரும் தருமபுரியும்

தமிழ்நாட்டின் வரலாற்றுக்குத் தனிப்பெருமை தேடித் தந்திருக்கிறது தகடூர். தகடூர் எங்கே இருக்கிறது என்ற ஐயம் ஏற்படுகிறதல்லவா? பண்டைய தகடூர்தான் இன்றைய தருமபுரி. இந்தப் புதுப்பெயர் 300 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றியிருக்கிறது.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் நெடுமான் அஞ்சி, தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவைக்கு நெல்லிக்கனி அளித்து அழியாப் புகழ் தேடிக்கொண்டான். அவன் அறச் செயல் பலவற்றை நிகழ்த்தியதால் அதாவது, தருமம் புரிந்ததால் பிற்காலத்தில் இவ்வூர் தருமபுரி என்று பெயர் பெற்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு எம். எஸ். சீனிவாசன் இ.ஆ.ப.



அதியனின் ஆட்சி பரவியிருந்த பகுதி தகடூர் நாடு என்று அழைக்கப் பெற்றது. அதில் 15-க்கு மேற்பட்ட உட்கிடைநாடுகள் அங்கம் பெற்றிருந்தன. தகடூர் நாடு இந்நாளில் தருமபுரி மாவட்டம் என்றழைக்கப் பெறுகிறது.

10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இது மக்கள் வாழ் பகுதியாக விளங்கியிருக்கிறது. 7000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் மனிதன் சிறுசிறு ஊர்களை உருவாக்கிக் கொண்டு, நிலத்தைப் பயிர் செய்து, வன விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கி வாழ்ந்திருக்கிறான். அகழ்வாய்வில் கிடைத்த பொருள்கள் அதற்குரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் தேவாரத்திலும் தகடூர் பற்றிய குறிப்பு வருகிறது. அது வருமாறு:

வீழக் காலனை கால்கொடு
பாய்ந்த விலாங்காலன்
கூழை ஏறுகந்தான்
இடம் கொண்டதும் கோவலூர்
தாழையூர் தகடூர்
தக்களூர் தருமபுரம்
வாழை காய்க்கு
மருகல் நாட்டு மருகலே'

**அ. மருதவிநாயகம்**

அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்னோர்தம் பெருமையை அசோகப் பேரரசரும் உணர்ந்திருந்தார் எனத் தெரிகிறது! கரூரைத் தலைநகராகக்கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன் அதியனுடன் போர்தொடுத்தான். அப்போரில் அதியன் வீர மரணம் எய்தினான். அதன் விளைவாக உயிரைப் பிடித்திழுக்கும் கையறு நிலைப் பாடல்கள் சிலவற்றை ஔவை மூதாட்டி பாடுவதற்கு வழி வகுத்தான்.

சேரமன்னருக்குப் பின்னர், பாணர், பல்லவர், கங்கர், நுளம்பர், வாணர், கொங்கணி, பிருதி கொங்கணி, சோழர், ஹொய்சாளர், போசாளர், நாயக்கர் மைசூர் நாயக்கர், முஸ்லீம்கள், ஆங்கிலேயர்கள் என ஒருவர் பின் ஒருவராகத் தகடூரை ஆட்சி செய்திருக்கின்றனர்.

கி. பி. 1688-ல் மைசூர் அரசனான சிக்கதேவராயரால் கைப்பற்றப்பட்ட தருமபுரி 1768 வரை மைசூர் ஆட்சியின் கீழ் இருந்தது. 1768-ல் பிரிட்டிஷ் கர்னல் உட், படை எடுத்து, தருமபுரியைக் கைப்பற்றி ஆங்கில ஆட்சியில் இணைத்தார். பின்னர் அது ஆங்கில அதிகாரிகளால் சேலம் மாவட்டத்துடன் இணைக்கப்பெற்றது.

ஆங்கிலேயர்கள் உருவாக்கிய கலெக்டரின் நேர் பார்வையில்

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 26-8-1967ல் திறந்து வைக்கப் பெற்றது



வந்தது. இந்தியத் திருநாடு விடுதலை பெற்று குடியரசாக மலர்ந்த பின்னர், மக்களே மன்னர்களாகி-ஜன நாயக முறையில் ஆட்சி செய்யத் துவங்கவே - சேலம் மாவட்டத்துடன் இணைந்திருந்த தருமபுரியும் அவ்வாய்ப்பைப் பெற்றது.

சேலம் மாவட்டத்துடன் இணைந்திருந்த காலத்தில், மாவட்ட ஆட்சியாளர் நேரடிப் பார்வையிடுவதற்கு முடியாத வகையில் மாவட்டத்தின் பரப்பளவு அதிகமாக இருந்ததால், நிருவாகச் சிரமத்தைக் குறைப்பதற்காக, தருமபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டது. 1965 அக்டோபர் இரண்டாம் நாளன்று அது செயல்முறைப்படுத்தப்பட்டது. என்றாலும் தருமபுரி மாவட்டத்தின் நிருவாகப் பணிகள் சேலத்தில் இருந்தவாறு தான் செய்யப்பட்டு வந்தன. 1967 ஆம் ஆண்டு தருமபுரி நகரத்தில், மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகம் அறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது திரு எம். எஸ். சீனிவாசன் இ. ஆ. ப. அவர்கள் தருமபுரி மாவட்டத்தின் ஆட்சித் தலைவராகப் பணியாற்றி வருகிறார். மாவட்ட நீதிபதியாகவும் அவர் இருந்து வருகிறார். அவரது தலைமையில் பல சிறப்புத் திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டம் பிரிக்கப்பட்ட காலத்தில் கிருஷ்ணகிரி, அரூர், ஓசூர், தருமபுரி ஆகிய நான்கு வட்டங்கள்தான் இருந்தன. பின்னர் 1970-ல் ஊத்தங்கரை, தேன்கனிக் கோட்டை ஆகிய வட்டங்களும், 1976-ல் பாலக்கோடு வட்டமும், 1979-ல் பெண்ணாகரம் வட்டமும் உருவாகின. தற்போது 8 வட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ளன. மாவட்டத்தில் 19.93 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இதில் நகர் புறத்தில் 1,43,941 பேரும், கிராமப்புறங்களில் 15,33,834 பேரும் வாழ்கிறார்கள். இம்மாவட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 4.99 இலட்சம் ஆகும். மொத்த மக்கள் தொகையில் 2,27,825 பேர் தாழ்த்தப்பட்டோரும் சிட்டிலிங்கி, சித்தேரி பகுதிகளில் மலைவாழுநர் 40,125 பேரும் வாழ்கிறார்கள்.

இங்கு பெய்யும் மழையின் அளவு 844.5 மி. மீட்டர் ஆகும். மழைவளம் மிகவும் குன்றிய பகுதியாக இம்மாவட்டம் இருப்பதால் வறண்ட பகுதியை மாற்றியமைக்க பல வளர்ச்சிப்பணிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஓசூர், தருமபுரி ஆகிய கோட்டங்களும், 8 வட்டங்களும், 47 ரெவின்யூ பிர்க்காக்களும், 1106 வருவாய்க் கிராமங்களும் 16 ஊராட்சி ஒன்றியங்களும் 580 ஊராட்சி மன்றங்களும் 21 பேரூராட்சிகளும், 2 நகராட்சிகளும் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் மாவட்ட ஆட்சியாளர் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதுடன் பல்வேறு இடங்களுக்கு நேரடியாகச் சென்று, உரியபணிகள், உரிய விதத்தில் நிறைவேற்றப் பெறுகின்றனவா என்று சோதனையிடவும் செய்கிறார். இத்தகைய கடமை உணர்வுகளின் விளைவால் மாவட்டம் நாள்தோறும் வளர்ச்சி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

**தருமபுரி மாவட்ட செய்தி - மக்கள் தொடர்புத்துறை அலுவலகம் இரவு 6-30 மணி முதல் 8-30 மணி வரை, பொதுமக்கள் செய்தித் தாள்களைப் படிப்பதற்குரிய படிப்பகமாகத திகழ்கிறது.**



# தழைத்தோங்கும் தருமபுரி

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்காக வறட்சிக்கு இலக்காகும் பணித்திட்டம், கடந்த 10 ஆண்டுகளாய்ச் செயல்படுத்தப்பட்டு நீர்ப்பாசனம், வேளாண்மை, பட்டுவளர்ப்பு, பால்வளம், தோட்டக்கலை, வாழ்வில் நலிவுற்றோர் மேம்பாடு, வன வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் திட்டங்கள் விரைந்து செயல்பட்டு வருகின்றன.

### நீர்ப்பாசனம்

வறண்ட நிலைமையைப் போக்கி நீர் வளத்தைப் பெருக்க 197 நீர்த்தேக்கத்திட்ட வேலைகள் ரூ. 3 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. 250 ஏரிகள் ரூ. 1 கோடி செலவில் பராமரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 12,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து பாசன வசதியை உருவாக்கும் பொருட்டு ஆழ்துளை போடும் கருவிகள் வாங்கப்பட்டு, கிணறுகள் தோண்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கென்று நிலநீர் ஆய்வுக்கோட்டம் உருவாக்கப் பட்டுச்செயல்பட்டு வருகிறது.

10 முதல் 15 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் சமுதாயக் கிணறுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுகாறும் 40 சமுதாயக் கிணறுகள் ரூ. 40 இலட்சம் செலவில் உருவாக்கப் பட்டுள்ளன.

கிணறுகளில் நீர்ஊற்று மிகுதியாகச் சுரக்கும் வகையில் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 35 இலட்சம் ரூபாய் செலவில் 175 கசிவு நீர்க்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊத்தங்கரை வட்டத்தில் பாம்பாறு அணைத்திட்டம் ரூ. 248 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

அரூர் வட்டத்தில் வாணி ஆற்றின் குறுக்கே முள்ளிக்காடு என்னுமிடத்தில் ரூ. 950 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு அணை உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 12,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

ஓசூர் வட்டத்தின் கெலவரப் பள்ளி என்ற இடத்தில் ரூ. 650 இலட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கத்திட்டம் உருவாக்கப் பட்டு வருகிறது. இதன் மூலம் 12,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

பாலக்கோடு வட்டத்தில் தும்பலஹள்ளி அணைத்திட்டம் ரூ. 113 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

தொப்பையாற்றில் ரூ. 3.5 கோடி செலவிலும், சச்சம்பாடியில் ரூ. 3.30 கோடி செலவிலும் எர்ரப்பட்டியில் ரூ. 1.75 கோடி செலவிலும் நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 12,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இன்னும் பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன.



கிருஷ்ணகிரி அணைத்திட்டமும் சின்னாறு அணைத்திட்டமும் ஏற்கெனவே நிறைவேறிய திட்டங்கள். இதன் மூலம் 10,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது.

### வேளாண்மை

நெல், கரும்பு, பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, மற்றும் புன்செய் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. நெல் 1.5 இலட்சம் ஏக்கரிலும், கரும்பு 15,000 ஏக்கரிலும், பருத்தி 7,500 ஏக்கரிலும், மஞ்சள் 5,000 ஏக்கர் பரப்பிலும் புஞ்செய்ப்பயிர்கள் 4 இலட்சம் ஏக்கர் பரப்பிலும், நிலக்கடலை 1,25,000 ஏக்கர் பரப்பிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

தீவிர சாகுபடித் திட்டத்தை விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டு இதுகாறும் 5,000 செயல்விளக்கப் பண்ணைகளும் 150 பெருவிளக்கப்பண்ணைகளும் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. இதற்காகத் தருமபுரியில் விவசாயப்பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது. இதுகாறும் 10,000 விவசாயிகளுக்கு வேளாண்மைத் திட்டங்கள் குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள், மிகச்சிறு விவசாயிகள் 25,000 பேருக்கு விதை, உரம், விவசாயக்கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்து, விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான். உழவு மாடுகள், கறவை மாடுகள், வண்டிகள் வாங்க ரூ. 5 கோடி கடனும் ரூ.125 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி வட்டத்தில் மகாராஜா கடையில் ரூபாய் 13 இலட்சம் செலவிலும், ஊத்தங்கரை வட்டத்தில் கோவிந்தாபுரத்தில் ரூ. 98 இலட்சம் செலவிலும் விவசாய மேம்பாட்டுத் திட்டத்திற்காக நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாப்பாரப்பட்டியில் ஒரு விதைப்பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது. பையூரில் விவசாயப் பல்கலைக் கழகப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்புடைய பயிர் வித்துக்கள் கண்டறியப் பட்டு அறிமுகம் செய்யப்படுகின்றன.

**சாலை வசதி:**

கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகளை உருவாக்க ரூ. 46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பெங்களூர் - சேலம் தேசிய நெடுஞ்சாலை ஒன்பது கோடி ரூபாய் செலவில் உருவாக்கப் பட்டு வருகிறது.

**போக்குவரத்து:**

கிராமப்புறத்தை நகரத்தோடு இணைக்கிற வகையில் பேருந்து களும், நகரப் பேருந்துகளும், மினி பஸ்ஸுகளும், வழித்தடங் களில் புதியதாக விடப்பட்டு வருகின்றன. 50 நகரப் பேருந்து களும், 25 மினி பஸ்ஸுகளும், 60 பேருந்துகளும் புதிய வழித் தடங்களில் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் 5 இலட்சம் பேர் பயனடைகிறார்கள்.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மேம்பாட்டிற்காக இத்திட்டம் 10 ஊராட்சி ஒன்றி யங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 175 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30,000 விவசாயிகள் பயனடைந்திருக் கிறார்கள். கடந்த இரண்டு திங்களில் மீதமுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற் காக ரூ. 30 இலட்சம் மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம்:**

நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி வட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுகாறும் 5,000 பேருக்கு நிலஉடைமைப் பதிவேடுகள் தயாரித்தளிக்கப் பட்டுள்ளன.

**தன்னிறைவுத் திட்டப்பணிகள்:**

பென்னாகரம், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஓசூர், தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங் களில் தன்னிறைவுத் திட்டத் தின் கீழ் பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல், அரிசனக் காலனி யிலிருந்து புதை குழிக்குப்பாதை அமைத்தல், கல்பாலம் கட்டு தல், கிராமப்புற மருந்தகம், தாய்சேய்நல விடுதி அமைத்தல், சாலை அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின் றன. நடப்பாண்டில் இப்பணிக் காக ரூ. 90 இலட்சம் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



## ஓசூரில் 'லெப்ராஸ்கோபி' சிகிச்சை முகாம்!

தருமபுரி மாவட்டத்தில் முதன் முதலில் ''லெப்ராஸ்கோபி'' கருத்தடைச் சிகிச்சைமுறை ஓசூர் கோட்டத்தில் 1982 அக்டோபர் 18, 19, 21 ஆகிய நாட்களில் நடைபெற்றது. பெங்களூர் டாக்டர் திருமதி மாலதி ராவ், டாக்டர் ஷெட்டி ஆகியோர்களின் தலைமையில் பல டாக்டர்கள் பங்கு கொண்டு இந்தச் சிகிச்சையைச் செய்தனர். திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர்களும் உதவி செய்தனர்.

நிரந்தரக் கருத்தடை செய்துகொள்வ தற்குப் படித்த பெண்கள் கூட அச்சப்படுவதை யும் தயங்குவதையும் காண்கிறோம். ஆனால் லெப்ராஸ்கோபி சிகிச்சை முறைக்கு, படித்த மகளிரும் படிக்காத கிராமப்புற மகளிரும் பேரவா வுடன் அணி திரண்டு வந்திருக்கிறார்கள் என் னும் உண்மை வியப்பளிப்பதாக உள்ளது. மூன்று நாள் முகாம்களிலும் மொத்தம் 573 பெண்கள் இந்தச் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். அதுமட்டு மல்ல, மூன்றாம் நாளன்று மகளிர் பலர், சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச்செல்ல நேர்ந்துவிட்டது. சிகிச்சை பெற வாய்ப்பில்லாது போய்விட்டதே என்பதை எண்ணிச்சில பெண்கள் கவலையடைந் தார்கள்; பலர், கண்ணீர் சிந்திவிட்டார்கள்.

3 நிமிடங்களுக்குள் முடிவடையும் சிகிச்சை; முடிந்த மூன்று மணி நேரத்தில் எழுந்து நடக்க லாம் என்னும் உண்மைகள், கிராமப்புற மகளிரின் மத்தியில், தக்க முறையில் எடுத்துச் சொல்லப் பட்டதன் காரணத்தால்தான், பெண்கள் அச்ச மின்றி இந்தச் சிகிச்சை முறையை மேற்கொள்ள வந்தனர். அத்துடன் முதல் நாளில் சிகிச்சை பெற்ற மகளிர், தமது அனுபவத்தை மற்றப் பெண்களுக்கு எடுத்துரைத்ததும் ஆர்வ அலை உருவாவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

TAMIN

வெளிநாடு சென்று அந்நியச் செலாவணி ஈட்டுகிறது தமிழ் நாடு கனிம நிறுவனத்தின் கரும்பாறைகள்,

உலகப் புகழ்பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் இதர உயர்வகைக் கனிமங்கள்:—

| | |
|---|---|
| சுண்ணாம்புக்கல் | கெமிகல் கிரேடு + 90% Ca Co3 |
| வெங்கக்கல் (குவார்ட்ஸ்) | + 99.6% Sio2 |
| பெல்ட்ஸ்பார் | + 12% K20 |
| ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது. |
| வெர்மிகுலைட் (மைக்கா) | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| சிலிகா மணல் | + 99.0% Sio2 |
| வெப்பந்தாங்கும் களிமண் | ரிப்ராக்டரி கிரேடு |

*தேவைக்கு அணுகவேண்டிய முகவரி:*

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
**TWAD** ஹவுஸ், **31**, காமராசர் சாலை,
தபால்பெட்டி எண். **2961**
சேப்பாக்கம்,
சென்னை-**600 005.**

தொலைபேசி எண்: **848932** தந்தி: **MINESALITE**

DIPR/1841/82-88/AAB



# தருமபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி

தமிழ் மூதாட்டி ஔவையாரும், கொடை வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சியும், மூதறிஞர் இராஜாஜியும், தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவாவும் வாழ்ந்து தமிழ்மணம் பரப்பிய தகடூர் எனப் புகழ் பெற்ற தருமபுரி மாவட்டம், தொழில் துறையில் மட்டும் ஏனோ மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்து வந்துள்ளது. தொழில் முன்னேற்றத்தில் இந்த மந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம் ஒன்றா? இரண்டா? பெரிய நீர்த்தேக்கங்கள் இல்லாமை, தொழில் துவங்கப்போதுமான சூழ்நிலை இல்லாமை, இயற்கை வளங்களைக் கண்டறியாமை, அடிக்கடி வறட்சிநிலை ஏற்பட்டமை, தேவையான மூலப் பொருட்கள் கிட்டாமை ஆகியவைதான் தொழில் மந்தம் ஏற்பட்டதற்குரிய முக்கிய காரணங்கள். காவிரியும், தென்பெண்ணையும் களிநடம் புரிந்து பாய்ந்தோடினாலும் இம்மாவட்டம் வான் பார்த்த பூமியாகவே உள்ளது.

எனவே, தொழில் துறையில் ஏனைய மாவட்டங்களோடு போட்டி போடவும், கிராமப்புற மக்களிடையே நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினைக் களையும் பொருட்டும், தமிழக அரசு இம்மாவட்டத்தை மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்துப் பலவிதமான சலுகைகளையும் உதவிகளையும் அறிவித்தது. இதன் பயனாக தொழில் துவங்க ஆர்வமுடைய – ஆனால் பொருள் வசதியற்ற மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுச் செயல்பட்டும் வருகிறது.

அரசின் இம்முயற்சியைச் செயலாக்கும் முகமாக 1978 ஜூன் திங்கள் 12ஆம் நாள் முதல் துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிற இம்மாவட்டத் தொழில் மையம், சீரிய முறையில் பணியாற்ற ஆர்வமுடைய தொழில் முனைவர்களைக் கண்டறிந்து தக்க உதவிகளைச் செய்து, முன்னேற்றப் பாதையில் இம்மாவட்டத்தை நடத்திச் செல்கிறது. மாவட்டத் தொழில் மையம் சிறுதொழில் முனைவர்களுக்கு ஆற்றிவரும் பணிகள் வருமாறு :

இலாபகரமாகச் செயல்படக் கூடிய தொழில் திட்டங்களை வகுத்தல், தேவைப்படும் கச்சாப் பொருட்களின் வளம் காணுதல், தொழில் முனைவர்களின் செயல் திறனை மதிப்பிடுதல்.

ஆர்வமுடைய சிறுதொழில் முனைவர்களைத் தொழில் துவங்க ஊக்குவித்தல்.

தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல், உதவியளித்தல்.

தொழில் துவங்கக் கடன் வசதி பெற உதவுதல்.

கிராமிய தொழில் திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல்.

நிலம், தொழிற்கூடம், இயந்திரம் மற்றும் தளவாடங்கள் வாங்கக் கடன் உதவி பெற உதவுதல்.

மத்திய அரசின் மானியத் தொகையைப் பெற உதவுதல்.

சீர்திருத்தப்பட்ட மனைகள், தொழிற்கூடங்கள் அமைத்துக் கொடுத்தல்.

கைவினைஞர்களுக்குச் சிறு தொழில் கூடங்கள் அமைத்துக் கொடுத்தல்.

நடைமுறை மூலதனத்திற்கு உதவி செய்தல்.

தொழில் நடைமுறைகள் பற்றிப் பயிற்சி அளித்தல்.

தொழில் துவங்கப் பல்வேறு அரசுத்துறைகளிடமிருந்து உரிமங்கள் பெற உதவுதல்.

அரிய மூலப் பொருட்களை ஆராய்ந்து நியாயமான முறையில் பங்கீடு செய்தல்.

இறக்குமதி உரிமம் பெறச் சான்றிதழ் வழங்குதல்.

சிறு தொழில் பதிவுசெய்தல்.

கைவினைத்திறன் தொழில்கள் பதிவு செய்தல்.

அரசு வழங்கும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் பெற உதவுதல்.

உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனை வாய்ப்புக்கு உதவுதல்.

தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பரிந்துரைத்தல்- செயல்படுத்துதல்.

இம் மாவட்டம் ஓசூரில் தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்றக்கழகம் ( Small Industries Promotion Corporation) நடுத்தர மற்றும் பெருந்தொழில்களின் வளர்ச்சிக்காக ஒரு தொழில் பேட்டையை நிறுவியதன் பயனாக சுமார் 30க்கும் மேற்பட்ட நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள் அங்கு தோன்றியுள்ளன. எனினும் சிறுதொழிலில் 1978 வரை போதிய வளர்ச்சி இன்றியே இருந்தது. தற்போது மாநில, மத்திய அரசுகள் அளித்து வரும் உதவிகளாலும், இம்மாவட்டத்தொழில் மையத்தின் முயற்சியாலும் 200க்கும் அதிகமான சிறு தொழில்கள் ஓசூரில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், இம்மாவட்டத்தைத் தொழில்முறையில் முன்னேற்றவும், கிராமப்புற மக்களிடையே நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்கிடவும், இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற விலைப் பொருட்களான நெல், சோளம், ராகி, நிலக்கடலை, கரும்பு, குச்சிக் கிழங்கு மற்றும் வனப்பொருட்களான மூங்கில், சந்தனமரம், யூகலிப்டஸ் மற்றும் கனிப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழில்களை அமைத்தல் மிகவும் அவசியமாகும். இதற்குரிய எல்லா முயற்சிகளும் இம் மாவட்டத் தொழில் மையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> **உழவுக்கு உதவும் பசுக்கள்**
>
> **உழவுக்குப் பசுமாடுகள் இந்த மாவட்டத்தில் பயன்படுத்தப் பெறுகின்றன. அரிசி, பருப்பு போன்ற உணவுப்பொருள்கள் கழுதைகள் மீது பொதிகளாக ஏற்றி அனுப்பப்படுகின்றன.**

**மாவட்டத் தொழில் மையத்தின் சாதனைகள்:**

தொழில் மையம் அமைக்கப்பட்டபின் (30.9.1982 முடிய) இம்மாவட்டத்தின் சாதனைகள் பின்வருமாறு:

தருமபுரி மாவட்டத் தொழில் மையம் சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழிலின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அமைக்கப் பெற்றது. இந்தத்தொழில் மையம்பொது மேலாளரின் தலைமையில் இரண்டு மேலாளர்களையும் மற்றும் இதர அலுவலர்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

இம்மாவட்டத் தொழில் மையம் அமைக்கப்பட்ட பின்னால் சிறு தொழில்கள் மற்றும் சின்னஞ்சிறு தொழில்களின் வளர்ச்சியில் தேவையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**சிறுதொழில் பதிவு:**

இம்மாவட்டத் தொழில் மையம் அமைவதற்குமுன்னால் 449 சிறு தொழில்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுச் செயல்பட்டு வந்தன. ஆனால் தற்போது சிறுதொழில்களின் எண்ணிக்கை 1178 ஆக உயர்ந்துள்ளது. 4 ஆண்டுகளில் சுமார் 150·/. உயர்வினை எட்டியுள்ளது.

1978 ஜூன் திங்களிலிருந்து 1979 மார்ச் வரை 71 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பெற்று 710 பேர் வேலை வாய்ப்புப் பெற்றனர். 1979-80ல் 142 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பெற்று, 1016 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர். 1980-81ல் 181 சிறு தொழில்கள் பதிவாகின; 1810 பேர் வேலை பெற்றனர். 1981-'82ல் பதிவாகிய 264 சிறு தொழில்களின் மூலம் 2432 பேர் வேலை வாய்ப்புப் பெற்றனர். 1982 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 71 சிறு தொழில்கள் பதிவாகி, 490 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இவை தவிர 4200 புதிய தொழில் முனைவர்களைக் கண்டறிந்து தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்படவுள்ளன.

**சிறுதொழில்கள் அமைக்க உரிமங்கள் பெறுதல்:**

சிறுதொழில்கள் அமைப்பதிலுள்ள சிரமங்கள் யாதெ




தொழில் முனைவோர் முன்னேற்றக் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம். எஸ். சீனிவாசன் இ.ஆ.ப. அவர்கள் உரையாற்றுகிறார்.

னில் பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து உரிமங்கள் பெறுவதாகும். இதுவரை 1965 சிறு தொழில்களுக்குப் பொது சுகாதாரத் துறை, நகர் மற்றும் கிராமிய திட்டத்துறை, தொழில்சாலை ஆய்வாளர் மற்றும் ஊராட்சி மன்றங்கள் முதலியவற்றிடமிருந்து சிறு தொழில் அமைப்பதற்கு உரிமங்கள் பெற்று உதவியுள்ளது இந்தத் தொழில் மையம்.

நிதி உதவி:

இம்மாவட்டத் தொழில் மையம் 1978ஆம் ஆண்டுமுதல் 1982 செப்டம்பர் முடிய 706 சிறு தொழில்களுக்கு ரூபாய் 322.82 லட்சம் மதிப்புடைய நிதி வசதியினைப் பெற்றுத் தந்துள்ளது.

இம்மாவட்டத் தொழில் மையம், கிராமிய தொழில் திட்டத்தின் கீழ் விதைப்பணமாக 1978 ஆம் ஆண்டுமுதல் 1982-83 வரை ரூ. 16.29 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

**தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்:**

இம்மாவட்டத் தொழில் மையம் அமைவதற்கு முன்னால் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 5 மட்டுமே செயல்பட்டன. தற்போது தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 65 அமைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

சேவை தீப்பெட்டிச் சங்கங்கள்(மகளிர் சங்கம் உட்பட)-3

தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் -2.


மகளிர் தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்-50

மகளிர் சாக்கட்டித் தொழில் கூட்டுறவு சங்கங்கள்-3

பாலீத்தீன் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம்-1

தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்-2

எழுதுபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் -1



தென்னை நார் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்-2

தருமபுரி மாவட்ட குச்சிக் கிழங்கு மாவு உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம்-1

**குச்சிக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிலுக்கு விற்பனை உதவி:**

இம்மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு மாவு தயாரிக்கும் ஆலைகள் 37 உள்ளன. உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் இடைத்தரகர்களின் பிடியில் சிக்கி ஆலைகள் அவதியுற்றன. இதனைப் போக்குவதற்காக மாவட்டத் தொழில் மையம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக தேசிய சிறு தொழில் நிறுவனம் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.. அத்துடன் அவர்களது பொருகளை நல்லமுறையில் விற்பனை செய்ய எல்லா நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து குச்சிக் கிழங்குமாவு உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு 30.10.'82 அன்று மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் அவர்களால் திறப்பு விழா நடத்தப்பட்டது.

**பட்டு நூல் முறுக்கேற்றும் தொழிலுக்கு உதவி:**

பட்டுநூல் முறுக்கேற்றும் தொழில் வளர்ச்சிபெற மாவட்டத் தொழில் மையம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக சிறுதொழில் முதலீட்டுக் கழகமும், தேசிய சிறுதொழில் நிறுவனமும் கடன் வழங்கமுன் வந்தன. தேசிய சிறுதொழில் நிறுவனம் ரூபாய் 22.8 லட்சம் மதிப்புடைய 48 மனுக்களுக்கு நிதியுதவி செய்துள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கு உதவி:**

ஆதிதிராவிட மகளிர் மேம்பாட்டுக்காக 25 ஆதிதிராவிட மகளிரை உறுப்பினராகக் கொண்டு பாலித்தீன் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 25 ஆதிதிராவிடக் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

ஆதிதிராவிட தொழில் முனைவர்கள் மூவருக்குச் சிறு தீப்பெட்டித் தொழில்கூடம் அமைக்க உதவி செய்யப்பட்டுள்ளது.

**சின்னஞ் சிறு தொழில் கூடங்கள்:**

சின்னஞ்சிறு தொழில்கூடங்கள், 19கட்டப்பட்டு, தொழில் முனைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காரிமங்கலத்தில் 10 தொழிற் கூடங்களும், பாப்பி ரெட்டிப் பட்டியில் 9 தொழிற் கூடங்களும் கட்டப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியில் 20, பெண்ணாகரத்தில் 10, ஆக சிறு தொழில் கூடங்கள் 30 கட்டப் படவுள்ளன.

**சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழில் கூடம்:**

கிராமப் புற மக்களின் வேலைவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு தருமபுரியைச் சுற்றி 115 சிறு தீப்பெட்டித்தொழிற் கூடங்களும் பொம்மிடியைச் சுற்றி 125 சிறு தீப்பெட்டித் தொழிற்கூடங்களும்அமைக்கப் பட்டுள்ளன.

**பட்டுநூல் நூற்றல் மற்றும் முறுக் கேற்றும் தொழில்கூடங்கள்:**

சுயவேலை வாய்ப்பினை ஊக்குவிப்பதற்காகவும் பட்டு நூல் தொழில் வளர்ச்சிக்காகவும், பட்டுநூல் நூற்றல் மற்றும் முறுக்கேற்றல் தொழில்

## புஞ்சைப் பயிர்கள்

இம்மாவட்டத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 83 சதவிகிதப் பரப்பில் மானாவாரிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கேழ்வரகு முதலிடம் வகிக்கிறது. கேழ்வரகு 91,781 எக்டேரிலும், சோளம் 57,306 எக்டேரிலும், வேர்க்கடலை 53,505 எக்டேரிலும், சாமை 53,777 எக்டேரிலும் முதல போகமாகப் பயிரிடப்படுகின்றன. இரண்டாவதுபோகத்தில் 68,926 எக்டேரில் கொள்ளு சாகுபடி செய்யப்படுகிறது.

கூடங்கள் ரூபாய் 108 லட்சம் மதிப்பீட்டில், தருமபுரி, அரூர், சாமல்பட்டி, ஓசூர், பேரிகை, ஆகிய இடங்களில் நிறுவப்படவுள்ளன. இதனால் 1500 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்.

சமூக நலத்துறைத் தனித் திட்டம்:

கிராமப்புற மகளிர்களின் நிரந்தர வேலை வாய்ப்புக்காக மகளிர் தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 50, சாக்கட்டி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 3, எழுதுபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பெற்றுச் செயல்பட்டு வருகின்றன.

மேற்படி தீப் பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1.1.'1982 முதல், தொழில் வணிக இயக்குநரின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

தொழில் முனைவர்கள் முன்னேற்ற திட்டம்:

இம்மாவட்டத்தில் தொழில் கல்வி பயின்ற நபர்களின் சுய வேலை வாய்ப்புக்காக இந்தியன் முதலீட்டு மையத்தின் உதவியோடு தொழில் முனைவர்கள் முன்னேற்றத் திட்டம் அமைக்கப்பட்டது. இதற்கான செலவினை இந்தியன் முதலீட்டு மையமும், தமிழக அரசும்சரி பாதியாகப் பகிர்ந்து கொண்டுள்ளன. தொழில் நுட்ப டிப்ளமா பட்டப்படிப்பு பெற்று 33 நபர்களைத் தேர்வு செய்து, ஓராண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1982 ஜூன் மாதத்தில் முடிவடைந்தது.

கிராமிய கைவினைஞர் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் பயிற்சி பெறுவதற்காக 50 நபர்களைத் தேர்வு செய்து, தச்சு, டிராக்டர் பழுது பார்த்தல், வெல்டிங், டர்னிங் முதலியவற்றில் 6 மாத காலப்பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக அரசு ரூ. 50,000 நிதி ஒதுக்கீடு செய்தது. இந்தப் பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்தது. மேலும் 50 நபர்களுக்குப்



பயிற்சி அளிக்கப்பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் நாளிலும் 7ஆம் நாளிலும் சென்னை சிறு தொழில் சேவை நிலையம், மற்றும் திருச்சி பெல் நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு நடத்தப்பெற்ற தொழில முனைவோர் முன்னேற்றக் கருத்தரங்கும் பொருட்காட்சியும் தொழில் முனைவோர்களிடமிருந்து நல்ல வரவேற்பினைப் பெற்றன.

கைவினைத் தொழில் பயிற்சி:

தருமபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி கிராமத்தில் பின்தங்கிய வகுப்பினருக்காக மூங்கில் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்று மாவட்டத் தொழில் மையத்தின் முயற்சியினால் மத்திய அரசால் அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்புதலை மத்திய அரசு, கைவினைத் தொழில் வளர்ச்சி ஆணையாளர் (Development Commissioner) வழங்கியுள்ளார். இந்தப் பயிற்சி 25 நபர்களுக்கு ஓராண்டுக் காலம் அளிக்கப்பெறும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு 'ரூ. 100- உதவிப் பணம் வழங்கப்படும். இதற்கான எல்லாச் செலவினையும் மத்திய அரசு ஏற்கும். தேவையானால் பயிற்சியினை மேலும் நீடிக்க வகையுள்ளது. பயிற்சி முடிந்த பின் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவுள்ளது.

மொத்தத்தில், தருமபுரி மாவட்டத்தைத் தொழில் மயமாக்குவதற்காகக் கடும் பணியாற்றி வரும் மாவட்டத் தொழில் மையத்தின் சாதனை வரலாறு படைப்பதாக உள்ளது.

## காவேரிப்பட்டணம் பெற்ற பெருமை

நீன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில் பள்ளிக் கட்டடங்கள் 56, கிராமப்புற மருந்தகங்கள், 22, தாய் சேய் நல விடுதி, 1, எனப் பெருமளவில் கட்டடங்களை உருவாக்கியுள்ள ஊராட்சி ஒன்றியம் காவேரிப்பட்டணம் ஆகும்! மாநிலத்திலேயே இது குறிப்பிடத்தக்கதாகத் திகழ்கிறது. 12.5.1982ல் பணி துவக்கப்பெற்று 25.9.1982ல் முடிவடைந்துள்ளது. அதாவது 142 நாட்களில் முடிவுற்றுள்ளது.

## சேலத்து மாம்பழம் அல்ல தருமபுரி மாம்பழம்

சேலத்து மாம்பழம் என்று சொல்கிறோம் அல்லவா, அது தருமபுரி மாம்பழம்தான்! தருமபுரி மாவட்டத்தில், குறிப்பாக கிருஷ்ணகிரி வட்டத்தில் மாமரச் சாகுபடி சிறந்து விளங்குகிறது. இந்த வட்டத்தைச் சேர்ந்த தொரப்பள்ளி, ஜகதேவி, ஜகொந்தம், பருகூர் போன்ற இடங்களில் ஏராளமான மாந்தோப்புகள் இருக்கின்றன. மாவட்டதத்தில் உள்ள 26,460 ஏக்கர் மொத்தம் பரப்புள்ள மாந்தோப்புகளில், கிருஷ்ணகிரி வட்டத்தில் மட்டும் 18,370 ஏக்கர் மாந்தோப்புகள் உள்ளன.

# உழவருக்கு உதவிடும் ஒப்பற்ற ஆராய்ச்சி நிலையம்

தருமபுரி மாவட்டத்தில் காவேரிப் பட்டணம் அருகில் உள்ள பையூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையம் பணியாற்றி வருகிறது. 1973-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்றாலும் ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலகக் கட்டடம் 1978ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 46 ஏக்கர் பரப்பளவு கொண்டிருக்கிறது இந்த ஆராய்ச்சி நிலையம்.

சாகுபடியில் புதிய உத்திகளைக் கண்டுபிடித்து உயர் விளைச்சல் ரகங்களை உருவாக்கி, விளைச்சலைப் பெருக்குவதற்கு இந்த ஆராய்ச்சி நிலையம் தொண்டாற்றி வருகிறது. உழவியல், மண்ணியல், இனத்தேர்வு, பூச்சியியல், நோயியல், தோட்டக்கலை போன்ற ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகள் இங்கே நடத்தப்படுகின்றன. இந்நிலையத்தின் பொருளாதார, விரிவாக்க ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதி உழவர் பெருமக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றிற்கு ஏற்ற முடிவுகளை உடனுக்குடன் தெரிவிக்கின்றனர்.

மானாவாரி சிறு தானியங்களான ராகி, சோளம், கம்பு, சாமை, பயறு வகைகளான கொள்ளு, துவரை, ஆகியவற்றிலும் தீவிர ஆராய்ச்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, மற்ற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

இப்பகுதியில் நெல், கரும்பு ஆகியவை இறைவைச் சாகுபடியில் பயிராகின்றன.

கடந்த சில ஆண்டுகளாகச் செய்து வரும் ஆராய்ச்சியின் பயனாக, பையூர் 1 என்னும் புதிய



வகை நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூன்று வகை நெல் ரகங்களின் கலப்பினச் சேர்க்கை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது பையூர் 1 நெல். ஏக்கருக்கு ஏறக்குறைய 2,360 கிலோ மகசூல் கொடுக்கிறது. வைக்கோல் மகசூல் ஏக்கருக்கு 3.5டன் வரை கிடைக்கிறது.

பையூர் 1 நெல்—140 முதல் 145 நாட்கள் வயது கொண்டது. ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை நெல் தேவைப்படுகிறது. இதனை நவரைப் பருவத்தில் முன்போகச் சம்பாவாகப் பயிரிடலாம். இவ்வாறு பயிரிட்டால் அதிக மகசூல் கிடைக்கிறது. பின்போகச் சம்பாவில் பயிர் செய்தால் பனியால் தாக்கப்பட்டு, மகசூல் குறைய வாய்ப்பு உள்ளது.

பனியைத் தாங்கி வளரக்கூடிய நெல் வகையைக் கண்டுபிடிக்கும் பணியில் இந்த ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டு வருகிறது.


**பையூரில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தருமபுரி மாவட்டத்தின் 8 வட்டங்களிலும் பெய்யும் மழை அளவு-கிராப் படமாகத் தீட்டி வைக்கப்பட்டிருக்கின்றது.**

மானாவாரிக்கேற்ற புதிய ரகத் தக்காளி ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

அதிக விளைச்சல் தரக்கூடிய—வறட்சியைத் தாங்கிக் கொள்ளக்கூடிய—அதிகத் தட்டு தரக்கூடிய—சோள ரகங்கள், சாமை ஆகியவற்றை உருவாக்குவதற்கும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வேர்க்கடலை, எள், காராமணி, துவரை ஆகியவற்றிலும் புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற ரகங்களை உருவாக்குவதற்கு ஆய்வு நடத்தப்படுகிறது.

டி. பி. ஐ. 1161 என்னும் ராகி ரகம், டி. பி. ஐ. 1243 என்னும் காராமணி ரகம், டி. பி. ஐ. 703 என்னும் பச்சைப் பயறு ரகம் ஆகியவை சிறந்தமுறையில் பலன் கொடுத்துள்ளன. அதிக விளைச்சல் தரும் டி.பி.ஐ.711 துவரை,



டி. பி. ஐ. 1281 மொச்சை ஆகியவை ஆய்வில் உள்ளன.

மானாவாரியிலும் இறைவையிலும் பயிர் செய்யக்கூடிய நடுத்தர இழை நீளமுள்ள பருத்தி வகைகள் ஆராய்ச்சியில் உள்ளன.

சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தில் பணிபுரியும் பயிற்சி விரிவாக்கப்பணி அலுவலர்களுக்கு இந்நிலையத்தில் மாதத்தில் இரு நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வேளாண்மைத் துறை உதவி இயக்குநர்கள், விரிவாக்கப்பணியாளர்கள் ஆகியோருக்குத் தேவையான பயிற்சி அளிப்பதுடன் அவர்களுக்கு ஏற்படும் சந்தேக வினாக்களுக்கு விடைகளையும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் இந்நிலையம் வழங்குகிறது.

பயிர்ச் சுழற்சி போன்ற முறைகளைச் செயல் விளக்கம் செய்து காண்பித்து, வேளாண்மையில் புதிய உத்திகளை உழவர் பெருமக்கள் கைக்கொள்வதற்கு வழி வகுக்கிறது இந்த நிலையம். மொத்தத்தில் உழவுத் தொழிலுக்கு இந்த நிலையம் ஒப்பற்ற நண்பனாக உதவுகிறது.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆற்றும் பணிகள்!




நியாயமான விலையில் தரமான பொருட்களைப் பொது மக்களுக்கு வழங்கி, வெளிச் சந்தையின் விலையுயர்வைக் கட்டுப்படுத்துவதே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலையாய குறிக்கோள் ஆகும்.

கள்ள வணிகம் அதிக விலை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் கைகொடுத்துக் காக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில், இக்கழகம் பாராட்டுக்குரிய வகையில் பணியாற்றி வருகிறது. மாவட்டத்தின் வளர்ச்சி வரலாற்றில் தனி இடம் பிடித்துக் கொண்டிருக்கிறது.

பொது விநியோக முறையை மேம்படுத்துவதற்காக உருவான 'கிராமத்திற்கு ஒரு அங்காடித் திட்டம்' தருமபுரியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மலைகளின் ஊடே காட்சி தரும் சிற்றூர்களிலும் - வனவிலங்குகள் உலவித் திரியும் காடுகளின் ஊடே அமைந்துள்ள சிற்றூர்களிலும் இந்தத் திட்டம் நல்ல விதத்தில் நிறைவேற்றப் பெறுகிறது.

ஏற்கெனவே நாள் முழுதும் இயங்கிவந்த சில்லறை விற்பனை நிலையங்களுடன் 1-11-1978 முதல் துவக்கப்பட்ட இத்திட்டத்தின் வாயிலாக, பிற்பகலில் மட்டும் இயங்கும் அமுதம் கிராம விற்பனை நிலையங்கள் 614 இம்மாவட்டத்தில் துவக்கப் பெற்றன. பின்னர், நாள்முழுதும் இயங்கும் கடைகள் இரண்டு ஏற்படுத்தப்பட்டன. குடும்ப அட்டைகளுக்குரிய பொருள்கள் அங்கே வழங்கப்படுகின்றன.

துவக்க நிலையில், அமுதம் அங்காடிகள் 540, வாரத்தில் 6 நாட்கள் ஒற்றைக் கடைகளாக இயங்கின. 104 அங்காடிகள், வாரத்திற்கு மூன்று நாட்கள் இரட்டைக் கடைகளாகச் செயல்பட்டன.

இக்கடைகளில் மலிவு விலையில் தரமான பொருள்களைப் பெற்றுப் பயனடைந்த மக்கள், தங்கள் சிற்றூர்களில் இயங்கும் இரட்டைக் கடைகள் தனித்தனியாக இயங்க வேண்டும் எனக் கோரினார்கள். அதன் காரணமாக, வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே இயங்கிய இரட்டைக் கடைகள் அனைத்தும் வாரத்தில் 6 நாட்கள் இயங்கும் ஒற்றைக் கடைகளாக மாற்றப்பட்டன.

மாநில எல்லையின் ஓரமாக ஒதுங்கியுள்ள சிற்றூர்கள் மஞ்சுகொண்ட பள்ளி, தக்கட்டி, உரிகம், நாட்ராபாளையம் மாடக்கல், தொட்டமஞ்சி போன்றவை ஆகும். மனிதர்கள் சாதாரணமாக நடந்துகூடச் செல்ல இயலாத மலைகளின் மேல் அமைந்துள்ள பிக்கிலி, சித்தேரி, சிட்டிலிங்கி போன்ற பகுதிகள் வாகன வசதி அற்றவை. அங்கேயும்கூட அமுதம் அங்காடிகள் இயங்கி வருகின்றன; ஏழை, எளிய மக்களின் அன்றாட உணவுத் தேவைகளை வழங்கி வருகின்றன.

போக்குவரத்து வசதிகள் இல்லாத சிற்றூர் அங்காடிகளுக்கு உணவுப் பொருள்கள், கட்டை வண்டிகளின் மூலம் அனுப்பப்படுகின்றன. கழுதைகளின் மீது பொதிச் சுமைகளாகவும் ஏற்றப்பட்டு அனுப்பப்படுகின்றன. கழுதைகளும் ஏற முடியாத மலைப்பகுதிகளில் தலைச்சுமையாகவும் அனுப்பப்படுகின்றன.

மாவட்டத்தில் மக்களுக்குத் தேவைப்படும் அரிசியை விநியோகிக்க, நெல் அரைவைப் பணியை மேற்கொள்வதற்காக 3 முகவர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர்; தற்போது 33 முகவர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப் பெற்றிருக்கிறார்கள்.

வறட்சியால் இம்மாவட்டம் பாதிக்கப்பட்ட காலத்திலும் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி அரிசி கிடைப்பதற்கு இந்நிறுவனம் பெரும்பணி ஆற்றியுள்ளது. மற்ற மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் இம்மாவட்ட முகவர்கள் மூலம் கொண்டு வந்து அரைக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு, கிராமக்கடைகளின் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதுவரை 16,500 டன் நெல், கொண்டு வரப்பட்டு, அரைவை செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 1982 முதல் பச்சரிசியும் கடைகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தின் மூன்று மாதத் தேவைக்குரிய அரிசி, சர்க்கரை, கோதுமை ஆகியவை இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இக்கழகத்தின் மூலம் 1981-82ல் 29,996 டன் அரிசி, 4285 டன் கோதுமை மற்றும் கோதுமைப் பொருள், 5575 டன் சர்க்கரை, 2180 டன் சமையல் எண்ணெய் ஆகியவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

### தானிய சேமிப்புக்குத் தக்கதொரு வசதி

துவக்க நிலையில், சரக்குகள் மாவட்டத் தலைநகரான தருமபுரியிலிருந்த மையக் கிடங்கிலிருந்து மட்டுமே, விநியோகத்திற்காக அனுப்பப்பட்டன. நிறுவனத்தின் கடைகளின் தேவை அதிகரிப்பின் காரணமாகவும், உணவுப் பொருள்கள் விரைவாக விநியோகிக்கப்படல் வேண்டும் என்னும் நோக்கத்தினாலும், வட்டங்கள் தோறும் அமைந்த சேமிப்புக் கிடங்குகள் மூலம் சரக்குகள் விநியோகம் செய்யப்படலாயின. இதன் மூலம், ஏற்கெனவே, இக்கழகம் இயக்கி வந்த 6 கிடங்குகளுடன், பாலக்கோடு, பெண்ணாகரம், காவேரிப்பட்டணம், மொரப்பூர் ஆகிய

இடங்களிலும் சேமிப்புக் கிடங்கு வசதியைப் பெருக்கியுள்ளது.

தனியார்களுக்குச் சொந்தமான கிடங்குகளையே வாடகைக்கு எடுத்து இந்நிறுவனம் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காக, தற்போது, நவீன விஞ்ஞான வசதிகளுடன் கூடிய 3,800 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றைக் கிருஷ்ணகிரியிலும், 1,000 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றை தேன்கனிக்கோட்டையிலும் இக்கழகம் கட்டியுள்ளது. அரூர், ஓசூர் ஆகிய இடங்களிலும் கிடங்குகள் கட்டும்பணி துவக்கப்பட்டுள்ளது.

**நூறு கிராம் பருப்பு**

**நூறு மில்லி எண்ணெய்**

இம்மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் மிகவும் தாழ்த்தப்பட்ட—அன்றாடக் கூலிகள் ஆவர். அவர்களால், தங்களுக்குரிய உணவுப் பொருள்கள் முழுவதையும் ஒரே நாளில் வாங்கிவிட முடியாது. அதனால், ஏழைக் குடிமகன், தனது சக்திக்கேற்பத் தினமும் வாங்கும் வகையில் குறைந்த அளவில் சரக்கையும் அரிசியையும் பிரித்து, பல தடவைகளில் விநியோகித்து வருகிறது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். இங்கே 100 கிராம் பருப்பு வாங்கிக் கொள்ளலாம். 100 மில்லி மண்ணெண்ணெய்யும் வாங்கிக் கொள்ளலாம்.

நமது அரசு அறிமுகப்படுத்தியுள்ள சமுதாயத் திட்டமான முதியோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு வாரந்தோறும் 1 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டத்தை இக்கடைகள் நிறைவேற்றி வருகின்றன.

அண்மையில் நடைமுறைப் படுத்தப் பெற்று, தமிழக மக்களையும், பிற மாநிலத்தவர்களையும் கவர்ந்துள்ள சீரிய திட்டமான முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் உணவுப்பொருள்கள் அனைத்தையும் இந்தக் கழகம், குறித்த காலத்தில், திறம்பட விநியோகித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டம் முழுதும் உள்ள 3107 சத்துணவு மையங்களுக்கும், தனது பணியாளர்களின் மூலம்-உணவுப் பொருள்களை மையங்களிலேயே நேரடியாக விநியோகம் செய்து வருகிறது.

பல்பொருள் அமுதம் சிறப்பங்காடிகள், தருமபுரி, காரிமங்கலம், கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. தரமான அழகுச் சாதனங்கள், பான வகைகள், பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவை, நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

சுற்றுலா மையமான ஒகேனக்கல் அருவியைக் காண வரும் உல்லாசப் பயணிகளுக்குப் பயன்படும் எண்ணெய், சீயக்காய், சோப்பு மற்றும் அவசரச் சமையல் பொருள்களை நியாயமான விலையிலும், தரமானதாகவும் விநியோகம் செய்ய, சிறப்பங்காடி ஒன்று ஒகேனக்கல்லில் இயங்கி வருகிறது.

மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணி, மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துவிட்டதுஎன்று கூறுவது நூற்றுக்கு நூறு உண்மையாகும்!

---

## அந்தி வாடியில் ஓர் அற்புதம்




ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமம் அந்திவாடி. அங்கே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 28 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. வீடு ஒன்றின் விலை ரூ. 8,500.

இந்த வீடுகளில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் முன்பு குடிசையில் வாழ்ந்து வந்தார்கள். 33 பேர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய நிலம் அளிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அவர்களில் மிகச் சிலர்தான் வீடு கட்டிக் கொள்ள முடிந்தது. ஏனையோர்களால் இயலவில்லை. இவர்களின் கவலையைப் போக்குவதற்கென்றே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் உருவாகியது போலும். இவர்களும் வீடு கட்டும் பணியில் ஈடுபட்டனர். தினமும் அரிசி, மற்றும் உணவுப் பொருள்களைக் கூலியாகப் பெற்றனர். மள மளவென்று வீடு உருவாகி விட்டது.

2.5 செண்ட் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டில் திண்ணைப் பகுதி உண்டு; உள்ளே ஒரு கூடம்; சமையல் அறை; குளியலறை முதலியவை உண்டு. வாசலில், ஆடு அல்லது மாடு கட்டிக் கொள்வதற்குரிய கொட்டிலும் உண்டு.

வீட்டுக்குப் பின்பக்கம் 30 அடி நீளம்—25 அடி அகலம் உள்ள வெற்றிடம் உண்டு. இதிலே வேண்டிய காய்கறியைப் பயிரிட்டு வருகின்றார்கள். தங்கள் வீட்டுச் சமையலுக்குத் தேவையான காய்கறிகளைத் தங்கள் வீட்டுத் தோட்டத்திலிருந்தே பெற்றுக் கொள்வதில் இவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.





# பால்வண்ணச் சர்க்கரை தரும் பாலக்கோடு கூட்டுறவு ஆலை!

அதியமான் நெடுமான் அஞ்சி, கரும்புப் பயிரை விண்ணவர் உலகத்திலிருந்து மண்ணகத்திற்குக் கொண்டு வந்து பயிரிட்டான் என்று புறநானூறு சொல்கிறது. அது உண்மை என்பதைத் தருமபுரி மாவட்டத்தின் கரும்புச் சாகுபடி எடுத்துச் சொல்கிறது. மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கரில் கரும்புச் சாகுபடி நடைபெறுகிறது.

எனவே தலைமுறை தலைமுறையாகக் கரும்பு பயிரிடப்பட்டு வரும் மாவட்டத்தில் நீண்ட காலமாக சர்க்கரை ஆலை இல்லாத நிலை இருந்து வந்தது. அரசு இந்த விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி, சர்க்கரை ஆலை ஒன்றினைக் கூட்டுறவுத் துறையில் துவக்குவதற்குத் திட்டமிட்டது. அதன் விளைவாக 1966 ஆகஸ்ட் 29-ஆம் நாளன்று பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை பதிவு செய்யப்பட்டு டிசம்பர் 15 ஆம் நாளில் பணியைத் துவக்கியது. 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் நாளில் அரைவையைத் துவக்கியது.



துவக்கத்தில் 19 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகக்குழு ஆலையின் நிருவாகத்தைக் கவனித்து வந்தது. 16-6-1976-க்குப் பின்னர், தமிழ்நாடு அரசினால் நியமனம் செய்யப் பெற்ற தனி அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. தற்போது திரு தாமோதரன் தனி அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

ஆலையின் அரைவைத் திறன் நாள் ஒன்றிற்கு 1,250டன் ஆகும் என்றாலும் 1,500 டன் அரைவை செய்து வருகிறது. அந்த அளவுக்குத் திறன் படைத்த இயந்திரங்கள் இங்கே உள்ளன. 4.5 கோடி ரூபாய் செலவில் நாள் ஒன்றிற்கு 2,000 டன் அரைவை செய்யும் வகையில் - இதன் திறனை விரிவாக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது. அவ்வாறு விரிவு செய்யப்படும்போது, சுமார் 2,300 டன் வரை அரைவை செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

சர்க்கரை கண்டு முதலில், தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளில் மிகச் சிறந்த ஆலை என்று, இந்த ஆலை தேர்ந்தெடுக்கப்பெற்று, 1973-74, 1974-75, 1980-81, 1981-82 ஆண்டுகளில் முதற் பரிசு பெற்றிருக்கின்றது.

ஏறக்குறைய 12 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்புஇவ்வாலையின்அரைவைக்குக் கொண்டு வரப்படுகிறது. இது தேவைக்கு அதிகமாக இருப்பதால், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், ஆம்பூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆலைகளுக்கு 1 இலட்சம் டன் கரும்பை இந்த ஆலை அனுப்பி வருகிறது.

**எஸ். சண்முகசுந்தரம்**

1980-81ல் ஆம்பூர், திருப்பத்தூர் ஆலைகளுக்கு 45 ஆயிரம் டன் கரும்பு அனுப்பப்பட்டது. இந்த ஆலையில் 2.13 இலட்சம் டன் அரைவை செய்யப்பட்டது. அதில் அதிக இலாபம் வந்தது. அதன் காரணமாக, 1 டன்னுக்குக் கொடுத்த விலையான ரூபாய் 212.10 உடன், 30ரூபாய் அதிகம் கொடுக்கப்பட்டது. இந்த வகையில் 60 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே கரும்புக்கு இவ்வளவு அதிக விலையைத் தந்தது பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைதான்!

ஆம்பூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்ட கரும்பிற்கு இந்த அதிகத்தொகை கிடைக்கவில்லை. ஆகவே, இவ் ஆலைக்குக் கரும்பு விநியோகிக்கும் விவசாயிகள். ஏனைய ஆலைகளுக்கு அனுப்ப விரும்பவில்லை. பாலக்கோடு ஆலைக்கே கரும்பு அனுப்ப விரும்புகின்றனர். இந்த விவசாயிகளின் ஆர்வத்துக்கு ஆதரவு தருவதற்காகவே, இவ் ஆலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

விரிவாக்கம் செய்வதற்கு மைய அரசிடம் விண்ணப்பம் செய்யப் பெற்றுள்ளது. மைய அரசு அலுவலர்கள், ஆலையில் விரிவாக்கம் செய்வதற்கு இடவசதியுள்ளதா, ஆலைக்கு விவசாயிகளால் விநியோகிக்கப்படும் கரும்பின் அளவு போதுமானதாக் உள்ளதா என்பதை எல்லாம் ஆய்ந்து பார்த்து, அனுமதி வழங்குவர்.


தற்போது 5,500-லிருந்து 6,000 கரும்பு விவசாயிகள் இந்த ஆலையில் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அதிக சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஆலை இது ஒன்றுதான் என்பது. தருமபுரி

மாவட்டத்திற்குச் சிறப்புத் தரும் செய்தியாகும். 1981-82ல் 2,64,286 டன் கரும்பை அரைவை செய்ததில் 2,56,124 டன் சர்க்கரை கிடைத்திருக்கிறது. அதற்கு முந்திய ஆண்டு 2.64 இலட்சம் டன் கரும்பை அரைத்ததில் 2.64 இலட்சம் டன் சர்க்கரை கிடைத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்த ஆலையின் தயாரிப்பான சர்க்கரை, வெள்ளை வெளேர் என்று, பால் வண்ணத்தில் காட்சி தருகிறது. இந்திய அரசின் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் 18 ஆயிரம் குவிண்டால் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு இவ்ஆலை அனுப்பியுள்ளது.

கரும்புக்கு, கருநாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள் அதிகமான விலையைத் தருகின்றன. அவற்றிற்கு இணையாகவே இந்த ஆலையும் விலை தருகிறது.

கரும்பைச் சர்க்கரை ஆக்குவதற்குத் தண்ணீர் நிறையத் தேவை. பொதுவாக பிப்ரவரி, மார்ச் வரை தண்ணீர்த் தேவையைச் சமாளிக்க முடியும். ஆனால் இந்த ஆண்டைப் பொறுத்தவரை அரைவையைத் தொடங்கியவுடனேயே தண்ணீர்ப் பற்றாக் குறை ஏற்பட்டு



விட்டது. சின்னாறு மூலம், தருமபுரிக்குக் குடிதண்ணீர் கிடைத்து வருகிறது. அந்தச் சின்னாறிலிருந்து தண்ணீரை இங்கே கொண்டு வந்து பயன்படுத்துவதற்கு 6 லட்ச ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம், ஆலைக்கு நீர் கிடைப்பதுடன் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கும்.

கரும்பிலிருந்து சர்க்கரையை உருவாக்கும்போது துணைப் பொருளாக மொலாசஸ் கிடைக்கிறது. 100 டன் கரும்பை அரைத்தால், 4.5 டன் மொலாசஸ் கிடைக்கும். இந்த மொலாசஸைப் பயன்படுத்திக் காகிதம் செய்யப்படுகிறது. இதனை எரிபொருளாகப் பயன்படுத்தி இங்கே மின்சாரத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள். எனவே மொலாசஸ் சேமிப்பதற்காக 4,000 டன் கொள்ளளவு கொண்ட தொட்டி ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 10 லட்சம் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தவணைக் கடனாக (Term loan) ரூ. 120இலட்சம் இவ்வாலைக்கு வாங்கப்பட்டது. 1984ல் முடிவுற வேண்டிய அந்தக் கடன் தொகையை இந்த ஆலை 1981 ஆம் ஆண்டிலேயே அதாவது 3 ஆண்டு முன்னதாகவே செலுத்தி விட்டது.

பொதுவாக ஓர் ஆலை துவக்கப்பட்டு 6 ஆண்டுகள் வரை அதனுடைய ஊழியர்களுக்கு போனஸ் தர வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இது, தனி அலுவலரின் பொறுப்புக்கு வந்த 6 ஆண்டுகளுக்குள் கடன்களைத் தீர்த்து விட்டதால், ஊழியர்களுக்கு போனஸ் வழங்கலாம் என்னும் விதி உள்ளது. அதன்படி போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டுக்குரிய போனஸாக 20 சதவீதம் வழங்கப்பட்டது. எவ்வளவு லாபம் வந்தாலும் சட்டப்படி அதற்கு மேல் கொடுக்க முடியாது. அதன் காரணமாகவும், தொழிலாளர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தினாலும், ரூ. 405 விலையுள்ள எச். எம். டி. கைக்கடிகாரங்கள் 850 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கும் இந்த ஆலை நிருவாகம் தொழிலாளர்களுக்கு 208 குடியிருப்புகளை உருவாக்கி, குறைந்த வாடகைக்கு அளித்துள்ளது. மேலும் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மின்வசதி ஆகியவற்றை ஏற்பாடு செய்து தந்துள்ளது. தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி பெற மழலையர் பள்ளி ஒன்றினையும், ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தையும் அலுவலக வளாகத்தில் உருவாக்கித் தந்துள்ளது.

உடல்நலம் காக்கும் வகையில், முழுநேர மருத்துவர் செவிலி, மருந்தாளுநர் கொண்ட மருத்துவ மனை ஒன்று இங்கே இயங்கி வருகிறது.

கூட்டுறவுப் பண்டக சாலை, கூட்டுறவுக் கடன் சங்கம், மனமகிழ் மன்றம், மாதர் சங்கம், அனைத்தும் இங்கே உண்டு.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற பாரதியின் அமுத வாக்கைச் செயலாக்கி வருகிறது பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை.

## சத்துணவுத் திட்டத்திற்கு அளித்த நிதி




பாலக்கோட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை முதல்வர் குழந்தைகள் இலவச சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 2.8 லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

## விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி!

கூட்டுறவு மற்றும் அரசுத் துறை ஆலைகளுக்கு இடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில், தொடர்ந்து மூன்று முறையாக முதற் பரிசு பெற்று வந்துள்ளது பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.

## 10 இலட்ச ரூபாய் விலையுள்ள பைபரைஸர்

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பை அரைப்பதற்குப் பயன்படும் பைபரைஸர் என்னும் இயந்திரத்தின் விலை ரூ 10 இலட்சமாகும்.






தருமபுரி மாவட்டத்திலுள்ள குறைந்த மின் அழுத்தப் பகுதிகளைச் சீரானமுறையில் மின் வினியோகம் செய்யவும், வருங்காலத்தில் அதிகப்படியான மின் இணைப்புகளை எதிர்பார்த்தும் அதற்குத் தகுந்தாற்போல் அடிப்படைக் கட்டமைப்புகளை முன்கூட்டியே திட்டமிட்டு இம்மாவட்டத்தில் ஓசூரில் 110/33/11கிலோ வோல்ட் மின்நிலையமும், பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி, மாதேபள்ளி ஆகிய இடங்களில் முறையே 33/11 கிலோ வோல்ட் மின்நிலையங்களும் கடந்த மூன்று வருட கால கட்டத்தில் 145 லட்சம் ரூபாய் செலவில் இயக்கி வைக்கப்பட்டன.

மேலும் மாரண்டஹள்ளி மற்றும் தீர்த்தமலைப் பகுதிகளில் சீரான மின் விநியோகம் செய்யவும், வருங்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டும் 33/11 கிலோ வோல்ட் இரு மின் நிலையங்கள் 1982 டிசம்பர் இறுதிக்குள் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவில் இயக்கி வைக்கப்படும்.

மின் கட்டணங்கள் விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் தமிழ்நாடு அரசின் புதிய அட்டைப் பட்டியல் முறை, பல்வேறு நிருவாகச் சிக்கலுக்கிடையிலும் மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கி வருவதன் மூலம், சமூகத்தின் பொருளாதார நிலையில் தாழ்ந்துள்ள மக்களுக்குச் சேவை செய்யப்பட்டு வருகிறது.

சித்தேரி மலையில் 5 குக்கிராமங்களுக்கு, காட்டு வழியிலும், மலையிலும் சென்ற ஆண்டில் (1981-82) பாதைகளை அமைத்து, மின் இணைப்பு வழங்கப்பட்டது. மீதி உள்ள 3 குக்கிராமங்களுக்கு (மண்ணூர், மோட்டுவளவு, கோவிந்தன் கடை) 25.10.1982ல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு இனங்களில் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும் செய்தி-மின்வளர்ச்சியில் மாவட்டத்தின் சாதனையை எடுத்துக் காட்ட உதவும்.

விவசாய நீரேற்று இயந்திரங்கள் வகையில் 1980-81ல் 2694 இணைப்புகள் 1981-82ல் 2737 இணைப்புகள், 1982-83ல் 912 இணைப்புகள் (1.11.1982 வரை) கொடுக்கப்பட்டுள்ளன.

குறைந்தமின் அழுத்தத் தொழிற்சாலைகள் வகையில் 1980-81ல் 115ம் 1981-82ல் 251ம், 1982-83ல்(1.11.1982 வரை) 175 இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை 1980-81ல் 13, 1981-82ல் 20, 1982-83ல் (11.11.1982 வரை) 41 இணைப்புகள் பெற்றுள்ளன.

வீட்டுமின் இணைப்பைப் பொறுத்த அளவில், 13306 இணைப்புகள், 1980-81ல் 9083 இணைப்புகள், 1981-82ல், 4669 இணைப்புகள் 1982-83ல் (1.11.1982 வரை) கொடுக்கப்பட்டுள்ளன.


வியாபார சம்பந்தமான மின் இணைப்புகள் 1980-81ல் 774, 1981-82ல் 2246, 1982-83ல்(1.11.1982 வரை)271 கொடுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் வசதிக்கான மின் இணைப்புகள் 1980-81ல் 28, 1981-82ல் 88, 1982-83ல் (1.11.1982வரை) 19 கொடுக்கப்பட்டுள்ளன.

குடிசைகளுக்குரிய மின் இணைப்புகள் என்ற வகையில் 1980-81ல் 6030, 1981-82ல் 9875, 1982-83ல்(1.11.1982 வரை) 1591 இணைப்புகளுக்கு மின்னாற்றல் வழங்கப்பட்டிருக்கின்றன.

தெருவிளக்குகளைப் பொறுத்தவகையில் 1980-81ல் 5, 1981-82ல் 16, 1982-83ல் (1.11.1982 வரை) 13 இணைப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாவட்டத்தின் வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு நிருவாக நடைமுறைகளைப் பொருட்படுத்தாமல் மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கும் நிலத்தடி நீர் அமைப்புகளுக்கும் முன்னுரிமை தந்து மின் இணைப்பு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.



# வரலாறு படைக்கும் மத்தூர் பனைப் பண்ணை

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பனை மரத்தை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். பனங்கன்று முளைத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பலன் தரத் தொடங்கும் - அதாவது பதநீர் தரத் தொடங்கும். பின்னர் 90 ஆண்டுகள் வரை தொடர்ந்து பதனீர் வழங்கும் தன்மை படைத்தது பனைமரம். ஒரு பனைமரம் ஆண்டுக்குச் சராசரி 100 லிட்டர் பதநீர் தரும். பனையின் மிகப் பெரும் சிறப்பு - வறட்சியால் பாதிக்கப்பட்ட நேரத்திலும் வள்ளல் போல் பதநீர் வழங்கும் பாங்கு!

பனையைக் குறித்து அதிவீர ராம பாண்டியர் என்னும் கவிமன்னர்,

''தேம்படு பனையின் திரள் பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே''

என்று பாடினார்.

நிழல் தரும் விஷயத்தில் வேண்டுமானால், பனை குறையுடையதாக இருக்கலாம். ஆனால் வளம் தரும் வகையில் அது ஒரு கற்பகமரக் காட்சி தருகிறது.

பனையின் எந்தப் பகுதியும் வீணாவதில்லை; பயன்பாட்டுக்கு உதவுகின்றது. குருத்து ஓலை, முற்றிய ஓலை, பட்டை, நார் (தும்பு) அகணி, புறணி, அடிமரம் அனைத்துமே பயன்படுகின்றன. இவற்றைக் கொண்டு அலங்காரப் பொருள்களும், அத்தியாவசியப் பொருள்களும் செய்யலாம். பதநீரைக் கொண்டு புதிய பானம் தயாரிக்கலாம். இவற்றை எல்லாம் தருமபுரி மாவட்டத்தில் உள்ள மத்தூர் பனைப் பண்ணை உருவாக்கி வருகின்றது.

பனஞ்சீனி தயாரிக்கவும் ஆலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கும், கட்டடத்திற்கும் சேர்த்து ரூ. 3 லட்சம் செலவாகியுள்ளது. பாம்கோலா, பாம்டா, சர்பத் ஆகிய பானங்களையும் சாக்லெட், கற்கண்டு ஆகிய திடப் பொருள்களையும், ஜாம் போன்றவற்றையும் தயாரிக்கப் பனஞ்சீனி பயன்படுத்தப் பெறுகிறது. காபிக்கும் இந்தச் சீனியைப் பயன்படுத்தலாம்.


1981-82ல் ஒரு இலட்சம் பாட்டில்கள் பாம்கோலா உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பெற்றுள்ளது.


பனஞ்சீனியைப் பயன்படுத்தி, சாக்லெட் தயாரிக்க ரூ. 3,000 வரை உதவித்தொகை கொடுத்து பெண்களுக்குப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பை உருவாக்குவதுடன், பொதுமக்களுக்கும் சத்துள்ள சாக்லெட் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.


பனை ஏறும் பயிற்சியும் இப்பண்ணையில் அளிக்கப்படுகிறது. 150 இளைஞர்களுக்குப் பனை ஏறிப் பதநீர் இறக்கும் பயிற்சி ரூ. 60,000 உதவித் தொகையில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 10,000 பனைகளைப் பயன்படுத்தி, வருவாய் பெருகுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

வறட்சி மீட்புப் பணித்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த திட்டம் ஆகியவற்றால் கிடைக்கும் உதவித் தொகையைப் பயன்படுத்தி 1981-82ல் ஏறக்குறைய, பனைத் தொழிலாளர்கள் 300 பேர்களின் குடும்பங்களின் வருவாயை ரூ. 750 வரை அதிகரிப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

பனைப் பொருள்களின் உற்பத்தியிலும் பனைத் தொழிலாளர்களின் நல்வாழ்விலும் மத்தூர் பனைப் பண்ணை குறிப்பிடத்தக்க சாதனைகளை உருவாக்கி வெற்றியைக் குவித்து வருகிறது.







# கலங்கரை விளக்கமெனத் திகழும் காவல்துறை




சரித்திரப் புகழ் பெற்ற தருமபுரி மாவட்டம் 1965 அக்டோபர் 2ஆம்நாளி லிருந்து சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக் கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது.

தருமபுரியில் காவல்துறையில் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கீழ் 28 காவல் நிலையங்களும் 5 புறக்காவல் நிலை யங்களும் இயங்கின. தற்பொழுது 30 காவல் நிலையங்கள், 7 புறக்காவல் நிலை யங்கள், கிருஷ்ணகிரி, தருமபுரியில் 2 போக்குவரத்துப் பிரிவுகள் ஆகியன காவல் துறைக் கண்காணிப்பாளரின் கீழ் இயங்கி வருகின்றன. ஒரு கூடுதல் கண்காணிப் பாளர், 5 துணைக்கண்காணிப்பாளர்கள்26 ஆய்வாளர்கள், 75 உதவி ஆய்வாளர்கள், 106 தலைமைக் காவலர்கள், 115 முதல் நிலைக் காவலர்கள். 795 காவலர்களுடன் உயர்ந்து திறன்படச் செயல்படுகின்றது. காவல்துறை ஆரம்பத்திலேயே மாவட்டக் குற்றப் பதிவறைக் கூடம், குற்றப்பிரிவு, தனிப்பிரிவு இருந்தன. தொடர்ந்து மது விலக்கு அமல் பிரிவு, தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, கட்டுப்பாட்டுஅறை, தீவிரவாதி களைஅடக்கும் தனிச் சிறப்புப்படை முத லானவைகளுடன் புகைப்படப்பிரிவு, கை ரேகைப்பிரிவு, காவல் ஆய்வாளர்கள் தலைமையில் 4 ஆயுதப்படைப் பிரிவு, தலைமை வாகனப் பிரிவு ஆகியவை உதவி ஆய்வாளர்கள் இளம் உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்களுடன் 265 காவலர் களும் கொண்டு ஆயுதப்படை இயங்குகின் றது. மேலும்கிருஷ்ணகிரியை நிலையமாகக் கொண்டு ஒரு பெண் உதவி ஆய்வாளரின் கீழ், ஒரு பெண் தலைமைக் காவலர், 10 பெண் காவலர்களைக் கொண்டு 1981 லிருந்து இயங்கி வருகின்றது. சரித்திரப் புகழ் பெற்ற காவிரி நதி ஓடும் ஒகேனக்கல் லிற்கு வரும் பயணிகளைப் பாதுகாக்கவும் அவர்கள் உடமைகளைக் காக்கும் பொருட் டும் 1981ஆம் ஆண்டில் ஒகேனக்கல்லில் காவல் நிலையம் திறக்கப்பட்டது.

பெருகிவரும் மக்கள் தொகையால் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படாமல் தடுத்துப் போக்குவரத்தினைக் கட்டுப் படுத்த தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 2 இடங்களிலும்போக்குவரத்து நிலையங்கள் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் முதலி யோரைக் கொண்டு செயல்படுகின்றது. மேலும்அதிகரித்துவரும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும் சமீபத்தில் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, கெலமங்கலம் போன்ற இடங்களில் ஏற்பட்ட இந்து, முஸ்லிம் இனக்கலவரங்களும், குறிப்பாக 1980ல் தீவிரவாதிகள் எனப்படும் நக்சல் பாரிகளின் கொடுஞ்செயல்களும் அரசின் கவனத்தை ஈர்த்தன. அதன் காரணமாக தருமபுரியில் காவல் துறையை விரிவாக் கும் பொருட்டு 1980ல் போச்சம்பள்ளி காவல் நிலையம் திறக்கப்பட்டது. மேலும் கூடுதலாக தருமபுரியில் காவல் துணைப் பயிற்சிப்பள்ளி திறக்கப்பட்டு இரு பிரிவு ஆயுதப்படைக்குப்பயிற்சி கொடுக்கப்பட்டு ஆயுதப்படையின் எண்ணிக்கை அதி கரிக்கப்பட்டது. அத்துடன் கூடுதல் காவல் நிலையங்கள் 41, புறக்காவல்நிலையங்கள், தனிப்படை, ஆயுதப்படைக்கு மேலும் ஒரு பிரிவு, முதலியவை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**அண்டை மாநிலக் காவல் துறையுடன் தொடர்பு**

எல்லை மாநிலங்களான கருநாடகம், ஆந்திரம் ஆகியவற்றுடன் தருமபுரிகாவல் துறையினர் கொண்டுள்ள சுமுகமான உறவு இம் மாநிலங்களில் நடந்த கீழ்வரும் குற்றங்களைக் கண்டுபிடித்ததன் மூலம் மேலும் வலுப்பெற்றது.

கருநாடக ம[illegible] ஹாசன் மாவட் டம் அரிசிக்கரை வட்டத்தைச் சேர்ந்த தீவிரக்கன்னக்களவுக்குற்றவாளி ஹுசேன் என்பவரைக் கடந்த செப்டம்பர் மாதம் கிருஷ்ணகிரி நிலையத்தில் பதிவாகிய கன் னக்களவு குற்றங்கள் சம்பந்தமாக தரும புரி காவல்துறையினர், கருநாடக மாநிலக் காவலர்கள் உதவியுடன் கைது செய்து, ரூ. 14,250 மதிப்புடைய சொத்துக்களை மீட்டனர்.

கரூர் நிலைய குற்ற எண். 387-79 கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட தரும புரி கொர முருகேசன், கொரவேலாயுதம் என்ற கூட்டுக் கொள்ளையர்கள் கருநாடக மாநிலத்தில் மாண்டியா மாவட்டத்தில் கன்னக் களவுகளில் ஈடுபட்டு தலைமறை வாகி இருந்தார்கள். அவர்களைக் கடந்த மே மாதம் தருமபுரி காவல் துறையினரும்

கருநாடகக் காவல்துறையினரும் இணைந்து கைது செய்தது ஒரு மிகை யாகாத எடுத்துக்காட்டு ஆகும். அத்துடன் 1982 அக்டோபர் மாதப் பிற்பகுதியில் ஊத்தங்கரை, கல்லாவி குற்ற உதவி ஆய்வாளர்கள் ஆந்திர மாநிலம் ரங்காரெட்டி மாவட்டம் குறைகுடாவிலிருந்து ஊத்தங் கரையைச் சேர்ந்த 27 கொத்தடிமை களை அம்மாநிலக் காவல் துறையினரின் உதவியுடன் மீட்டு வந்தது ஓர் அரும்பணி யாகும்.

### காவலர் பொதுமக்கள் நல்லுறவு

காவலர், பொதுமக்கள் நல்லுறவு நன்முறையில் விளங்கும் வண்ணமாக புரா தன, புகழ் பெற்ற ''கரக ஆட்டம்'' நடத் தும் காவல் கரக ஆட்டக் குழு ஒன்று தருமபுரி காவல்துறை ஆய்வாளர் திரு எஸ்.சிவகுரு, தலைமைக் காவலர் திரு பெரு மாள் ஆகியோர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டுப் பல இடங்களில் விழாக்களில் தங்கள் கரக நிகழ்ச்சிகளை நடத்திப் பாராட்டும் பரிசுகளும் பெறுகின்றனர். இந்நிகழ்ச்சி க்ளைக் கண்டு களிக்க மக்கள் பெருமளவில் கூடுகின்றனர்.

சமீபத்தில் தருமபுரியில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் கரகக் குழு வினர் நடத்திய கரக நிகழ்ச்சிகள் அனை வரையும் கவர்ந்தன. புதுடெல்லியில் நவம்பரிலிருந்து நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் காவல்துறை கரகக்குழுவின் சார்பாகச் சென்ற 60 பேரில், 28 பேர் கொண்ட குழு தருமபுரி யிலிருந்து சென்றது என்பது குறிப்பிடப் படவேண்டிய ஒன்றாகும். இந்தியாவின் தலைநகரில் இந்தக் குழுவின் நிகழ்ச்சியை 15.10.1982 அன்று பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்கள் கண்டு களித்துப் பெரிதும் பாராட்டினார் என்றும், பாது காப்பு அமைச்சர் திரு வெங்கட்ராமன் அவர்கள் பாராட்டுதல் தெரிவித்தார் என வும் அறிகிறோம்.

இதேபோன்று தருமபுரி காவல்துறை விளையாட்டுக் குழுவினரின் கைப்பந்துக் குழு, கபாடிக்குழு ஆகியவை மிக வேக மாக வளர்ந்து, பல இடங்களில் வெற்றி பெற்று வருகின்றன. தருமபுரியில் 1966 முதல் 110 பேர்கள் கொண்ட ஊர்க் காவல் படையினர் கிருஷ்ணகிரியிலும், தருமபுரி யிலும், பொதுமக்களுக்கும், காவல் துறை யினருக்கும் இணைப்புப் பாலமாக இருந்து திறம்பட உதவுகின்றனர்.


கடந்த 3 ஆண்டுகளில் குற்றங்கள் பெருகியிருப்பினும், தருமபுரி காவல்துறை யினரின் கடமை தவறாத அரும்பணியின் மூலம் சராசரியாக 1980ல் 64 சதவிகிதமும் 1981ல் 78.4 சதவிகிதமும், 1982ல் 80 சத விகிதமும் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. மேலும் மீட்கப்பட்ட சொத்துக் கள் 1980ல் 67 சதவிகிதம் 1981ல் 81 சத விகிதம் ,1982ல் 78 சதவிகிதமாக இருப் பது ஒரு நல்ல நிலைமையாகும்.

### காவலர்கட்குக் குடியிருப்பு வசதி

காவலர் நலன் கருதி வறட்சி நிவா ரணத் திட்டத்தின் கீழ் தருமபுரி, கிருஷ்ண கிரி உட்பட 9 இடங்களில் காவலர் குடி யிருப்புகளில் குழாய்க்கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும் தருமபுரியில் ஆயு தப்படையினருக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக 1.11.1982ல் முதல் கட்டமாக 132 வீடுகள் ரூ. 30 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளது. மேலும் 150 வீடுகளும் 4 காவல்நிலையங்களும், கட்டுவதற்கு, மிகப் பெரிய அளவிலான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### விருதுகள்

தருமபுரி காவல்துறையினர் பல பணி களில் சிறந்து விருதுகள் பெற்று வருகின்ற னர். 1979ஆம் வருடம் திரு ஆறுமுகம்,



**மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு விஜயகுமார்.**

(இளம் உதவி ஆய்வாளர்-ஆயுதப்படை) தீரச்செயல் புரிந்தமைக்கு இந்தியப் பிர தமரின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். 1981ல் திரு எஸ்.சிவகுரு, (ஆய்வாளர்) திரு வெள்ளையன் (ஆய்வாளர்) ஆகியோர் தமிழக முதல்வர் அவர்களின் விருதுகளைப் பெற்றுள்ளனர். 1982ல் அண்ணா பதக் கத்தை துணைக் கண்காணிப்பாளர் திரு எம். தாமோதரன், ஆய்வாளர்கள் திரு எஸ்.சிவகுரு, திரு வி.வெள்ளையன், திரு கே.கே. ரங்கசாமி ஆகியோரும், உதவி ஆய்வாளர் திரு டி. சின்னராஜ், முதல் நிலைக்காவலர் எண். 235 திரு கே.வி. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் மற் றும் 16 காவலர்களும் முதல்வர் விருதுகள் பெற்றுள்ளனர்.

குறைந்த எண்ணிக்கையான காவலர் களைக் கொண்ட சிறிய மாவட்டமாக இருப்பினும் பல அரும்பணிகளைத் தரும புரி காவல் துறையினர் செய்து பலவகை களில் சிறப்புப் பெற்றுள்ளனர் என்னும் செய்தி குறிப்பிடத்தக்கதாகத் திகழ்கிறது.




**தள்ளுபடி விற்பனை மீண்டும் 31-12-82 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

| | உரத்தின் பெயர் | 50 கிலோ மூட்டையின் தற்போதைய விலை | 50 கிலோ மூட்டைக்கு தள்ளுபடி | 50 கிலோ மூட்டைக்கு புதிய விலை |
|---|---|---|---|---|
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1) | பாமணி 17:17:17 | 133-00 | 4-00 | 129-00 |
| 2) | இஃப்கோ 10:26:26 | 152-57 | 4-00 | 148-57 |
| 3) | யூரியா (எல்லா வகைகளும்) | 121-56 | 3-00 | 118-56 |
| 4) | பாக்ட் 17:17:17 | 134-41 | 4-00 | 130-41 |
| 5) | டான்பெட் கலப்பு உரங்கள் (அனைத்து ரகங்களுக்கும்) | மூட்டை ஒன்றுக்கு ரூ. 3/- தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். | | |

உங்கள் கூட்டுறவு சங்கமே டான்ஃபெட்டின் ஏஜண்ட்.

---

விவசாயம் செழிக்க
விளைச்சலைப் பெருக்க
உதவிடும் கரங்கள்
பாமணி உரங்கள்.

பாமணி

TANFED

**தமிழ்நாடு கூட்டுறவு
விற்பனை இணையம்
சென்னை-600 018.**

Sobhagya



# மாவட்ட நூலக ஆணைக் குழு

நூலகம் என்பது ஒரு கலங்கரை விளக்கம் போன்றது. நூலகம், பொது மக்களின் பல்கலைக் கழகம் என்று எல்லோராலும் போற்றப்படுகின்றது. ஒரு மனிதனுக்குக் கல்வி அறிவு மட்டும் போதாது, உலக அறிவும் வேண்டும். அதை நூலகம் வழங்குகிறது. பட்டம் பெறும் முயற்சிக்கு கல்வி மட்டும் போதாது பட்டறிவும் வேண்டும். வாழ்நாள் எல்லாம் அறிவு வளர்ச்சிக்குக் கல்விவேண்டுமானால், நூலகம் தேவைப்படுகின்றது. இதற்கு, மக்கள் பொது நூலகத்தைத்தான் நாட வேண்டியுள்ளது. மக்களுக்காக மக்களால் மக்களே நடத்தி வருவது பொது நூலகம்.

பொது நூலகத்தின் நோக்கம் யாதெனில் குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்குச் சிறந்த பணி செய்வதாகும்.

இந்திய நூலகத் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் எஸ்.ஆர் ரங்கநாதன் அவர்களின் சீரிய முயற்சியால் பொது நூலகச் சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1948-ஆம் ஆண்டு சட்ட வடிவம் பெற்றது. பின்னர் 1950-ஆம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டம் அமலுக்கு வந்தது. அதன் வழி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு நூலக ஆணைக் குழு ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நூலக ஆணைக்குழுவிற்கும் கல்வி அதிகாரியே செயலாளராக, அமைந்து, கூடுதல் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல கிளை நூலகங்களும் மாவட்ட மைய நூலகமும் திறக்கப்பட்டன. நூலக ஆணைக் குழுவிற்குப் பல உறுப்பினர்களும் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு நூலகங்களை நடத்தி வந்தார்கள்.

பொது நூலக இயக்குநர் என்ற பதவி 1-8-1972-ல் ஏற்படுத்தப் பெற்று நூலகம் தனியாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் கல்வி அலுவலர் கூடுதல் செயலாளராக இருக்கும் பொறுப்பிற்குப் பின்னர் 17-2-1977 முதல் எல்லாவருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நூலக அலுவலர் அவர்களை நியமித்தார்கள். தருமபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்த பின்னர், பல ஆண்டுகள் கழித்து 3-6-1971-ல் தருமபுரி நூலக ஆணைக்குழு தனியாக இயங்கத் துவங்கியது.

தருமபுரி மாவட்ட மைய நூலகம் 1-1-1975-ல் திறக்கப்பட்டது. அப்போது ஒரு மைய நூலகமும், 34 கிளை நூலகங்களும் இருந்தன.

நூலகமானது வீட்டு வரி மற்றும் சொத்து வரி செலுத்துவதில் ரூபாய் ஒன்றுக்கு 5 காசு நூலக வரியாக உள்ளாட்சித் துறையினரால் வசூலிக்கப்படுகிறது. அதற்கு இணையாக அரசு சட்டு மானியம் அளிக்கின்றது. எனவே அந்த நிதித் தொகையில் தான் நூலகம் இயங்கி வந்தது.

தருமபுரி மாவட்டம் சிறிய மாவட்டம் மட்டுமல்ல, நிதிப் பற்றாக்குறை மாவட்டமும் ஆகும். அதனால் நூலக வளர்ச்சி பாதிக்கப்பட்டது.


தமிழக அரசு 1-4-1974-லிருந்து நூலக ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி பணப்பயன் 1-4-1979 முதல் அமல் செய்தது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு கல்வி அமைச்சர், தலைமைச் செயலர், நிதிச் செயலர், கல்விச் செயலர் முதலியவர்களின் பெரு முயற்சியால் 1-4-1982 முதல் நூலக ஊழியர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட்டனர்.

தருமபுரி மாவட்ட மைய நூலகத்திற்குச் சிறந்த சொந்தக் கட்டிடம் இல்லையே என்ற குறை நீண்டநாட்களாகஇருந்துவந்தது. அதன் பொருட்டு 28-4-1982ல் தருமபுரியின் மையப் பகுதியான நெசவாளர் குடியிருப்பில் அழகானதொரு இடத்தில் உள்ள காலி மனை, மாவட்ட மைய நூலகம் கட்டுவதற்காக வாங்கப்பட்டது.

16-9-1982ஆம் நாளிட்ட தமிழக அரசு அரசாணை பல்வகை எண். 2079-ன் படி 5 லட்சம் ரூபாய் மைய நூலகம் கட்ட நிதி உதவி செய்யபபட்டுஉள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலான மாவட்ட வளர்ச்சிக்குழு இக் கட்டடத்தை இவ்வாண்டுக்குள் சிறப்பாகக் கட்டி முடிக்க உள்ளது.

தருமபுரி நூலக வளர்ச்சிக் குழு, நூலகக் கட்டடத்திற்கு அன்பளிப்பாக ரூ.5,000 அளித்துப் பெருமையைத் தேடிக் கொண்டது. மாவட்டத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் உள்ள ஊர்கள் வருமாறு: அஞ்செட்டி, அமானி மல்லாபுரம். வாடகையற்ற இலவசக் கட்டடம் 15; வாடகையுடன் நடைபெறும் நூலகக் கட்டடம் 20.

நூலகத்தின் சிறப்பம்சமாகத் திகழும் நடமாடும் நூலகம் (மூன்று சக்கர மிதி வண்டி) தருமபுரி,



## மரமும் முழக்கமிடும்!

கலைத்திறமையை உணர்த்துவதற்குக் 'கல்லும் கவிபாடும்' என்று சிறப்பித்துச் சொல்வார்கள். பையூரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிடுவோருக்கு 'மரமும் முழக்கமிடும்' என்று சொல்லத் தோன்றும். அங்குள்ள மரங்களில் எல்லாம் வேளாண்மையின் பெருமையை எடுத்துரைக்கும் முழக்கங்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றில் சில -

கரம்பு உழுது
கம்பு விதை

உழவின் மிகுந்த
ஊதியம் இல்லை

உழுதொழில் நிற்கின்
மறுதொழில் இல்லை

உள்ள களையை விட்டவன்
உலகத்திற்கே கெட்டவன்.

வீட்டிற்குச் செல்வம் மாடு
தோட்டத்திற்குச் செல்வம் தென்னை.

கல்லாவி, மாரண்டஹள்ளி, பாப்பாரப்பட்டி, பருகூர், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, ஊத்தங்கரை ஆகிய 8 ஊர்களில் இயங்கி வருகின்றது.

நிலைய உறுப்பினர் பதிவு மூலம் நூல்வழங்கும் நிலையம் (Institutional Library) தருமபுரி உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் (பொது), தருமபுரி உதவி காவல் கண்காணிப்பாளர் (சிஐடி), தருமபுரி ரிசர்வ் உதவி காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி உதவி காவல் துணை கண்காணிப்பாளர், ஒசூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம்என 5 இடங்களில் உள்ளது.

தருமபுரி மைய நூலகத்தின் மொத்த உறுப்பினர்கள் 4480; நூல்கள் இருப்பு 21928; வாசகர்கள் வருகை 85,353; கலந்தறிதல் 9308; நூல் இரவல் கொடுத்தல் 30,361

கிளை நூலகங்களில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 26,527

| | |
|---|---|
| வாசகர்கள் | 7,50,868 |
| கலந்தறிதல் | 94,181 |
| நூல் இரவல் வழங்கல் | 1,65,852 |
| மொத்த நூல் இருப்பு | 2,05,056 |


அதியமான் கோட்டையில் 30-12-1981-ல் புதிய நூலகம் திறக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 1982-'83-ல் அரூர் வட்டம் மொரப்பூரில் புதிய நூலகம் திறக்கப்பட உள்ளது. அவ்வூர் மக்கள் ஊரின் மையப் பகுதியில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் வழங்க முன் வந்துள்ளனர். பல ஊர்களில் நூலகங்கள் திறக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன.

### நூல்கள் அறிமுகக் கருத்தரங்கு மற்றும் தேசிய நூலக வார விழா

1977 ஏப்ரல் திங்கள் முதல் தொடங்கி மாவட்ட மைய நூலகத்திலும், கிளை நூலகங்களிலும் நூலகங்களிலும் வாசகர்கள் ஆர்வத்திற்கேற்ப மாதந்தோறும் புதிய நூல்களைக் காட்சிக்கு வைப்பதுடன் அறிஞர்களைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. தேசிய நூலக வாரவிழா நவம்பர் 14 முதல் 20 முடிய ஆண்டுதோறும் ஒரு வாரம் கொண்டாடப்படுகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற தமிழ்நாடு அரசு ஆற்றி வரும் அருந்தொண்டின் காரணமாக தருமபுரியில் நூலக இயக்கம் வளர்ந்தோங்கி வருகின்றது.

## சிதைந்த கோட்டை பேசும் வரலாறு



ஒசூரில், கடல்போலக் காட்சி தருகிறது ஓர் ஏரி. அதன் அருகே கோட்டை ஒன்று சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது. இராமநாயக்கர் என்னும் பாளையக்கார அரசரால், ஏரியும், கோட்டையும் உருவாக்கப்பட்டுள்ளன. முகமதியர்களின் படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே கோட்டை உருவாக்கப்பட்டதாம். கோட்டையின் உள்ளே கிணறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது; ஏரியின் தண்ணீர் குகைப்பாதை ஒன்றின் மூலமாக, உள்ளே உள்ள கிணற்றுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

பின்னர் இக்கோட்டை, மைசூரை ஆட்சி செய்த திப்பு சுல்தானால் கைப்பற்றப்பட்டது. பிரெஞ்சு நாட்டுப் பொறியாளர் ஹாமில்டன் என்பவரின் உதவியுடன், அகழிகள் நிர்மாணித்து, கோட்டையை வலுவுள்ளதாக்கினார் திப்பு. கீழ்நில (சுரங்க) மாளிகை ஒன்றையும் அமைத்துப் பாதுகாப்புச் செய்திருந்தார். பின்னர் இந்தக் கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

அந்நாளில் சேலம் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த பிரட் என்பவர், ஒசூரைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். அவர், இங்கிலாந்தில் இருந்த தனது மனைவியை வரவழைக்க விரும்பினார். ''ஸ்காட்லாந்தில் உள்ள கென்னல் வொர்த் மாளிகை போன்ற அழகிய மாளிகையை அமைத்துத் தந்தால் நான் இந்தியாவுக்கு வந்து வசிப்பேன்'' என்று அந்த அம்மையார் கூறிவிட்டார். அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக பிரட், அரசுக் கருவூலத்திலிருந்து பெருந் தொகையைச் செலவிட்டு 1861ல் தொடங்கி 1864ல், அழகிய மாளிகையைக் கட்டி முடித்தார்.

அரசின் பணத்தைச் செலவு செய்த குற்றத்திற்காக அவர் மீது இங்கிலாந்து மக்கள் சபையில் குற்றம் சாட்டப்பட்டது. இந்தியாவில் அவர் செய்த சிறந்த இராணுவத் தொண்டின் காரணமாக மன்னிக்கப்பட்டார். 10000 ரூபாயை அவருக்குக் கொடுத்து, அரசே இக்கோட்டையை 1875ல் மேற்கொண்டது. பின்னர் இக்கோட்டையும் இதனைச் சேர்ந்த 1,003 ஏக்கர் நிலமும் அரசால் விற்கப்பட்டு, பலரது நிர்வாகத்தின் கீழ் வந்தது. தற்போது வழக்கறிஞரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமாகிய திரு முனிரெட்டி அவர்களின் உடைமையாகியுள்ளது.



# தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிட, பழங்குடியினர் நலன்

ஆதி திராவிடர் நல்வாழ்வுக்கும் பழங்குடிமக்களின் உயர்வாழ்வுக்கும் தமிழக அரசு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி ஆற்றி வரும் தொண்டுகள் பலப்பல

கல்வியைப் போல் செல்வம் கிடையாது என்பதை உணர்ந்துள்ள தமிழக அரசு, தருமபுரி மாவட்டத்தில் கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 700 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவ மாணவியர்க்கு ரூ. 7 லட்சம் உபகாரச் சம்பளமாக வழங்கியுள்ளது.

## இலவசப் புத்தகங்கள் :

உயர்நிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகள் 1400ல் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்க்கு இலவசமாகப்பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

67 மாணவ, மாணவியர்க்குத் தட்டச்சுப் பயிற்சிக்காக ரூ.3,400 செலவிடப்பட்டுள்ளது.

## பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் இருக்கும் சித்தேரி மலையில் வாழும் பழங்குடி மக்கள் மேம்பாட்டிற்கென 'ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் திட்டம், (Intergrated Tribal Development Programme) பழங்குடி மக்கள் துணைத்திட்டமாக (Tribal Sub-plan ) நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு முழுவதும் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்திட்டம் அமுல் படுத்தப்பட்டு வரும் 9 மலைகளில் இதுவும் ஒன்றாகும். 3,44,338 எக்டேர் நிலப்பரப்பு கொண்ட இம் மலை அரூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் அரூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும், பாப்பிரெட்டிபட்டியில் இருந்து 40 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 3300 அல்லது 3400 அடி உயரத்தில் உள்ளது. மொத்தப் பரப்பில் 30,064 எக்டேர் ஒதுக்கப்பட்ட காடுகளாகும்.. 5040 எக்டேர் விவசாயம் செய்ய வசதி உள்ளதாகவும் இருக்கிறது.

சித்தேரி மலைப்பகுதியைச் சார்ந்த 41 கிராமங்களில் 26,991 மக்கள் வாழ்கிறார்கள். இதில் பழங்குடி மக்கள் 13,606 பேர் உள்ளனர். பெரும்பாலும் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். குறிப்பாக, சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய பயிர்களை மழையை நம்பியே விவசாயம் செய்கின்றனர். இப்பகுதியில் அத்தியாவசியத் தேவையான போக்குவரத்து, கல்வி, நீர்ப்பாசனம், கைத்தொழில்கள், மருத்துவம் போன்ற வசதிகள் அளிக்க மேற் கூறப்பட்ட திட்டத்தின் (I.T D.P.)மூலம் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## வேளாண்மை

தமிழ்நாடு தோட்டக் கலைத் துறையினரால் இப்பகுதியில் வாழும் பழங்குடி மக்களுக்கு விவசாய விதைகள், பழச்செடிகள், பூச்சி மருந்து, விவசாயக் கருவிகள் முதலியன வழங்கப்பட்டு வருகின்றன.

### கால் நடை வளர்ப்பு

கடந்த ஆண்டுகளில் இத் துறையின் கீழ் ரூ. 4,93,000 செலவிடப்பட்டு, நடப்பு ஆண்டில் கறவை மாடுகள் 20, ஆட்டு மந்தைகள் 10, வெள்ளாட்டு மந்தைகள் 20, உழவு மாடுகள் 20, கன்றுகள் 10 மொத்தம் ரூ. 1,12,900 செலவில் வழங்கப்பட உள்ளன.

### காட்டு வளம்

கடந்த ஆண்டுகளில் ரூ. 47,500- செலவில் 100 எக்டேர் பரப்பில் மூங்கில் கன்றுகள் பயிரிட விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 59.7 எக்டேர் பரப்பில் ரூ. 22,109.45 செலவில் வனச் செடிகள் நடும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. வனத் துறையினருக்குக் குடியிருப்பு இடங்களும் கட்டித் தரப்பட்டுள்ளன

### கிராமத் தொழில்கள்

ரூ. 1,35,000 மதிப்பீட்டில் தேனீ வளர்க்க சங்கக் கட்டடம் கட்ட ஆயத்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. 1977-78 முதலிய ஆண்டுகளில் தேனீ பெட்டிகளும் 1150 தேன் எடுக்கும் கருவிகளும் 80 விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

### கல்வி

பழங்குடியினரின் சந்ததியினரில் பிற்கால மற்றும் நற்காலத்தைக் கருத்தில் கொண்டு இதுகாறும் பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகள் 9, சித்தேரி மலைப்பகுதிகளில் துவக்கப்பட்டுச் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. அவை வருமாறு:

நரிப்பள்ளி ,சூரியகடை, புதுக்கோட்டை சரடு, கலசபாடி, வேலாம்பட்டி, எஸ்தாம்பட்டி, வாழைத்தோட்டம்,நொச்சிக்குட்டை, சித்தேரி.

### கூட்டுறவு

சித்தேரியில் பழங்குடியினர் மேம்பாட்டுக்கெனப் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று துவக்கப்பட்டு, பல்நோக்கு நியாய விலைக் கடை ஒன்று இயங்கி வருகிறது. இக் கூட்டுறவுச் சங்கத்தினால், பழங்குடியினருக்குக் குறுகியகாலக் கடன், மத்திய காலக் கடன், நுகர்வோர் கடன் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

### சமூக நலம்

சித்தேரி மலைப்பகுதிகளில் 17 இடங்களில் பழங்குடியினரின் மழலைக் குழந்தைகளுக்கென 'குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டுப் பணியாற்றி வருகின்றன.

### மருத்துவம்

சித்தேரி மலைப்பகுதியில் ஒரு மருத்துவமனை அரசினரால் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் முழுநேர மருத்துவர் பணியாற்றி வருகின்றனர்.

### குடிநீர் வசதி

இதுகாறும் 19 குடியிருப்புகளில் ரூ. 4,20,502 செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. சித்தேரியில் ரூ. 1,05,000 செலவில், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வசதி செய்ய அரசு ஆணையிட்டு விரைவாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. தவிர, நடப்பு ஆண்டில் ரூ. 2,85,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 இடங்களில் இத் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

### சாலை வசதி

அனைத்துத் திட்டங்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் அரூரிலிருந்து சித்தேரிக்கு 25 கி.மீ. தூரத்திற்கு ரூ. 65 லட்சம் மதிப்பீட்டில் மலைப்பாதை அமைக்கத் தமிழக அரசால் ஆணையிடப்பட்டுச் சாலை அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப் பெற்று சித்தேரி மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் நீண்ட காலத் தேவை, நிறைவேற்றப்படும்.

### துணிகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நலப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிட மாணவர் மாணவியருக்கும், விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிட மாணவர் மாணவியருக்கும் மற்றும் பழங்குடி மாணவர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் ஆண்டுதோறும் 2 செட் துணிகள் (பொங்கல் மற்றும், தீபாவளி பண்டிகை) வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்கு 4586 மாணவர்களுக்கும் 2568 மாணவியருக்கும் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

### தீண்டாமை ஒழிப்பு

ஆண்டு தோறும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளும், தீண்டாமை ஒழிப்பின் கீழ் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் ஆதிதிராவிட கிராமங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1981-82 ஆண்



## பனை மரம் சிறந்த மத்தூர்

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 5 லட்சம் பனை மரங்கள் உள்ளன. இவற்றில் 3½ லட்சம் பனைகள் மத்தூர்ப் பகுதியில் மட்டுமே இருக்கின்றன.

டுக்கு காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்த புலியூர்ஆதி திராவிட காலனி சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசு ரூ. 1000 வழங்கப்பட்டது. இரண்டாம் பரிசு ரூ 500 ஏழு கொண்டனூர் காலனிக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு வானொலிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் கடைசி வாரம் தீண்டாமை ஒழிப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாரத்தில் ஆதிதிராவிடர்களுக்காகச் செய்யப்படும் திட்டங்கள் பொது மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றன. கலப்புத் திருமணம் செய்து கொண்ட இரண்டு இணைகளுக்கு 1981-82ஆம் ஆண்டு தலா ரூ 4000 நிரந்தர வைப்புத் தொகையாகவும் ரூ. 300 திருமணச் செலவிற்காகவும் ஆக மொத்தம் ரூ. 8600 வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### இறுதிச் சடங்கு நிதியுதவி

ஆதி திராவிடர் குடும்பத்தில் இறந்தவருக்கு இறுதிச் சடங்கு செய்ய ரூ. 50 வீதம் ஊராட்சி ஒன்றியத்தினால் கொடுக்கப்படுகிறது. சென்ற ஆண்டு 1180 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 59000 வழங்கப்பட்டுள்ளது.



### சத்துணவுத் திட்டம்

ஆதி திராவிடர் நலத்துறையைச் சார்ந்த சத்துணவு மையப்பள்ளிகள் 20ல் 2128 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

### பள்ளிகளின் எண்ணிக்கை

ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் 11ல், 1651 குழந்தைகளுக்கும், அரசு மலைவாழ் உறைவிடப் பள்ளிகள் 9ல், 477 குழந்தைகளுக்கும் ஆக மொத்தம் 2128 குழந்தைகளுக்கு ஆதிதிராவிட நலத்துறையினரால் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

தருமபுரி ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் அரசு மாணவர்கள் விடுதி 21 மாணவியர் விடுதி 6 இயங்கி வருகின்றன. இதில் மொத்தம் 1532 மாணவ, மாணவியர் தங்கிப் படித்து வருகின்றனர். இவற்றைத் தவிர ஆதி திராவிட நலப்பள்ளிகளுக்கு 10, உயர் நிலைப்பள்ளி 1 பழங்குடி மக்கள் உறைவிடப் பள்ளிகள் 10 இயங்கிவருகின்றன.

### இலவசப் புத்தகங்கள்

ஆரம்பப் பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளில் (ஊராட்சி ஒன்றியம் நகராட்சிப் பள்ளிகள் உட்பட) படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு ஆண்டு தோறும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### சுகாதாரம் குடிநீர்த்திட்டங்கள் மற்றும் இதர வேலைகள்

இவ்வாண்டிற்கு இத் திட்டத்திற்குக் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு ரூ. 420,000 ஆகும். இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு இதுவரை ரூ. 2,91,000 செலவு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிட குடியிருப்புகளில் தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு நன்கு செயல் பட்டும் வருகின்றன.

### நில ஒப்படை

தருமபுரி மாவட்டம் தனியாகப் பிரிந்து செயல்பட ஆரம்பித்த (2.10.1965ல்) நாளிலிருந்து 30.10.1982 முடிய இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட 948.27 ஏக்கர்நிலம், நில ஒப்படை நடவடிக்கைகள் மூலம் அரசால் கைப்பற்றப்பட்டு வீடற்ற ஆதி திராவிடர்கள் 13153 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்குச் செலவான தொகை ரூ. 33.80 லட்சம் ஆகும்.



### உழவு மாடுகள் வாங்க மானியம்

ஆதி திராவிடர்கள் 9 பேருக்கு ரூ. 5400 பழங்குடியினர் 12 பேருக்கு ரூ. 7200 மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர்கள் 2 பேருக்கு ரூ1200, ஆகமொத்தம் ரூ. 13800, உழவுமாடுகள் வாங்குவதற்கு 1981-82ல் வழங்கப்பட்டுள்ளது.

### சிறு தொழில்கள் கடன்

சிறு தொழில் செய்யக் கடன் கோரி வந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 81-82ம் ஆண்டில் 44 நபர்களுக்கு ரூ. 28900, சிறு தொழில் செய்ய, வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### தன்னிறைவுத் திட்டம்

1981-82ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 5,58,714 பல்வேறு நல வேலைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தருமபுரி மாவட்டத்தில் ஆதி திராவிட பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காக அரும் பெரும் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ளன - நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## தருமபுரி மாவட்டத்தில்

# வேளாண்மைப் பொறியியல் பணி



தருமபுரி மாவட்டம் ஒரு பின் தங்கிய மாவட்டம். இம்மாவட்டத்தில் மழையின் அளவும், சராசரி மனித வருமானமும் மிகக் குறைவாகும். ஆதலால் இம்மாவட்டம், வறட்சிக்கு இலக்காகும் மாவட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையே முக்கியமாய்க் கொண்ட இந்த மாவட்ட மக்கள் இயன்றவரை விவசாயத்தை மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்கி, தொழில் வளத்தையும் அதிகப்படுத்த அரும்பாடுபட்டு வருகிறார்கள். இங்குள்ள மக்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும் தட்டி எழுப்பி அவர்கள் விஞ்ஞான உண்மைகளைக் கடைப்பிடித்து நல்ல முறையில் வேளாண்மை செய்ய வேளாண்மைப் பொறியியல் துறை வழி வகைகள் செய்து ஊக்கமளித்து வருகிறது. தமிழக அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் ஒரு செயற் பொறியாளர் அலுவலகத்தைத் தருமபுரியில் நிறுவி, அதன் கீழ் ஏழு உப கோட்டங்களை அமைத்துப் பல்வேறு பணிகளை இயக்கி வருகிறது.

### மண் வளப் பாதுகாப்புத் திட்டம்

விவசாய நிலங்களில்-குறிப்பாக சரிவுகளில் பெரும் மழையினாலும், காற்றினாலும் மேல் மண் கரைந்து காட்டாறுகளிலும் ஓடைகளிலும் குழம்பாக ஓடி வீணாகிறது. நிலத்தில் மேலே உள்ள முதல் 6 அங்குல மண் தான் பயிர்களின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருள்களையும் கொண்டதாகும். பல விளைவுப் பயிர்கள் நல்ல மகசூல் கொடுக்காததற்குக் காரணம் இந்த மண் அரிப்பே! ஒரே ஆண்டில் 2 சதவிகிதம் சரிவுள்ள பயிரிடப்பட்டுள்ள ஓர் ஏக்கர் நிலத்திலிருந்து சுமார் 30 டன் மண் மழையினாலும், காற்றாலும் வெளியே அரித்துக் கொண்டு செல்லப்படுகிறது. மழையினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்க சரிவுக்குக் குறுக்கில் வரப்புகள் போட வேண்டும். சம மேட்டு இடங்களை இணைத்து வரப்புப் போடுவதைத்தான் சம உயர வரப்புக்கள் என்கிறோம். மேற்படி இடங்களை வரப்பின் மூலம் இணைப்பதால் மழை நீர் வேகம் தடுக்கப்பட்டு நீர் ஒரே சீராக ஓடும். நிலத்திலும் நீர் தேங்க ஏதுவாகும்.



ஒரு குறிப்பிட்ட பகுதியில், பெய்யும் மழை நீரானது ஒன்று திரண்டு ஒரு குறிப்பிட்ட வடிகால் வழியாக வெளிச் செல்லுகையில் அக்குறிப்பிட்ட பகுதியினை அந்த வடிகாலின் நீர்ப் பிடிப்புப் பகுதி எனக் கூறுகின்றோம். சிறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிலச் சமன் செய்தல் நீர்ப்பாசனக் குழாய் அமைத்தல் போன்ற பல்வேறு நில அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மண்ணின் ஆழம் குறைவாகவும் பயிர் செய்வதற்கு உபயோகம் அற்றதாகவும் உள்ள பகுதிகளில் மண் அரிப்பைத் தடுக்க புல்செடிவகைகளை வளர்க்க உதவப்படுகிறது. இவ்வாறு நீர் பிடிப்புப் பகுதி வாரியாக திட்டப் பணிகளை விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலங்களில் நன்கு செயல்படுத்துவதற்கு வசதியாக இம்மாவட்டத்தில் இரண்டு உபகோட்டங்களின் கட்டுப்பாட்டின் கீழ் 10 பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் வாயிலாக, கீழ்க்கண்ட நன்மைகளை விவசாயிகள் அடைகிறார்கள்.

மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

ஓடையில் அரிப்பும், பெருக்கமும் குறைக்கப்படுகின்றன.

காட்டு நிலங்களில் மழைநீர் தேங்கி மண் வளமடைகிறது.


நீரும், வளமும், மண்ணும் நன்முறையில் இருப்பதால் மகசூல் அதிகரிக்கிறது.

பூமிக்கடியில் நீர் தேக்கம் அதிகரிப்பதால் கிணறுகளில் அதிக அளவு நீர் கிடைக்கிறது.

ஏரிகள் மற்றும் ஏராளமான பணச் செலவில் கட்டப்படும் அணைகள் இவைகளில் வண்டல் படிந்து கொள்ளளவு குறைக்கப்படுவது தடுக்கப்படுகிறது.

### கசிவு நீர்க் குட்டைத் திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசனம் பெரும்பாலும் கிணறுகளிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் தான் பெறப்படுகிறது. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் அதிகமாகக் கிணறுகளைத் தோண்டியும், ஏரிகளை அமைத்தும் தண்ணீரை அதிக நாள் தேக்கம் செய்து பாசனத்தைப் பெருக்க வேண்டும். ஆகவே பெய்யும் ஒவ்வொரு மழைத் துளியையும் பத்திரமாகச் சேகரித்து வைப்பதற்கு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால் மேட்டுப் பாங்கான இடங்களில் பெய்யும் மழை நீர், உடனடியாகக் கீழ் நோக்கி ஓடைகளுக்கும் ஆறுகளுக்கும் செல்லாமல் தேக்கி நிறுத்தப்பட்டு, நீர், பூமிக்கு அடியில் ஊறுவதற்கு அதிக வாய்ப்பளிப்பதால் நிலத்தடி நீர் ஊற்று அதிகரித்து ஒவ்வொரு கசிவு நீர்க்குட்டையின் கீழ்ப்பகுதியிலும் 3000 அடி சுற்றளவில் உள்ள கிணறுகளில்



பாம்பாறு நீர்த்தேக்கம்

நீர்மட்டம் உயருகிறது.

கசிவு நீர்க் குட்டைகளினால் ஏற்படும் பயன்கள்:

மழை நீரினால் ஏற்படும்மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

பயனின்றி ஓடும் மழை நீரைத் தடுத்து விவசாயத் திற்குப் பயன்படுத்த உதவு கிறது.

கிணறுகளின் நீர்மட்டம் அதிகரிக்கப்படுகிறது.

கால்நடைகளுக்குக் குடிநீராகப் பயன்படுகிறது.

மீன் வளர்ப்பதற்கு உதவு கிறது.

அதிக அளவு நீர் கிடைப்ப தால் தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்ற ஏதுவாகிறது.

புதிதாகக் கிணறுகள் வெட்ட ஏதுவாகிறது. வறுமையில் வாடும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து நிவாரணம் செய்ய உதவுகிறது.

**பாம்பாறு நீர்ப் பாசனப் பரப்பு அபிவிருத்தித் திட்டம்**

பொதுவாக நீர்ப்பாசன வசதி கள் செய்ய அணைகள் மற்றும் கால்வாய்கள் அமைப்பது வழக் கம். அணைகளால் பயன்பெறும் பாசனப் பரப்பில் உள்ள நிலங் களில் வாய்க்கால்களை விவசாயி கள் தாங்களாகவே அமைத்துக் கொள்வார்கள். இவ்வாறு செயல் படுத்தும் போது ஒரே சீரான முன்னேற்றம் ஏற்படாததுடன் ஒரு சில பெரும் விவசாயிகளே பயனடைவது அறியப்பட்டது. எனவே அகில இந்திய ரீதியில் ஆராய்ச்சி செய்து புதிய அணை கள் கட்டுமிடங்களில் நீர்ப்பாச னப் பரப்பு அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ள முடிவு செய்து மாநிலத்திலேயே முதன் முதலாக மிகவும் பின் தங்கியதாகவும், வறட்சிக்கு இலக்காகும் பகுதி யாகவும் விளங்கும் தருமபுரி மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் பாம்பாறு அணையின் நீர்ப்பாசனப் பரப்பில் அபிவிருத் தித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்திலேயே மிகவும் வறண்ட வட்டங்களான ஊத்தங்கரை மற்றும் அரூர்ப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதியில் நீர்ப் பாசனப் பரப்பில் உள்ள மேடு பள்ளங்களையும் தரிசுகளையும் மண் தள்ளும் இயந்திரம் கொண்டு சமன் செய்து பாசனத்திற்குத் தகுதியுடையதாக ஆக்கப்படு கிறது. பெரிய வாய்க்கால் மற் றும் கண்மாய்கள் மூலம் வரும் நீரினை ஒவ்வொரு விவசாயியும் சீராகப் பெறக் கால்வாய்கள், நீர்ப்பாசனத் தொட்டிகள் முதலி யவை அமைத்துக் கொடுக்கப்படு கின்றன.

**திட்டத்தின் நன்மைகள்**

மேடு பள்ளங்களாகவும், தரி சாகவும் உள்ள நிலங்கள் சமன் செய்யப்பட்டு, சீரான நீர்ப் பாசன வசதி கிடைக்கிறது.

அனைத்து விவசாயிகளும் நீரைச் சேதப்படுத்தாமல் பயிர்த் தேவைக்கேற்பப் பாய்ச்சுவதற்கு வசதி கிடைக்கிறது.

கடைசி மடைப் பகுதியி லுள்ள விவசாயிகளும் சீரான பாசன வசதிகள் பெற ஏது வாகிறது.

ஒரு போக விளைச்சலுக்கே வசதியற்ற பகுதிகளில் இரு போக விளைச்சல் பெற முடி கிறது. அதனால் கூடுதல் வரு மானம் பெற ஏதுவாகிறது.

குறுவிவசாயிகள், சிறு விவ சாயிகள் மற்றும் எல்லா விவசாயிகளும் சீரான முன் னேற்றம் காண முடிகிறது.

**கடத்தூர் அணை நீர்ப்பிடிப்புத் திட்டம்**


தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து வரும் வறட்சியை நீக்க நான்காம் ஐந்தாண்டுத் திட் டத்திலிருந்து வறட்சிக்கு இலக் காகும் பகுதித் திட்டத்தை தரும புரி மாவட்ட அபிவிருத்திக் கழ கத்தின் மூலம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தி வரு கிறது. ஒரு குறிப்பிட்ட துணை நீர்ப்பிடிப்புப் பகுதியை எடுத்து அதில் நீர்வளம், நிலவளம் மற் றும் மக்களின் வாழ்க்கைத் தரத் தையுயர்த்த நீர் மற்றும் மண் பராமரிப்பு முறைகளின் தொழில் நுட்பங்களை வேளாண்மைக் குடி களிடையே புகுத்தி வருமானத் தைப் பெருக்க ஊக்குவிக்கப்படு கிறது.

மண் அரிப்பு, ஓடைகள் அரிப்பு மற்றும் பெருக்கம் குறைக்கப்படுகிறது.

கிடைக்கும் மழை நீரை ஆங்காங்கே தேக்கி நிலத்தடி நீரைப் பெருக்க உதவுகிறது.

மேடு பள்ளங்கள் சமன் செய்யப்பட்டு, நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக் கப்படுகின்றன.

விவசாயிகளுக்கு ஆடு, மாடு, கோழிகள் முதலியன வாங்க மானியம் வழங்கப்படுகிறது:



ஒரு கசிவு நீர்க் குட்டை

கசிவு நீர்க் குட்டைகளின் மூலம் அதிக நிலம், பாசனத் துக்குக் கொண்டுவருவதால் கூடுதல் மகசூல் கிடைக்க உதவுகிறது.

சமுதாயக் கிணறுகள் வெட் டிக் கொடுக்கப்படுகின்றன.

வேளாண்மைப் பொறியியலின் பணிகள் இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன் படுகின்றன.



# கால்நடை சிறக்கும் கவின்மிகு ஓசூர்

தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் தேன்கனிக்கோட்டை நெடுஞ்சாலையில் ஓசூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மத்திகிரி என்னும் கிராமம் பெரும் புகழுக்குரியதாக விளங்குகிறது. ஆமாம்! உலகெலாம் புகழும் ஒப்பற்ற கால்நடைப் பண்ணையைப் பெற்றுள்ள அந்த கிராமம் பெரும்புகழுக்குரியது என்பதில் வியப்பென்ன இருக்கிறது?

ஏறக்குறைய 1641.41 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தப் பண்ணைக்கு அரிய வரலாறு உண்டு. மைசூரை ஆட்சி செய்து வந்த திப்பு சுல்தான் தனது படைகளுக்குத் தேவையான நேர்த்திமிகு குதிரைகளை உருவாக்குவதற்காக இந்தப் பண்ணையைத் துவக்கியிருக்கிறார். பின்னர் வந்த ஆங்கிலேயர்கள் இந்த இடத்தின் இயற்கை அழகில் மனம் பறிகொடுத்தனர்; மேல் நாட்டுக்கு இணையாக இங்குள்ள தட்பவெப்பநிலையும் அவர்களைக் கவர்ந்தது. ஆகவே, குதிரைகள் வளர்ப்பதற்கு இது ஏற்ற இடம் என்று கருதித் திப்புவிடமிருந்து இந்த இடத்தை 1824ல் கைப்பற்றினர்; பின்னர் விரிவு செய்தனர்.

1924 ஆம் ஆண்டு, கால்நடை வளர்ச்சியில் அக்கறை காட்டிய அரசின் விவசாயத் துறையினர், இந்தப் பண்ணையைத் தங்களது நிருவாகத்தின் கீழ் கொண்டு வந்து கால்நடை பராமரிப்பைத் தொடங்கினர். பின்னர் 1938-ல் இப்பண்ணை கால்நடை பராமரிப்புத் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்று வரை அதன் நிருவாகத்தில் இயங்கி வருகிறது.

குதிரைகளை வளர்ப்பதற்குரிய பண்ணையாக இது பிறப்பெடுத்திருந்தாலும், தற்போது குதிரை வளர்ப்பு இதன் பெரு நோக்கமாக இல்லை. ஆடு,மாடு, பன்றி, கோழி ஆகிய கால்நடைகளே இங்கு அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன.

சுத்தமான சிந்தி, மேல்நாட்டினமான ஜெர்சி, பிரிஷியன் மாட்டினங்களை வளர்த்து, உயர் இன, கலப்பின மாடுகளை உருவாக்குகிறது.

மாநிலத்தில் மற்றப் பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு திட்ட வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படும் பொலிகாளைகளை உருவாக்கி வழங்குகிறது.

கால்நடை இன வளர்ச்சி, தீவனம், உற்பத்தியில் உயர்வு, நோய்த் தடுப்பு ஆகியவற்றை ஆய்வு செய்கிறது.

ஆடு, பன்றி போன்ற இதர இனங்களின் வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது.

விஞ்ஞான நெறியில் உயர் இனக் கோழிகளை வளர்த்து உணவு வளர்ப்பு, நோய்த்தடுப்பு ஆகியவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்வதுடன், அதிக முட்டைகள் உற்பத்தி ஆவதற்கு வழிவகை வகுக்கிறது.


பால்தரும் கால்நடைகள் புல் மேய்வதற்காகக் காலை 8.30 மணி அளவில் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டி விடப்படுகின்றன. அங்கேயே அவை நீர் அருந்துகின்றன. பின்னர் 12.30 மணி அளவில், பண்ணைக்குக்கொண்டு செல்லப்படுகின்றன - பால் கறப்பதற்காக. பால் வழங்காத கால்நடைகளும் கன்றுகளும் காலை 9 மணி அளவில் புல் மேய்வதற்காக ஓட்டி விடப்பட்டு, மதிய தீவனத்திற்காக 1 மணி அளவில் பண்ணைக்குத் திருப்பிக் கொண்டு வரப்படுகின்றன. தீவனம் தின்றதும், மறுபடியும் அவை புல் மேய்வதற்கு அனுப்பப்பட்டு, பிற்பகல் 4 மணி அளவில் பண்ணைக்குத் திருப்பி ஓட்டி வரப்படுகின்றன.

புல் தீவனம் கிடைக்காத காலங்களில், கால்நடைகள் தவிப்புக்கு ஆளாக நேரும் அல்லவா? அதைச் சமாளிப்பதற்கு ஓர் உத்தி கையாளப்படுகிறது இந்தப் பண்ணையில்.

புல் அதிகமாக விளைந்திருக்கும் காலத்தில் அதனை வெட்டி வெல்லப்பாகு சேர்த்து தரைகளில் உள்ள குழிகளில் போட்டுப் புதைத்து வைத்து விடுகிறார்கள். புல்லில் உள்ள சத்துணவைப் பாதுகாத்துச் சேகரித்து வைப்பதற்கு இந்த சைலேஜ் குழிகள் உதவுகின்றன. புல் தீவனம் கிடைக்காத காலத்தில் சைலேஜ் குழிகளில் உள்ள தீவனம் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகிறது. அவற்றைக் கால்நடைகள் நன்கு விரும்பிச் சுவைத்துச் சாப்பிடுகின்றன.

சிந்திப் பசுக்கள் இங்கு அதிக அளவில் காட்சி தருகின்றன. இந்த இனப் பசு நாள்தோறும்





முதல் 7 லிட்டர் வரை பால் தருகின்றது. பிரிஷியன் நாள் தோறும் 12 லிட்டர் வரை பால் தருகின்றது. இதன் உடலில் சில பகுதிகளில் வெண்மையும் சில பகுதிகளில் கருமையும் காணப் படுகிறது. பட்டுப் போன்ற மிருதுவான மேனி இதற்கு உள் ளது.

சிந்தி இனக் காளைகளை பிரீ ஷியன், ரெட்டேன், ஜெர்சி ஆகிய இனப் பசுக்களுடன் கலப்பு செய்து கலப்பினம் ஒன்று உரு வாக்கப்படுகிறது. வம்சா வழித் தேர்வுத் திட்டம் என்று சொல் லப்படும் இத்திட்டத்தின் வாயி லாக தரமான-அதிகப் பால் தரக் கூடிய கலப்பினம் ஒன்றை உருவாக்க முடிகிறது.

தாய்ப்பசு 2,000 கிலோகிராம் பால் கறக்கும் வல்லமைபடைத்த தாக இருக்கிறது. கலப்பிதைத்தின் மூலம் அதற்குப் பிறந்த கன்று 2,500 கிலோ கிராம் பால் கறக் கும் சக்தியைப் பெற்றால், அது, தாய்ப்பசு தந்த சீதனமல்ல— தந்தையாகிய காளை அளித்த வரப்பிரசாதம் ஆகும்.

இந்தியாவில், சிந்தி, கிர் என்று மொத்தம் 23 வகை இனங்கள் உள்ளன. தேர்ந்தெடுக்கப் பெற்ற பொலிகாளைகள், வம்சா வழியை மேன்மையுடையதாக ஆக்குகின்றன. சிந்தி இனக் காளைகளுடன் ஒரு லிட்டர் அல் இரண்டு லிட்டர் பால் கறக்கும் நாட்டுப் பசுக்களைக் கலக்க விட்டால் கலப்பினப் பசுக்கள் நிறையப் பால் கறக்கும் தன்மை யைப் பெறுகின்றன. 1962ஆம் ஆண்டு, ஓர் ஆராய்ச்சித் திட்டம் செயல் படுத்தப்பட்டது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கலப்பினத்தை உருவாக்குவது தான் சிறந்த வழி என்பது உணரப்பட்டு, இரு இனங்களைக் கலக்கச் செய்ய முடிவெடுக்கப் பட்டது. வெளிநாட்டு இனத் துடன் உள்நாட்டு இனம் கலக்கப் பட்டது. அதன் மூலம் உருவான கலப்பினப் பசு ஒரு நாளைக்கு ஏறக்குறைய 6,000 கிலோ கிராமிலிருந்து 7,000 கிலோ கிராம் வரை அதாவது ஒரு நாளுக்கு 40 லிட்டர் வரை பால் கறக்கும் சக்தி பெற்றது.

இந்திய அரசு, கால்நடைப் பண்ணைகளை ஊக்குவிக்கும் வகையில் சில பணிகளைச் செய்து வருகிறது: ஆண்டுதோறும் கால் நடைக் கண்காட்சிகளை அமைத்துப் பரிசு தந்து ஆதரவு அளித்து வருகிறது. பண்ணைகள் நடத்திவரும் தன்யார்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்துடன், கண்காட்சியில் கலந்து கொள்பவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வேண்டிய சலுகைகளையும் வழங்குகிறது இந்திய அரசு.

கால்நடைக் கண்காட்சிக்கு, ஒசூர் கால்நடைப் பண்ணை நிருவாகத்தினர், தேர்ந்தெடுக் கப் பெற்ற சில காளைகளை அனுப்பி வைத்தனர். சிந்திஇனம் வட இந்தியாவில்தான் அதிகம். அங்கிருந்துதான் தமிழகத் திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் அங்கே இல்லாத அள வுக்குச் சிறப்பான சிந்தி இனப் பசுவும் காளையும் ஒசூர் கால் நடைப் பண்ணையில் உள்ளன. தமிழகத்தின் சிறப்புக்கு - குறிப் பாகத் தருமபுரி மாவட்டத்தின் சிறப்புக்கு இது ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

1980-81ல் ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த பரத் பூரில் நடைபெற்ற கால்நடைக் கண்காட்சியில் 133 கால்நடைகள் கலந்து கொண்டன. அதில் முதல் பரிசு ஒசூர் கால்நடைப் பண்ணைக்குத்தான் கிடைத்தது 1981-82ல் மகாராஷ்டிர மாநிலத் தில் உத்கிரில் நடைபெற்ற கால் நடைக் கண்காட்சியிலும் ஒசூர் கால்நடைப் பண்ணையின் சிந்தி இனக் காளை தான் சேம்பியன் பட்டம் பெற்றது.

ஆங்கிலேயர்களின் நினைவாக இங்கே குதிரைகள் வளர்க்கப் படுகின்றன. அவை எண்ணிக்கை யில் அதிகம் கிடையாது. திப்பு, சிவாஜி, மீனாட்சி, கண்ணகி, குல்ஜா, மாமல்லன், கிருஷ்ணன், லட்சுமி என்னும் பெயர்கள் கொண்ட எட்டே எட்டுக் குதிரைகள்தான் இந்தப்பண்ணை யில் வளர்க்கப்பட்டு வருகின்றன. கண்காணிப்பாளர் பண்ணையைச் சில சமயங்களில் சுற்றிப் பார்ப்ப தற்கு இந்தக் குதிரைகள் பயன் படுகின்றன.

இங்கு உற்பத்தியாகும் பாலின் ஒரு பகுதி தமிழ்நாடு பால் வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுப் பப்படுகிறது.

கால்நடைப் பணியாளர்களுக்கு இங்கு பயிற்சியும் தரப்படுகிறது.

கால்நடை மருத்துவத் துறைப் பட்டப் பயிற்சி பெறும் மாண வர்களுக்குச் செயல்முறை விளக் கங்கள் இங்கு அளிக்கப்படுகின் றன.

ஒசூரில் உள்ள இந்தக் கால் நடைப் பண்ணை பழமைமிக்கது மட்டுமல்ல பெருமை மிக்கதும் ஆகும்! இந்தியாவிலேயே தலை சிறந்த-இல்லை இல்லை - கால் நடை சிறந்த கால்நடைப் பண்ணை இது என்று சொல்ல லாம்.



**நினைவகங்கள்**

அரசியல் மாமேதை மூதறிஞர் இராஜாஜி பிறந்த தொரப்பள்ளி என்னும் பழம்-பதியில் அவர் பிறந்து வளர்ந்த இல்லம் நினை வகமாக ஆக்கப்பட்டுள்ளது. இவ் வில்லத் தில் அவர்தம் வாழ்க்கை யைச் சித்திரிக்கும் புகைப்படக் கண் காட்சியும், அவர் வரைந்த எழுத் தோவியங்களும், பொது மக்கள் காணும் வகையில் அரசால உரு வாக்கப்பட்டுள்ளது.

பாப்பாரப்பட்டியில் மறைந்த விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவாவின் சமாதியும், ஆசிரமமும் உள்ளது. இவரது பெயரில் சமுதாய நலக்கூடம் அரசால் உருவாக்கப்படவிருக்கிறது.



# ஒகேனக்கல் உயிர்க்காட்சிச் சாலை!

பி.வி. கிரி



அந்தச் சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு மரத்தின் கீழே காய்ந்த இலைச் சருகுகளுக்கு உள்ளே, மலைப்பாம்பு ஒன்று யாருக்கும் தெரியாமல் படுத்துக் கொண்டிருக்கிறது.

மாடு மேய்க்கும் சிறுவன், அருகே இருந்த குட்டையில் தண்ணீர் குடிக்கச் சென்றிருக்கிறான்.

அப்போது—

ஒளிந்து கொண்டிருந்த மலைப் பாம்பு மெல்ல மெல்ல அவன் அருகே வந்து, 'டக்' கென்று காலைச் சுற்றிக் கொள்ள........ சிறுவன் அலற.....பிறகு........?

உடனே சிறுவனுக்கு ஓர் அசட்டுத் தைரியம வந்தது. தன் இடுப்பில் செருகியிருந்த பேனாக் கத்தியை எடுத்து ஓங்கி மலைப் பாம்பைக் குத்தினான். அப்போதும் அது விடவில்லை. சிறுவன் தாமதிக்கவில்லை. மலைப்பாம்பின் கழுத்தை அறுத்தான்....அப்பாடா! அப்போது தான் அது தன் பிடியைத் தளர்த்தியது....சிறுவன் தப்பினான்!

இந்த உண்மைக் கதையை ஒகேனக்கல் உயிர்க் காட்சிச் சாலையைச் சுற்றிப் பார்க்கும் போது தெரிந்து கொள்கிறோம்.

மலைக்க வேண்டாம்! ஓரிடத்தில் மலைப்பாம்பைப் பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது-

பாம்புகளில் மலைப்பர்ம்பு தான் பெரியது. 20 அடி வரை நீளமிருக்கும். அடர்ந்த காடுகளில்— பாறைப் பகுதிகளில்— ஆற்றங்கரைகளில் வாழும். இரவில்தான் நடமாடும். ஒரே நேரத்தில் 100 முட்டைகள் இடும். ஆறு மாதம் வரை இரை இல்லாமல் இருக்கும். சோம்பலுடையது. மான், காட்டெருமை, கன்று, ஆட்டுக் குட்டி, காட்டுக்கோழி, முயல் ஆகியவற்றை உயிரோடு விழுங்கும். மனிதரைக் கண்டு பரபரப்படையாது.

குறிப்பைப் படித்துவிட்டு நம் கண்கள் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் மலைப்பாம்பைப் பார்க்கின்றன. அதன் வயிறு பெரியதாக இருக்கிறது. என்ன என்று கேட்கிறோம். இப்பொழுது தான் அது ஓர் ஆட்டுக்குட்டியை விழுங்கியது என்பதை அறிந்து மலைக்கிறோம். ஆம். இனிமேல் அதற்கு அடுத்தமாதம் தான் இரையாம்.

இந்த 'மினி' உயிர்க் காட்சிச் சாலையில், நரி, முயல், மான், மலைப்பாம்பு, புறா, முதலை ஆகியவை உள்ளன. வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த உயிர்க் காட்சிச் சாலை, குழந்தைகளையும் பெரியவர்களையும் மகிழ்விக்கிறது.

ஒகேனக்கல் அருவி.யிலுருந்து சுமார் 2 பர்லாங் தூரத்தில் உள்ள இந்த உயிர்க் காட்சிச் சாலையும், இதற்கு அருகே உள்ள முதலைப் பண்ணையும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

295 முதலைகள் சிறிதும் பெரிதுமாக இங்கு உள்ளன — அதாவது 1981-'82ல் இந்த எண்ணிக்கை.

1977-ல் துவக்கப்பட்ட இந்த முதலைப் பண்ணையில், முதலை முட்டைகள் சேகரிக்கப்பட்டு, குஞ்சுகள் பொரித்துப் பராமரிக்கப்படுகின்றன.

முதலைகளுக்கு, மீன், உணவாகப் போடப்படுகிறது. கோடைக்காலத்தில்தான் அதிகம் இரை உண்ணுமாம். மற்ற காலங்களில் பட்டினியாகக்கூட இருக்குமாம். உலகத்திலேயே மிகப் பெரிய முதலை ஒரிசா மாநிலத்தில் உள்ளதாம். அதன் நீளம் 28 அடி.

சலசலவென்று கொட்டும் அருவியில் ஆடிக் களிப்பவர்கள் கலகலவென்று சிரித்துப் பேசிக் கொண்டே இந்தக் குட்டி உயிர்க் காட்சிச் சாலைகளைக் கண்டு களிக்கத் தவறுவதில்லை!

# கிருஷ்ணகிரியில் தொழில் வளர்ச்சி

கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு அரசின் நிறுவனமான சிட்கோவின் நிருவாகத்தில் தொழிற்பேட்டை ஒன்று இயங்கி வருகிறது. நேரடி நிருவாகத்தில் 12 தொழிற்கூடங்களும், தவணை முறைத் திட்டத்தின் கீழ் 25 தொழிற்கூடங்களும் இயங்கி வருகின்றன.

41.69 ஏக்கர் பரப்பளவு கொண்டது இந்தத் தொழிற்பேட்டை. ரூபாய் 3.25 லட்சம் மதிப்பீட்டில் 'சி' பிரிவு வாடகைப் பணியிடம் 5, ரூபாய் 3.56 இலட்சம் மதிப்பீட்டில்'டி' பிரிவு வாடகைப் பணியிடம் 7 அரசினால் கட்டப்பட்டுள்ளன.

தவணை முறை விற்பனைத் திட்டத்தின் கீழ், பணியிடங்கள் 25, ரூபாய்18.53 இலட்சம் மதிப்பீட்டில் 7.62 ஏக்கர் அளவில் கட்டப்பட்டுள்ளன.

100 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட 'ஏ' பிரிவு பணி இடங்கள், ஒவ்வொன்றும் ஒரு இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 8 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதே போல் ரூபாய் 85 ஆயிரம் மதிப்பில் 80 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட 'பி' பிரிவு பணி இடங்கள் 4 உருவாக்கப்பட்டுள்ளன. 60 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட 'சி' பிரிவு கட்டடங்கள் 4 ஒவ்வொன்றும் ரூ. 68 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. 50அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 'டி' பிரிவு கட்டடங்கள் 5 ஒவ்வொன்றும் ரூ. 53 ஆயிரம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன. 36 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 'இ' பிரிவு கட்டடங்கள் 4 ஒவ்வொன்றும் ரூ. 40 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கிளை அலுவலகம் 1974ஆம் ஆண்டு கிருஷ்ணகிரியில் தொடங்கப்பட்டது. இம்மாவட்டத்தின் சிறு தொழில் வளர்ச்சிக்கு இந்த நிறுவனம் ஆற்றிவரும் பல்வேறு வகை உதவிகள் வருமாறு:

சிறுதொழில் முனைவோர்களுக்குத் தவணை முறையில் இயந்திரங்களை விநியோகிக்கிறது.

தொழிற் கூடங்களைத் தவணை முறையில் உருவாக்கித் தருகிறது.

சின்னஞ்சிறு தொழிற் கூடங்களைத் தவணை முறையில் கட்டித் தருகிறது.

சின்னஞ்சிறு பட்டுவளர்ப்பு அலகுகளைத் தவணை முறையில் கட்டித் தருகிறது.

வளர்ச்சிபெற்ற மனைகளைத் தவணை முறையில் ஒதுக்கீடு செய்கிறது.

சிறுதொழில் அலகுகளுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருட்களை விநியோகிக்கிறது.

தருமபுரி மாவட்டம் முழுதும் உள்ள சிறுதொழில் அலகுகளுக்கு மைய முதலீட்டு மானியத் தொகையை வழங்குகிறது.

தகுதியுள்ள தொழில் முனைவோர்களுக்கு மின் ஆற்றலுக்குரிய மானியத் தொகையை அளிக்கிறது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கும்,பட்டையதாரிகளுக்கும்ஓரளவு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்படி சலுகைகள் வழங்குகிறது.

சிறுதொழில் முனைவோரின் தயாரிப்புப் பொருள்களுக்கு ஐ. எஸ்.ஐ. முத்திரையுடன் வணிகச் சந்தை வாய்ப்பை உருவாக்க உதவி செய்கிறது.

நலிந்த நிலையில் உள்ள அலகு மறு வாழ்வு பெறுதற்குரிய வகையில் ஓரளவு நிதி உதவி அளிக்கிறது.

கிருஷ்ணகிரியில்
உருவாகிவரும் பட்டு நூற்பு ஆலைக் கட்டடங்கள்



வட்டி இல்லாத விற்பனை வரிக் கடன் உதவியை, சிறுதொழில் அலகுகளுக்கு வழங்குகிறது.

தவணைமுறையில் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், சிறுதொழில் முனைவோர்47பேருக்கு இயந்திரங்கள் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் ரூ. 10.5 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

பணிக்கூடாரங்கள் கட்டித் தரும் திட்டத்தின்படி, 11 அலகுகளுக்கு, தொழில் முனைவோரின் சொந்த மனைகளில் ரூ. 958281 செலவில் உருவாக்கித் தரப்பட்டிருக்கின்றன.

பொது மானியத் திட்டத்தின்படி, 678 அலகுகளுக்கு ரூ.151 இலட்சம் மானியத் தொகையாக அனுமதிக்கப்பெற்றுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் 26பேர்களுக்கு ரூ. 4.88இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

வணிகச் சந்தை தேடித்தரும் திட்டத்தின்படி, தொழில் முனைவோர் 16 பேர், தங்களது தயாரிப்புகளை விற்பனைக்காக சிட்கோவில் பதிவு செய்திருக்கின்றனர்.


நலிவுற்ற அலகுகளின் மறுவாழ்வுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், தொழில் முனைவோர் 5 பேர் நிதி உதவி கேட்டிருக்கின்றனர். அவர்களில் இருவர் தலைமையகத்துக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறனர்.

மின்னாற்றல் மானிய உதவித் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள தொழில் முனைவோர் 62 பேருக்கு, 30 சதவிகித அளவில் ரூ. 34 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொன்றும் 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 20 சிறு பணிக் கூடம் கடந்த ஆகஸ்ட மாதத்தில் உருவாக்கப்பட்டு, தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வழங்கப்படுகின்றன. முதலில் ரூ. 720 கட்டிவிட்டால் பணிக்கூடம் வழங்கப்பட்டுவிடும். மீதித் தொகையை 6 ஆண்டுகளில் கட்ட வேண்டும்.

இவ்வாறு, பல வகையிலும் கிருஷ்ணகிரியில் உள்ள தொழிற்பேட்டை, தொழிலை வளர்த்து வருகிறது.

# தொழில் முனைவோராகவே பிறப்பதும் உண்டு—
# அவர்கள் உருவாக்கப்படுவதும் உண்டு!



# சிப்காட் இதை மெய்ப்பிக்கிறது!

**சிப்காட் அளிக்கும் சிறப்புச் சலுகைகள் பல. இந்த தாராளமான சலுகைகளும், வசதிகளும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்முனைவோர் எவருக்கும் தொழில் துறையில் புதிய வாழ்வை அளித்திடும்.**

### நீண்ட காலக்கடன்கள்:

ரூ. 200 இலட்சம் வரையுள்ள தொழில் திட்டங்களுக்கு சிப்காட் ரூ. 60 இலட்சம் வரை கடன் அளிக்கிறது. வட்டி விகிதம் மிகக் குறைவு. பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில்களுக்கு 12.50% மற்ற பகுதிகளுக்கு 14% வட்டியாகும்.

### ஆரம்ப மூலதன உதவி:

தொழில்துறை மற்றும் தொழில் நுட்பத்துறையில் தகுதி உடையவர்களும் தொழில் அல்லது வியாபாரத் துறையில் தக்க அனுபவமும் திறமையும் பெற்றவர்களும், சிப்காட் மூலம் ஆரம்ப மூலதன உதவி பெறலாம். இந்த உதவி ரூ. 2 கோடி வரையிலான திட்டங்களுக்கு தேவைப்படும் ஆரம்ப மூலதனத்தில் பற்றாக் குறை இருப்பின், ரூ.15 லட்சம் வரை கிடைக்கும்.

### வட்டி இல்லாத விற்பனை வரிக்கடன்:

கீழ்க்கண்ட மாவட்டங்கள்/பகுதிகளில் இயங்கிவரும் தொழில்களை விரிவுப்படுத்தவும்/கிளைத் தொழில்கள் துவங்கவும் ரூ. 50 இலட்சம் வரையும், புதிய தொழிற் கூடங்களுக்குரூ.100 இலட்சம் வரையும் உச்ச அளவாக வட்டி இல்லாத விற்பனைவரிக் கடன் அளித்திடும் வகையில் நிதி உதவித் திட்ட விதிகள் இப்பொழுது மேலும் தளர்த்தப் பட்டுள்ளன.

1. திருச்சிராப்பள்ளி
2. இராமநாதபுரம்
3. மதுரை
4. வட ஆற்காடு
5. தென் ஆற்காடு
6. தர்மபுரி
7. புதுக்கோட்டை
8. கன்னியாகுமரி
9. தஞ்சாவூர்
10. மறைமலைநகர்
11. செங்கல்பட்டு மாவட்டத்தில் குன்னத்தூர் பகுதி
12. கும்மிடிப்பூண்டி மற்றும் தூத்துக்குடியில் உள்ள சிப்காட்டின் புதிய தொழிற் இணையங்கள்.




### மாநில மூலதன மானியம்:

கீழ்க்கண்ட 24 தாலுக்காக்களிலும் மற்றும் கடலூரிலும், கும்மிடிப்பூண்டியிலும் உள்ள சிப்காட்டின் புதிய தொழிற் இணையங்களிலும் அமைக்கப் படவிருக்கும் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு 15% மானியமளிக்கப்படும்.

1. போளூர் 2. செங்கம்
3. வந்தவாசி 4. செய்யார்
5. செஞ்சி 6. திருக்கோயிலூர்
7. உளுந்தூர்பேட்டை
8. கள்ளக்குறிச்சி
9. திட்டக்குடி 10. சிதம்பரம்
11. காட்டுமன்னார்கோவில்
12. திண்டிவனம் 13. முசிரி
14. அரியலூர் 15. ஒரத்தநாடு
16. பேராவூரணி
17. அறந்தாங்கி
18. ஆவுடையார்கோவில்
19. பெரியகுளம்
20. விளாத்திக்குளம்
21. நாங்குநேரி
22. மதுராந்தகம்
23. பொன்னேரி
24. கும்மிடிப்பூண்டி

### எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள் மற்றும் ஆட்டோமோபில் துணை சாதன தொழில்களுக்கு மானியத் திட்டம்:

மாநில அல்லது மத்திய மானியத் திட்டத்தின்கீழ் வராத தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் துவக்கப்படவிருக்கும், எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள் மற்றும் பட்டியலிடப் பட்ட மருந்துகளின் கலவை நிர்ணயம் ஆட்டோமோபில் துணை சாதனங்கள் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற் கூடங்களுக்கு அவற்றின் நிலையான சொத்துக்களின் மதிப்பில் 10% அல்லது அத் தொழிற்சாலையில் சீராக வேலை அளிக்கப்படும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 20,000/- வீதம் (இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை) மானியமாக அளிக்கப்படும். இந்த மானியத் தொகைக்கு உச்ச வரம்பு ரூ. 15 இலட்சமாகும்.

### மத்திய முதலீடு மானியம்:

இந்தத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட 33 பின்தங்கிய தாலுக்காக்களில் தொழில் துவக்கினால், நிர்ணய மூலதன முதலீட்டில் 15%க்குச் சமமான தொகையை மத்திய அரசு மானியமாகப் பெற அருகதை உண்டு. இப்படி அளிக்கப்படும் மானியத்துக்கு உச்சவரம்பு ரூ. 15 இலட்சமாகும். இத் திட்டம் சிறு, நடுத்தர மற்றும் பெரிய ரகத் தொழில்களுக்கு உண்டு.

### வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்குத் தனிப்பிரிவு:

வெளிநாட்டில் பணியாற்றி அங்கே வசித்து வரும் இந்தியர் தமிழ்நாட்டில் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்க சிப்காட் ஒரு சிறப்பு ஏற்பாட்டை செய்து வருகிறது. வெளிநாட்டில் வசிக்கும் தனி நபர்களுடனும் சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு சிப்காட் அளிக்கும் ஊக்கச் சலுகைகளும் திட்ட யோசனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டில் தொழில்புரிந்து அங்கு வசிப்பவர்கள், இது பற்றிய ஆரம்ப வேலைகள் அனைத்தையும் சிப்காட் வசம் ஒப்படைக்கலாம். நிதி முதலீடு வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்து அரசு அனுமதியையும் சிப்காட் பெற்றிடும்.

### தொழில் முனையவும், இடத்தை தேர்ந்தெடுக்கவும் ஆலோசனை

### தொழில் திட்ட ஆலோசனைகள்

### பங்குகளுக்கு பிணையீடு அளித்தல் (அண்டர்ரைட்)





*உங்கள் வளமைக்கு திட்டமிட்டு வழிகாட்ட சிப்காட்டை நாடுங்கள்.*

**தமிழ்நாட்டில் தொழில் வளம் செழிக்க பற்பல உதவிகளைப் புரிவது சிப்காட்.**

SIPCOT

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் லிமிடெட்,**
51 & 52, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.
தொலைபேசி: 88261—65 டெலக்ஸ்: 7736



# பாங்காக வளர்ந்து வரும் பட்டுத்தொழில்

பட்டுத் தொழில், வேளாண்மை சார்ந்த குடிசைத்தொழில் ஆகும். ஒரு ஏக்கர் முசுக்கொட்டைச் செடியை இறவைப் பயிராகப் பயிரிடும்போது ஏறக்குறைய 5 நபர்களுக்கு ஆண்டு தோறும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. முசுக்கொட்டை பயிரிட்டு பல விவசாயிகள் மாதம் ஒரு முறை வருவாய் பெறும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு, பட்டுக் கைத்தறி நெசவாளர் தேவையை - ஓரளவு தமிழ்நாட்டிலேயே உருவாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் பயனுள்ள திட்டங்கள் பல அறிமுகம் செய்யப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் 8000 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப்படுகின்றது. ஏறக்குறைய 10,000 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன . 5 ஆண்டுகளுக்கு முன்னர் 3000 ஏக்கர் அளவில் தான் முசுக்கொட்டை பயிரிடப் பட்டு வந்தது. பட்டு உற்பத்தி முனைப்பு இயக்கத்தின் காரணமாகவும், 1979ல் பட்டு வளர்ச்சித் துறை என, தனித் துறை உருவானதாலும், வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் வாயிலாக ஏறக்குறைய 5000 ஏக்கர் அதிகமாக முசுக்கொட்டையைப் பயிரிட்டு விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தின் சீதோஷ்ண நிலை பட்டுத்தொழிலுக்கு மிகவும் ஏற்றதாக இருந்து வருவதால், இங்கு இந்தத் தொழில் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

பட்டு உற்பத்தி முனைப்பு இயக்கத்தின் மூலமாக 5 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் 10000 ஏக்கர் முசுக்கொட்டைச் செடி பயிர் செய்வதற்கு 1974ஆம் ஆண்டில் திட்டம் தீட்டப்பட்டு ஒப்புதலுக்காக மைய அரசுக்கு அனுப்பிவைக்கப்பெற்றது. இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் பரவலாக உருவாக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி, தமிழ்நாட்டில் 11900 ஏக்கரில் திட்டத்தை 4 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துமாறு கேட்டு மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையில் 1975ல் ஓசூரில் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் மூலம் ஒரு முன்னோடி நிலையம் ஓசூரில் நிறுவப்பட்டு, புதிய எம்.5 என்னும் முசுக்கொட்டைச் செடி விதைக் குச்சிகள் இலவசமாக அளிக்கப்பட்டன. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில், இரண்டு ஆண்டிற்கு மட்டும் 3850 ஏக்கர் அளவில் ரூ.52.63 இலட்சம் செலவில் முசுக்கொட்டை பயிரிடுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இரண்டு ஆண்டுக் கால முடிவில் (1979) இந்தத் தொகை செலவிடப்பட்டு 3850 ஏக்கர் குறியீட்டுக்கு, 6646 ஏக்கர் அளவு பயிரிடப்பட்டது. இதன் விளைவாக அதிக அளவு முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதற்கு வாய்ப்பு உள்ளதைக் கருத்தில் கொண்டு, 1979ஆம் நிதி ஆண்டிலிருந்து தனித்துறை ஒன்று சேலத்தில் செயல்படத் துவங்கியது.

மாநிலத் திட்டத்தின் மூலம் விதைக்குச்சிகள், தரமான பட்டு முட்டைகள் அளித்தல்- தொழிலில் ஈடுபடுவோருக்குப் பயிற்சி அளித்துத் தொழில் நுட்ப விவரங்கள் அறிவித்தல்-பட்டுவளர்ப்புச் சாதனங்கள் வாங்க, பட்டுப் புழுக் கொட்டைகள் அமைக்க மானியம் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து, இத்தொழில் தருமபுரி மாவட்டத்தில் வளர்ச்சியுறுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் தேன்கனிக்

கோட்டை வட்டத்தில் 200 ஏக்கர் அளவு உள்நாட்டின் பட்டு விதைக் கூடு உற்பத்தி மையமாக மாற்றப்பட்டு ஓராண்டிற்குச் சுமார் 4 கோடி விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு, கலப்பின முட்டைகள் வித்தகங்களுக்கு வினியோகம் செய்யப்படுகின்றன. இதனால், தமிழ்நாட்டின் விதைக்கூடு உற்பத்தி தன்னிறைவு எய்தியுள்ளது.

ஒசூரிலும், கிருஷ்ணகிரியிலும் பெரிய அளவு கலப்பின முட்டை வித்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சுமார் 25 இலட்சம் கலப்பின முட்டைகள் சீரிய முறையில் உற்பத்திசெய்யப்பட்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனாக, மாவட்டத்தில் பல விவசாயிகள் 100 முட்டைக்கு சராசரி 30 கிலோ உற்பத்தி செய்கிறார்கள்.

கூடு உற்பத்தியில் அதிகஅளவு கவனம் செலுத்தி வந்ததன் காரணமாக, இம் மாவட்டத்தில் ஏறக்குறைய 12.5 இலட்சம் கிலோ கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கூடுகளைப் பயன்படுத்திக் கச்சாப் பட்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், கிராமப்புறப் பட்டுநூற்புப் பயிற்சி நிலையங்கள் 5 நிறுவப்பட்டுள்ளன. இங்கு ஆண்டொன்றிற்கு 300 ஏழை மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவால் பட்டுநூல் எடுக்கும் ஏனங்கள் 25க்கு உரிமம் வழங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தொழில் கூட்டுறவுப் பட்டு நூற்புச் சங்கங்கள் 10 நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய கூட்டுறவுப் பட்டு நூற்பு நிலையங்களுக்கு அரசின் சார்பில் ரூ.40 ஆயிரம் மூலதனமாகவும் பட்டு நூற்பு இயந்திரங்கள், கட்டடங்கள் வகைக்கு ரூ. 12 ஆயிரம் கடனாகவும், ரூ. 6 ஆயிரம் பங்கு மூலதனமாகவும் ரூ. 6 ஆயிரம் அரசின் மூலதனமாகவும் வழங்கப்பட்டு இத்தொழிலுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. தனியார் துறையில் நிறுவப்படும் ஒவ்வொரு ஏனம் நிறுவுவதற்குக் கட்டடம் உட்பட மானியமாக ரூ.1100 வழங்கப்படுகிறது.

பட்டுக்கூடு உற்பத்தியை அதிக அளவில் பயன்படுத்துவதற்காக கிருஷ்ணகிரியில் அரசின் சார்பில் குறு அளவு பட்டு நூற்பு ஆலை ரூபாய் 25 இலட்சம் செலவில் நிறு

## தருமபுரியில் தங்கம்...!

தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரிகோட்டத்தைச் சேர்ந்த வேப்பன பள்ளியில் தங்கப் படிவம் கிடைக்கின்றது என்றுசொல்லப்படுகிறது. இந்தியா முழுதும் ஆய்வு நடத்தும் மைய அரசின் புவியியல் துறையினர் இங்கும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அவர்கள் இங்கு முகாமிட்டுப் பல பகுதிகளில் பாறைகளைக் குடைந்து ஆய்வு செய்கின்றனர். சில கற்களில் தங்கப் படிவங்கள் படிந்திருந்ததாகச் சொல்லப் படுகின்றது. புவியியல் துறையின் ஆழ்துளையிடும் பகுதியைச் சேர்ந்த சில தொழில் நுணுக்க உதவியாளர்கள் இந்தப் பகுதியில் 5 இடங்களில் முகாமிட்டு ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். மாதிரிகள் ஐதராபாத்தில் உள்ள ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆய்வு வெற்றியளித்தால் தருமபுரி தங்கபுரியாகி விடும்!

## பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி

ஒசூரில் பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி 25-7-1979 முதல் இயங்கி வருகிறது. தொழில் வணிகத்துறையின் நிருவாகத்தில் இயங்கிவரும் இப்பள்ளியில் பட்டதாரிகள் 50 பேருக்கும் பட்டதாரி அல்லாதோர் 100 பேருக்கும் பட்டுத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 6 மாதங்கள். பட்டதாரிகளுக்கு ரூ. 250, பட்டதாரி அல்லாதோருக்கு ரூ. 150 உதவித் தொகையாக மாதா மாதம் தரப்படுகிறது.

1979–80 ஆம் ஆண்டில், பட்டதாரிகள் 48 பேர்களுக்கும் பட்டதாரி அல்லாதோர் 93 பேர்களுக்கும், 1980-81–ல் பட்டதாரிகள் 47 பேருக்கும் பட்டதாரி அல்லாதோர் 91 பேர்களுக்கும் 1981-82-ல் பட்டதாரிகள் 51 பேர்களுக்கும் இங்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

## 80 ஆயிரம் பட்டுக் கூடு

அரசினர் பட்டுப்புழு அங்காடி ஆண்டுக்கு 80 ஆயிரம் கிலோ பட்டுக் கூடுகளை வாங்கிக் கொள்கிறது.

## காதிக்கு முதலிடம்

ஆண்டுக்கு 4 ஆயிரம் கிலோ பட்டு நூலை, தமிழ்நாடு காதி நிறுவனம் விலைக்கு வாங்கிக் கொள்கிறது.

## பெரிது ! பெரிது !

இந்தியாவிலேயே பெரிய பட்டுப் பண்ணை, தருமபுரி மாவட்டத்தில் தளி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோலட்டியில் உள்ளது. 800 ஏக்கர் பரப்பளவு கொண்டது இது.

## அதிக உற்பத்தி வித்தகம்

ஒசூரில் உள்ள பட்டு முட்டை வித்தகம், தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் உருவாகிய-மிகப் பெரிய-அதிக உற்பத்தி செய்யக் கூடிய முட்டை வித்தகம் ஆகும்.

## முசுக்கொட்டையே நன்று!

முசுக்கொட்டைச் செடிகளை உண்டுவரும் புழுக்களின் மூலம்தான் பட்டு உற்பத்தியாகிறது. தருமபுரி மாவட்டத்தில் இவ்வாறுதான் பட்டு உற்பத்தி நடைபெறுகிறது.

மரச்சீனிக் கிழங்கு, ஆமணக்கு ஆகியவற்றின் தழைகளை உண்ணும் ஒருவகைப் புழு இனம் இருக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் பட்டு, தரம் குறைந்ததாக உள்ளது. அதுமட்டுமல்ல, தொடர்ச்சியாக இழை எடுக்க இயலாததாகவும் இருக்கிறது. இந்தப் புழுக்களிலிருந்து பட்டு எடுக்கும் செயல்முறை, சேலம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# 33,500 பேருக்குப் புதியதாக வேலை வாய்ப்பு!

தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 33,500 தொடக்க நிலைப்பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முழுப் பொறுப்பேற்கும் பொறுப்பாளர்களைப் பள்ளிக் கூடங்களில் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இப்பொறுப்பாளர்களுக்கு மாதம் ரூபாய் 150/- சிறப்பூதியம் வழங்கப்படும்.

இவர்கள் கீழ்க்கண்ட இன்றியமையாத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

* 25 முதல் 40 வயதுக்குள்ளாக இருக்க வேண்டும்.
* குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
* பள்ளி இருக்கும் ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.
* திருக்குறள் போதனையும் இவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதால் தமிழிலும், குறிப்பாகத் திருக்குறளிலும், நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
* மதிய உணவுத் திட்டத்திற்கு முழுப் பொறுப்பேற்றுச் செயல்படுத்தும் ஆற்றலும், அதற்கான கணக்குகளையும் பதிவேடுகளையும் சரிவரப் பராமரிக்கும் ஆற்றலும், பெற்றிருக்க வேண்டும்.

தகுதி பெற்றவர்களிடையே கீழ்க்கண்ட வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பெண்களுக்கும் விதவை அல்லது அநாதைப் பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

குடும்பத்தில் வேறு ஒருவருக்கும் வேலையில்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். (தாய், தந்தை, உடன் வசிக்கும் சகோதர சகோதரிகள் ஆகியோர் குடும்பத்தில் அடங்குவோர்).

இத்தகுதிகளைப் பெற்றவர்கள் தங்கள் தகுதிகளைப் பற்றிய முழு விவரங்களுடன் 15.12.1982க்குள், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னையில் மாநகராட்சி ஆணையருக்கும் மனுச் செய்து கொள்ள வேண்டும்.

வப்பட்டுவருகிறது. இதன் பயனால் 7000 கிலோ பட்டு அதிக அளவு உற்பத்தி செய்யப்படுவதுடன் 200 பேருக்கு வேலை வாய்ப்பும் கிட்டுகிறது.

வெளிநாட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யும் பட்டுப் பண்ணை அரசினர் சார்பில் 1944ஆம் ஆண்டு ஓசூரில் நிறுவப்பட்டது. அது ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் கூடுகளை உற்பத்தி செய்து வருகிறது. இந்தப் பண்ணையும், உள்நாட்டு விதைக் கூடுகள் உற்பத்தி மையமும், ஓசூரில் உள்ள கலப்பின முட்டை வித்தகமும் தமிழ்நாட்டின் பெரும்பகுதித் தேவையை நிறைவேற்றுகின்றன.

1959ல் ஏனம் கொண்டு நிறுவப்பெற்ற சிறிய பட்டு நூற்பகம் இன்று 40 ஏனங்கள் கொண்ட பெரிய அளவு ஆலையாக வளர்ந்து ஆண்டுக்கு 6000 கிலோ தரமான பட்டை உற்பத்தி செய்து, காஞ்சியில் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் கைத்தறி கூட்டுறவு நிறுவனங்களுக்கு விற்பனை செய்கிறது.

பாகலூரில் பெரியளவு பட்டு நூல் முறுக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 1981ல் நிறுவப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் இது சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது. சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். தருமபுரியில் உள்ள தொழில் மையத்தின் உதவியுடன் பட்டு நூற்பு ஆலை. பட்டு முறுக்கு ஆலை ஆகியவற்றைத் தொடங்கியுள்ளது.

இத்தகைய பணிகளினால் தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ப்புத் திட்டங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் செயல்பட வாய்ப்புள்ளதால் ஐந்து இடங்களில்கூட்டுக் கூடு அங்காடிகள் திறக்கப்பட்டுச் செயல்படுகின்றன.

பெருகிவரும் பட்டுத் தொழிலின் நுணுக்கங்களை விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்வதற்காக, தொழில் நுட்ப உதவியாளர்கள் அரசினர் பட்டுப் பயிற்சிப் பள்ளியின் மூலமாக உருவாக்கப்படுகிறார்கள்.

பட்டுத் தொழிலின் வளர்ச்சி கிராமப்புற வளர்ச்சி என்ற கருத்தினைக் கொண்டு தமிழக அரசு இத்தொழிலின் வளர்ச்சிக்காக 6வது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ரூ. 22 கோடி செலவிடுகிறது. இதன் பயனாக, திட்டகாலத்தில் தருமபுரி மாவட்டத்தில் சுமார் 10000 ஏக்கர் அளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படும். சுமார் 50,000 மக்கள்புதியதாக வேலை வாய்ப்பினைப் பெறுவர்.

தருமபுரி மாவட்டத்தில் பட்டுத் தொழில், செழித்து வளர்வதுடன் சிறந்து விளங்குகிறது; பலருக்கு வேலை வாய்ப்பும் வழங்குகிறது.



பட்டுப் புழுக் கூடுகள்

# ஒரு சத்துணவு மையத்தில்



ஓசூரிலிருந்து மத்திகிரி போகும் வழியில் ஓசூர் ஒன்றியத்தைச் சேர்ந்த குதிரைப் பாளையம் கிராமத்தில் உள்ள சத்துணவுக் கூடத்திற்குள் நுழைகிறோம். சரியாக பகல் 12மணி. அந்த மையத்தில் உள்ள குழந்தைகள் இரு கரங்களையும் கூப்பி நின்றவாறு இறைவணக்கம் செய்கின்றனர்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

என்னும் திருக்குறளை மழலைக் குரலால் கூட்டுப் பாடலாகப் பாடுகின்றனர். அதன் பின்னர் ''தேவே உன்னைப் போற்றிடுவேன்'' என்ற பாடலைப் பாடுகின்றனர்.

இறைவணக்கம் முடிந்ததும் அவர்கள் அனைவரும் ஒரேநேரத்தில் தரையில் அமர்ந்து சத்துணவை உண்ணத் தலைப்படுகின்றனர். பிஞ்சுக் குழந்தைகள் என்றாலும் அவர்களிடம் காணப்படும் ஒழுங்குமுறை போற்றுவதற்குரியதாக உள்ளது.

தயாரிக்கப்பட்ட உணவை, விரிவாக்க அலுவலர் திரு கிருஷ்ணன் அவர்கள் சோதித்துப் பார்த்தார். 'புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்று சொல்லப்பட்டதுபோல, எங்களுக்கும் மாதிரிகள் கிடைத்தன. அந்தக் கதம்பச் சாதம் மணமாகவும் சுவையாகவும் இருந்தது.

அந்த மையத்திலே 100 குழந்தைகள் சத்துணவு உண்டார்கள். அவர்களில் 66 பேர் பள்ளி செல்பவர்கள்.

குழந்தை நல அமைப்பாளராகப் பணிபுரியும் மாணிக்கமுத்து அவர்களிடம் சத்துணவு மையத்தில் அவர் ஆற்றும் பணி குறித்து வினவியபோது அவர் தெரிவித்த செய்திகள் வருமாறு:

''காலையில் 9 மணிக்கு எல்லாக் குழந்தைகளும் பள்ளிக் கூடத்துக்கு வந்துருவாங்க! வந்தவுடனே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவாங்க; அப்புறம் வகுப்பு ஆரம்பிக்கும். குழந்தைகளுக்கு எழுத்தறிவு-எண்ணறிவு எல்லாம் சொல்லித் தருவேன்.

''ஆடல் பாடலும் கத்துத் தருவேன். ''அம்மா இங்கே வாவா'' என்ற தமிழ்ப் பாடலையும் 'come little children' என்னும் ஆங்கிலப் பாடலையும் குழந்தைகளுக்குச் சொல்லித் தருவேன்.

''மதியம் 12 மணிக்கு எல்லாக் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்குவேன். அப்புறம் 2½ மணிக்கு வகுப்பு ஆரம்பிக்கும். விளையாட்டு எல்லாம் சொல்லித் தருவேன். 4 மணிக்கு பள்ளிக் கூடம் முடியும். கொழந்தைகளெல்லாம் போயிடுவாங்க''

''குழந்தைகள் சாப்பாட்டை ரசித்துச் சாப்பிடுகிறார்களா?'' —நமது கேள்வி.

''சத்துணவை மிகவும் ரசிச்சுச் சாப்பிடுறாங்க; சாப்பிடமாட்டேனுன்னு எந்தக் கொழந்தையும் அடம் பிடிக்கிறது இல்லிங்க!'' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் தொடர்கிறார்:

''இங்கே இருக்குற 25 கொழந்தைகளோட தாய்மார்கள் கூலி வேலைக்குப் போய் வர்றாங்க. அவங்க கொழந்தைங்களை இங்கே கொண்ணாந்து விட்டுட்டுப் போயிடுவாங்க! அந்தக் கொழந்தைங்களை இந்த மையத்திலெ நான் பார்த்துக் கொள்றேன். சாயந்திரமா தாய்மாருக வந்து கொழந்தைங்களை கூட்டிக்கிட்டுப்போறாங்க! சில சமயத்துலெ இங்கே இருக்குற ஆயாக்களே கொழந்தைங்களை அவங்க அவங்க வீட்டுலெ கொண்டு போயி விட்டுட்டு வருவாங்க! நகம் வெட்டும் கருவி ரெண்டு குடுத்திருக்கிறாங்க. ஞாயிற்றுக் கிழமையிலே எல்லாக் குழந்தைகளுக்கும் நகம் வெட்டி விடுவேன்''—

குதிரைப்பாளையத்தில்வசித்து வரும் சிங்காரம் அம்மாள், பெருமாள் அம்மாள் ஆகியோர் இந்தச் சத்துணவுத் திட்டம் குறித்து என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம்:

''இந்தத் திட்டத்தினாலே நாட்டுல நல்லதுதான் நடக்குது! முன்னெ ஒல்லிச் சப்பாணியா இருந்த கொழந்தைங்க எல்லாம் சத்துணவைத் திங்கிறதுனாலெ புஷ்டியா, கொழு கொழுன்னு வளருதுங்க''-என்கிறார் சிங்காரம் அம்மாள்.



'கொழந்தைகளுக்கு பல்லுப் பொடி தரப்போறதா சொல்றாங்க; அதுவும் நல்ல சங்கதி தானுங்க! இந்தக் கொழந்தைங்க மண்ணையும், செங்கப் பொடியையும் வச்சுத் தேச்சு பல்லைக் கெடுத்துக்குதுங்க! இப்ப பல்லுப்பொடி தந்தாக்க அதுவும் நல்லதுதானுங்க! இந்த நல்ல யோசனையை எல்லாம் கொண்டார்ற-புண்ணியவானுங்க நல்லா இருக்கணும்'- பெருமாள் அம்மாள் சொல்கிறார்.

பொதுமக்களின் நெஞ்சங்களையும், குழந்தைகளின் உள்ளங்களையும் கவர்ந்து, பல்லாயிரக் கணக்கான பெற்றோர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது முதல்வர் சத்து உணவுத் திட்டம் என்பது மறுக்க முடியாத உண்மை.

**அ. ம. விநாயகம்**

---

தருமபுரியில் அதியமான் கோட்டை என்று சொல்லப்படும் பகுதியில் அவ்வை காலனி என்னும் குடியிருப்புப் பகுதி இருக்கிறது. நல்லம்பள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த இங்கு 30 ஆதி திராவிட குடும்பங்கள் கோழிப் பண்ணை வைத்துப் பெரும் பயன் அடைந்து வருகிறார்கள்.

மைய அரசும், மாநில அரசும் இணைந்து நடத்தும் இந்தத் திட்டத்தின்படி, சொந்த வீடு உள்ளவர்களுக்கு, கோழிப் பண்ணை அமைக்க வங்கிகளின் மூலமாக ரூபாய் ஆயிரம் கடன் உதவி வழங்கப்படுகிறது. இந்தப் பண்ணையை நடத்துபவர்கள் பெரும்பாலும் இதனைத் துணைத் தொழிலாகவே நடத்துகின்றனர்.


**கோழிப் பண்ணை வைத்திருக்கும் பரமசிவம்**

அவ்வை காலனியில் உள்ள 50 வயதுக்காரரான திரு பரமசிவம் அவர்களிடம் இத்திட்டம் பற்றி விசாரித்தபோது அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு.

''அரசாங்கம் 100 கோழி வாங்கிக் குடுத்துச்சுங்க! கூடாரம் கட்டுறதுக்கு 1,600 ரூபா பேங்கி மூலமா கெடைச்சிதுங்க! மருந்து, தீவனம் எல்லாம் குடுத்தாங்க! விளக்குப் போடுறதுக்காக 300 ரூபா தந்தாங்க.

''கோழிங்கள்லாம் சேர்ந்து வாரத்துக்கு 500 முட்டை இடுமுங்க. வியாபாரிங்க எங்க இடத்துக்கே நேரடியா வந்து முட்டைங்களை வாங்கிக்கிட்டுப் போறாங்க. அதுக்கு உண்டான வெலையை பேங்கியிலெ எங்க கணக்குலெ கட்டிடுறாங்க...... கொஞ்சம் கொஞ்சமா எங்கக் கடன் தொகை தீர்ந்து போயிடுமுங்க.

''இந்தத் தொழிலு எனக்குப் புதுசுதானுங்க! ஆனாலும் லாபமாத்தான் தெரியுதுங்க''



பரமசிவம் அவர்களின் குடிசையிலிருந்து சில மீட்டர் தூரம் சென்றால் அங்கே சிலர் தெருவில் அமர்ந்து பாய் பின்னிக் கொண்டிருப்பதைக் காணலாம். பாய் பின்னும் குடிசைத் தொழிலும் அவ்வை காலனியில் சிறப்பாக நடைபெறுகிறது. ஏறக்குறைய 100 பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

காலை 6 மணிக்கே பெரும்பாலும் தொழிலைத் துவக்கி விடுகிறார்கள். மாலை 6 மணி வரை பணிபுரிகிறார்கள். சாதாரணமாக ஒருவர் ஒரு நாளில் 5½ அடி நீளம் 3 அடி அகலம் கொண்ட பாய் ஒன்றுதான் பின்ன முடியும். அதிகமான சுறுசுறுப்பு உள்ளவர்களாக இருந்தால், நாள் ஒன்றிற்கு 2 பாய் வீதம் பின்ன முடியும்.

பாய்க்குத் தேவைப்படும் கோரைப் புல், ஓமலூர், சேலம் ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கிறது. தருமபுரியிலும் கோரை விற்பனை செய்யும் மண்டி ஒன்று உள்ளது. கோரைகளை விலைக்கு வாங்கி, பாய் பின்னினால் கட்டுபடியாகாது. ஆங்காங்கே இயற்கையாக விளைந்துள்ள கோரைகளை அறுத்துப் பின்னினால்தான் இலாபம் கிடைக்கும். பாய் பின்னுவதற்குத் தேவைப்படும் மற்றொரு பொருள் நூல் ஆகும். இது கற்றாழை நாரிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

ஒரு பாய் ரூ. 10க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் அசல் ரூ. 6 ஆகிறது. பாய் ஒன்றிற்கு ரூ. 4 தான் இலாபம் கிடைக்கிறது.



**பாய் பின்னும் மாதன்**

பாய் பின்னும் மாதன் தனது அனுபவத்தைக் கூறுகிறார். அதைக் கேட்போம்:

''எங்களுக்காக சங்கம் ஒண்ணு இங்கே ஆரம்பிக்கப் போறதா சொல்றாங்க. கட்டடம் ஒண்ணு கட்டிக்கிட்டிருக்கிறாங்க! அது முடிஞ்சிருச்சுன்னா, பாய்களை எல்லாம் அந்தக் கட்டடத்துக் குள்ளே போட்டு நல்லபடியா வச்சுக்குவோமுங்க.

''அதோட விவசாய வேலை இருக்கிறபோது பாய் பின்னுற வேலையை நாங்க செய்யிறதில்லிங்க! அந்த வேலை கொறஞ்சதும் இந்த வேலையை தொடங்குவோம்''.

அவ்வை குடியிருப்புப் பகுதியில் வாழ்கின்ற பெருமக்கள், சோம்பலைத் தூரத் தள்ளி விட்டு, வாழ்க்கையில் வெற்றி நடைபோடும் வாய்ப்பைப்பெற்றிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.





# அதியன் உலவிய மண்ணில் அரும்பொருட் காட்சியகம்

தருமபுரி மாவட்டம். சங்க காலத்திலிருந்தே புகழ் பெற்ற நகரம் என்பதால், வரலாற்றுச் சின்னங்கள் பல இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளன. தமிழ்ப் பற்றும் வரலாற்று ஈடுபாடும் கொண்ட ஒரு சில பெருமக்கள் இம்மாவட்டத்தில் 1973ஆம் ஆண்டில் 'தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை' என்னும் அமைப்பை உருவாக்கினர்.

தொழிற்கூடங்களுக்குத்தேவையான கச்சாப் பொருள்கள் இயற்கையாகக் கிடைப்பதை எண்ணித் தொழில் முனைவோர் மகிழ்ச்சியுறுதல் போல, வரலாற்றுத் தடயங்கள் கிடைப்பதை எண்ணி ஆராய்ச்சியாளர்கள் மகிழ்ச்சியுறுகிறார்கள். அத்தகைய மகிழ்வு தகடூர் வரலாற்றுப் பேரவையினருக்குக் கிடைத்தது. அவர்கள், தமிழ் நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினரை அணுகி தருமபுரி மாவட்டத்தில் ஆய்வு நடத்த வேண்டினர். அவர்களது வேண்டுகோளை ஏற்றுத் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் தருமபுரியில் முகாம் இட்டு ஆய்வுப்பணியைத் தொடர்ந்தனர். தகடூர் வரலாற்றுப் பேரவையினர், அவர்களுடன் சென்று நல்ல ஒத்துழைப்பை நல்கினர்.

கல்வெட்டுகள், நடுகற்கள், சிலைகள், நாணயங்கள், போர்க் கருவிகள், ஓலைச் சுவடிகள் ஆகியவை கிடைத்தன. பழங்கால வரலாற்றை உணர்த்துவதற்கு உதவி செய்த அவற்றைக் கருவூலங்களாகக் கருதி மதித்தனர் பேரவையினர்.

மாவட்டத்திலுள்ள மலைக் கோட்டைகள், தரைக் கோட்டைகள், கோயில்கள் ஆகியவற்றின் வரலாற்றுச் சேதிகளும் திரட்டப்பட்டன. மண்பாண்டங்கள், முதுமக்கள் தாழிகள், சுடுமண் பொம்மைகள் ஆகியவையும் கிடைத்தன.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் மொழிக்கு இணங்க, தாம் கண்டவற்றைத் தருமபுரி மாவட்ட மக்களும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் கண்டு மகிழ்வு பெற வேண்டும் என்னும் நோக்கம் கொண்ட பேரவையினர் அரும்பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்க விரும்பினர்;

1979 ஆகஸ்ட் திங்களில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களால் இந்த அரும்பொருட் காட்சியகம் தொடங்கி வைக்கப் பெற்றது.

சேகரிக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் அனைத்தும் காட்சியகத்தில் வைக்கப் பெற்றன. பல்வேறு தகவல்கள் பலகைகளில் எழுதப் பெற்றுச் சுவர்களில் தொங்கவிடப்பட்டன. பார்வையாளர்கள் அரும்பொருள்களைக் கண்டு செல்வதுடன், அரிய வரலாற்று உணர்வை உண்டு சென்றனர். 1979 செப்டம்பர் 15ஆம் நாள் முதல், இந்தக் காட்சியகம் தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்து வைக்கப் பெற்றிருக்கும் இதனை, தினமும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கண்டு செல்கிறார்கள். பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள், சுற்றுலாப் பயணிகள் எனப் பல்வேறு வகை மக்களையும் கவர்ந்து வரும் இக்காட்சியகம் வெள்ளிக்கிழமையைத் தனது வார விடுமுறை நாளாகக் கொண்டிருக்கிறது.

பழங்கால வாழ்வு முறையை—கலைமணத்தை, போர்க்குணத்தை இந்த அருங்காட்சியகத்தில் காணப்பெறும் 'எச்சங்களால்' உணர்ந்து கொள்ள முடிகிறது.

— சுந்தர்

## தருமபுரி மாவட்டத்தில் காணத்தகுந்த சுற்றுலா இடங்கள்!

- ஒகேனக்கல் அருவி
- தீர்த்தமலை
- அனுமன் தீர்த்தம்
- தூவல் அருவி
- தருமபுரி கோட்டைக் கோவில்
- திப்புசுல்தான் மண் கோட்டை
- ராயக்கோட்டைச் சோலை சூழ்ந்த கிருஷ்ணகிரி அணை
- கிருஷ்ண தேவராயர் கோட்டை உள்ள சையத் பாஷா மலை
- காவேரிப் பட்டணத்தில் உள்ள தட்டக்கல், நெடுங்கல்.
- அஞ்செட்டி யானைக் காடு
- லிட்டில் இங்கிலாந்து எனப்படும் தளி.
- ஓசூர் சந்திர சூடேஸ்வரர் கோவில்



ஒகேனக்கல்லில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir

பதிவு எண். M. 8676



